www.padippakam.com

# புதிய ஜனநாயகம்

மார்க்சிய - லெனினிய அரசியல் ஏடு
16-31 ஜனவரி '91 5/6 விலை ரூ.2.00



80 - 90
பத்தாண்டுகளின்
பலன் யாருக்கு?



www.padippakam.com

# கரும்பு விவசாயிகளைச் சாறுபிழியும் அதிகாரி

விவசாயிகள் இரவு, பகல், வெயில், மழை, புயல் பாராமல் அல்லல் பட்டு உற்பத்தி செய்து குவித்தாலும் வாழ்க் கைக்கான போராட்டம் ஓயாமல் கால்வயிறு அரைவயிறு நிரப்பி காலச்சக்கரத்தோடு ஓடிக் கொண்டிருக்கிறார்கள். அட்டை போல் இவர்களது வாழ்வோடு ஒட்டிக் கொண்டிருக்கும் அதிகாரிகள், லஞ்சம், மோசடி... என சிறிது சிறிதாக விவசாயிக ளின் உடம்பில் ஒட்டிக் கொண்டிருக்கும் ரத் தத்தையும் உறிஞ்சிக் குடிக்கிறார்கள். ஊர ணிபுரம் கரும்பு கோட்ட அலுவலகத்தில் கரும்பு உதவியாளராக பணிபுரியும் அதி காரி டி.அய்யப்பன் இதற்கு ஒரு எடுத்துக் காட்டு.

400 ஏக்கர் வரை கரும்பு சாகுபடியும், 30 ஏக்கர் வரை விதைக்கரும்பு சாகுபடியும் நடந்து வரும் ஊர் ஊரணிபுரம். குருங்குளம் சர்க்கரை ஆலையிலிருந்து கரும்பு உற்பத்தி யாளருக்கு ஆண்டிற்கு ஒரு ஏக்கருக்கு 50 கிராம் பாவிஸ்டின் மருந்து இலவசமாகவும், ஒரு கிலோ அட்ரோபின் அல்லது அல்ட்ரா சின் மருந்து மான்ய விலையிலும், ஒரு 'டன்' கரும்பிற்கு அரைகிலோ சர்க்கரை கட் டுப்பாட்டு விலையிலும் வழங்கப்படுகிறது. இவற்றை விவசாயிகள் வாங்கிக் கொண்ட தாக கணக்கு காட்டி அனைத்தையும் சுருட் டிக் கொள்கிறார் அய்யப்பன். ஆலையிலி ருந்து விவசாயிகளுக்கு அன்பளிப்பாக கொடுக்கும் 'லெதர்பேக்'கையும் இவர் விட்டு வைக்கவில்லை.

விதைக்கரும்பை விவசாயி வாங்கும் போது 4 டன்னிற்கு தான் ஆலை அனுமதி எனில் நடைமுறையில் 1 டன் கூடுதலாக தேவைப்படும். இந்த ஆலைக்கு விதைக்க ரும்பை விற்கும் விவசாயிடமிருந்து கூடுத லாக வாங்கிக் கொடுக்கிறார் அய்யப்பன். இந்த ஒரு 'டன்' விதைக்கரும்புக்குரிய பணத்தை விற்ற விவசாயிக்கு கொடுக்க மாட்டார். இதில்தான் கணிசமான தொகையை இவர் சுருட்டுகிறார்.

ஆலைக்கரும்பு மற்றும் விதைக்கரும்பு போடவும், வெட்டவும் லஞ்சம் வாங்குவ



தோடு தமக்கு வேண்டியவர்களுக்கு சலுகை செய்வதும் இவரது வாடிக்கை. கரும்பு உற் பத்தியாளர்களின் வங்கி கணக்கு புத்த கத்தை இவரே வைத்துக் கொண்டு வங்கிச்ச லானில் பாமர விவாயிகளை ஏமாற்றி கையெழுத்து வாங்கியும், பொய் கையெ ழுத்து போட்டும் பணத்தை எடுத்துக் கொள் கிறார்.

இதுவல்லாமல் இவரின் மோட்டார் சைக்கிளுக்கு விவசாயிகள் செலவில் பெட் ரோல் போட்டுக் கொண்டு, ஆலை வழங் கும் (மாதம்) 15 லிட்டர் பெட்ரோல் பணத்தை முழுங்கிக் கொள்கிறார். இவரு டைய வாகனத்திற்கு தேவையான டயர், ட்யூப் மற்றும் பணிமனைச் செலவுகள் முதல் வீட்டுக்குத் தேவையான நெல், அரிசி, உளுந்து வரை அனைத்தையும் விவசாயி களை நிர்பந்தித்து வாங்கிக் கொள்கிறார்.

இப்படி விவசாயிகளை ஏமாற்றி கொள்ளையடித்து மதுரை டவுனில் இரண்டு வீட்டுமனை வாங்கி சொகுசு வீடுகட்டி வரு கிறார். தமது கொள்ளைக்கு வசதியான இப் பகுதியிலிருந்து ஆலை பகுதிக்கு மாற்ற லான உத்தரவை ஆளுங்கட்சி உதவியோடு ரத்து செய்து மீண்டும் இப்பகுதிக்கே வந்து விட்டார். இது குறித்து ஆலை நிர் வாகத்திற்கும், அரசுக்கும் பல முறை புகார் கள் அனுப்பியும் கிணற்றில் போட்ட கல்லா கத்தான் நடவடிக்கை உள்ளது. எனவே, இக் கொள்ளைக்காரனை அடித்து விரட்ட அணி திரளும்படி விவசாயிகள் மத்தியில் திரு வோணம் வட்டார விவசாயிகள் விடுதலை முன்னணி பிரச்சாரம் மேற்கொண்டு வருகி றது.

# இந்து மதவெறிக்கெதிராக



பற்றி படர்ந்து வரும் இந்துமத வெறி அபாயத்தை சுட்டிக்காட்டி மதவெறி யர்களுக்கு எதிராக விழிப்புறும்படி - அணி திரளும்படி மக்களை அறைகூவியழைக்கின் றன புரட்சிகர அமைப்புகள். தமிழகமெங் கும் நடந்துவரும் இப்பிரச்சாரத்தின் தொடர்ச்சியாக...

திருச்சி யில் ம.க.இ.க. சார்பாக தட்டி, பிரசுரம், சுவரெழுத்து, தெருமுனைக் கூட் டங்கள், ஊர்வலம் பொதுக்கூட்டம் என சென்றமாதம் தொடர்ச்சியாக பிரச்சாரம் மேற்கொள்ளப்பட்டது 19-12-90 அன்று உறையூர் கடைவீதியில் எழுச்சிமிகு பொதுக்கூட்டமும். 20-12-90 அன்று சிந்தா மணி அண்ணாசிலையில் இருந்து ஊர்வல மும், ஊர்வலத்தின் இறுதியில் எடத்தெரு அண்ணாசிலையில் பொதுக்கூட்டமும் நடத் தப்பட்டது. தோழர்கள் தமிழ்மணி, காளியப் பன், கதிரவன் ஆகியோர் உரையாற்றினர். இரு பொதுக்கூட்டத்திலும் 500க்கும் மேற் பட்டவர்கள் கூடி, பெருவாரியாக நன்கொ டையளித்து ஆதரவு தந்தனர்.

பட்டுக்கோட்டையில்இந்து மதவெ றிக்கு எதிராக நகரெங்கும் வி.வி.மு. எழு திய சுவரெழுத்தை ஆர்.எஸ்.எஸ்.விடலை கள் சேற்றை பூசி அழித்து அட்டூழியம் செய் தனர். இதனை அம்பலப்படுத்தி தொடர்ச்சி யாக சுவரெழுத்து, துண்டு பிரசுரம், தெருமு னைக் கூட்டங்கள் வாயிலாக பிரச்சாரம் எடுக்கப்பட்டது. 2-11-90 அன்று மதவெறி எதிர்ப்பு கூட்டத்திற்கு அனுமதி தர மறுத்தது, அதிரை போலீசு. தடையை மீறி கூட்டம் நடத்த முற்பட்ட தோழர்களை கைது செய்து பிறகு அன்று இரவு விடுவித்தது. மதவெறி கும்பலுக்கு துணைபோன போலீசை கண் டித்து சுவரொட்டி ஒட்டப்பட்டதால் மக்கள் மத்தியில் அம்பலமான போலீசு, பிறகு அனு மதி தந்தது. 30-11-90 அன்று அதிரை பேருந்து நிலையத்தில் பொதுக்கூட்டம் நடத்தப்பட்டது. மேலும், மல்லிப் பட்டினம், முத்துப்பேட்டை ஆகிய ஊர்களி லும் பிரச்சாரம் மேற்கொள்ளப்பட்டது.

**உத்தமபாளையம்** முழுவதுமாகத் தட்டி, தெருமுனைக் கூட்டங்கள், பொதுக்கூட்டம் வாயிலாக வி.வி.மு. பிரச்சாரம் மேற்கொண் டது. அதிகாரிகளை திட்டக் கூடாது. தனிந பரை தரக்குறைவாகப் பேசக் கூடாது என் றெல்லாம் மிரட்டிய பின் பொதுக்கூட்டத் திற்கு அனுமதியளித்தது போலீசு. அச்சகத் தாரையெல்லாம் மிரட்டி பிரசுரம் அடிக்க விடாதபடி பீதியூட்டியது. இருப்பினும் பகுதி மக்களின் பெருவாரியான ஆதரவு டன் பொதுக்கூட்டம் கம்பம் நகரில் 14-12-90 அன்று சிறப்பாக நடத்தப்பட்டது.

நெய்வேலி மாவீரன் நேத்தாஜி சுபாஷ் சந்திரபோஸ் திருமண மண்டபத்தில் 26-12-90 அன்று இந்தி - இந்து - இந்தியா என்ற அரங்கக் கூட்டம் தொழிலாளர் பிரச் சாரக்குழு சார்பாக நடத்தப்பட்டது. ம.க. இ.க. மாநிலச் செயலர் தோழர் மருதையன் மதவெறியர்களின் கோரமுகத்தை தெளி வாக படம் பிடித்துக் காட்டி உரை நிகழ்த்தி னார்.

**சென்னை:** ம.க.இ.க. 25.12.90 அன்று வில் லிவாக்கத்தின் எல்லா தெருக்களிலும் ஊர்வ லமாகச் சென்று தெருமுனைப் பிரச்சாரம் செய்தது. 3 பெண் தோழர்கள் உட்பட 15 பேர், பாடல் பாடியும் மதவெறி அமைப்பு களை அம்பலப்படுத்தி பேசியும் பிரச்சாரம் செய்தனர். பகுதி மக்கள் வரவேற்று பெரு வாரியாக நன்கொடையளித்து ஆதரித்த னர். மேலும் தட்டி, சுவரெழுத்துப் பிரச்சார மும் செய்யப்பட்டது.



படிப்பகம்

www.padippakam.com

புதிய
ஜனநாயகம்

மார்க்சிய - லெனினிய
அரசியல் ஏடு

ஆறாம் ஆண்டு

5

16 - 31 ஜனவரி'91

தனிஇதழ் ரூ.2
ஆண்டுச்சந்தா
உள்நாடு ரூ.48
வெளிநாடு 11

அனைத்துக்
தொடர்புகளுக்கும்

எஸ்.மதியழகன்
ஆசிரியர்
புதிய ஜனநாயகம்
21, பாலாஜிசிங் தெரு,
சைதாப்பேட்டை
சென்னை-15.

# போர்முனையில் ஆதிக்கவெறியன் அமெரிக்காவும் ஆக்கிரமிப்பாளன் ஈராக்கும்

அமெரிக்கா மற்றும் அதன் கூட்டு நாடுகளுக்கும் ஈராக்குக்கும் இடையிலான வளைகுடாப் போரைத் தடுப்பதற்கான, குறைந்தபட்சம் தள்ளிப்போடுவதற்கான இறுதிநேர முயற்சிகள் நடக்கின்றன. ஆனால் அதிசயம் ஏதாவது நிகழ்ந்தால் ஒழிய போர் மூளுவதும் பெரும் அழிவு நிகழ்வதும் நிச்சயமாகிவிட்டது. சமாதானத் தீர்வு காண்பதற்காக உலகின் பல்வேறு அரசுகளும், தலவர்களும், சர்வதேச நிறுவனங்களும் விடுத்த வேண்டுகோள்களும் சமரச முயற்சிகளும் பலிக்கவில்லை. அரசு தந்திரத்துறை நிர்பந்தங்கள், இரகசிய பேரங்கள் மூலமாக ஏற்பாடு செய்து, ஜெனிவாவில் அமெரிக்க, ஈராக் அமைச்சர்களுக்கிடையே நடந்த நேரடிப் பேச்சுவார்த்தையும் முறிந்து போய்விட்டது. ஈராக் ஆக்கிரமித்துள்ள குவைத்தில் இருந்து வெளியேறாவிட்டால் போர் தொடுப்பதற்கு ஐ.நா. சபை விதித்திருந்த கெடு (ஜனவரி - 15) முடிவடையும் தருவாயில் மீண்டும் ஒரு சுற்று இறுதி முயற்சியில் உலகத்தலைவர்கள் இறங்கியுள்ளனர்.

சூடு பறக்கும் அரசுதந்திரத்துறை நடவடிக்கைகள் ஒருபுறம் நடக்கும்போதே எந்தநேரமும் போரில் குதிப்பதற்கு இருதரப்புமே தயார்நிலையில் பரபரத்துக் கொண்டிருக்கின்றன. இருதரப்புமே பிடிவாதமாகப் போர் - அழிவுப்பாதையில் வலிந்து நிற்கும் அதே சமயம் விரைவான தீர்வு காண்பதற்கான நிர்பந்தங்களும் வளர்கிறது. உலக அளவிலும் அமெரிக்காவிலும் போருக்கான ஆதரவு குறைந்து வருகிறது. 4 லட்சத்துக்கும் மேற்பட்ட துருப்புக்களையும், அதிநவீன ஆயுத, தளவாடங்களையும் அரபுப்பாலைவனத்தில் நிறுத்தியிருக்கிறது, அமெரிக்கா. அதன் பெரும் பொருளாதாரச் சுமை, (நாளொன்றுக்கு 100 கோடி ரூபாய்), போரின் அழிவுகள் குறித்து பெரிதும் கவலையும் அச்சமும், பீதியும் வெறுப்பும் அடைந்துள்ளனர், அமெரிக்க மக்கள்.

என்னதான் ஈராக்கின் இராணுவ சர்வாதிகாரி சதாம் உசைன் வீரசவடால் அடித்து வந்தாலும் உலகப் பொருளாதார முற்றுகையினாலும் உள் முரண்பாட்டாலும் அந்நாடும் ஆட்டங்கண்டுவிட்டது என்பதே உண்மை. இதுவரை ஈராக் பிடித்து வைத்திருந்த மேலைநாட்டுப் பணயக் கைதிகளையும் பெரும்பாலும் விடுவிக்கும்படி நிர்பந்திக்கப்பட்டு பணிந்தது. வெளிஉலகுடன் தொடர்பு கொள்வதற்கிருந்த ஒரே வழியான ஜோர்டானும் எல்லையை மூடிவிட்டது. ஏற்கனவே போதிய மருந்துகளின்றி 4,500 ஈராக்கியர் மாண்டு போயினர். போர் பீதி, முரண்பாடு காரணமாக ஒரு துணைத் தளபதியும், ஆறு விமானப்படை அதிகாரிகளும் அமெரிக்கத் தரப்பிடம் தஞ்சம் புகுந்து இராணுவ இரகசியங்களைத் தெரிவித்துள்ளனர். சதாமுக்கு எதிரான ஆட்சிக் கவிழ்ப்பு முயற்சி - சதியும் வலுத்து வருகிறது.

இத்தனையையும் மீறி இரண்டு தரப்புமே தமது ஆதிக்க - ஆக்கிரமிப்பு யுத்தவெறியை நியாயப்படுத்த சில வாதங்களை ஆரம்பம் முதலே கூறிவருகின்றன. பாசிச - இராணுவ சர்வாதிகாரி சதாம் உசைனால் வளைகுடா பிராந்தியம் முழுவதும் உள்ள நாடுகளின் ஆட்சியுரிமை - சுயாதிபத்தியம் - சுதந்திரத்துக்கு ஆபத்து வந்துவிட்டது. உயிராதாரமான எண்ணெய் வளமிக்க வளைகுடா பிராந்தியத்தில் அணுகுண்டுகளும் - கொடிய நச்சு இரசாயன ஆயுதங்களும் குவித்துவைத்துள்ள ஈராக் சர்வாதிகாரி இட்லருக்குப் பிறகு உலகின் மிகப்பெரிய எதிரியாகிவிட்டார்; எனவே மரண அடிகொடுத்து அழித்துவிட வேண்டும் - என்பது அமெரிக்காவின் வாதம். பாரம்பரியமாக ஈராக்கின் ஒரு பகுதியாக இருந்த குவைத்தை பிரிட்டிஷ் ஏகாதிபத்தியமே சதிசெய்து தனிநாடாக்கியது; குவைத்தை ஆண்ட அரசு குடும்பம் ஈராக்கின் எண்ணெயைத் திருடியது; அரபுநாடுகளுக்கிடையிலான உள்விவகாரங்களில் தலையிட அமெரிக்காவுக்கு என்ன உரிமை, யோக்கியதை இருக்கிறது; அதுவே இஸ்ரேலை எடுபிடியாகக் கொண்டு பாலஸ்தீனத்தை ஆக்கிரமித்துக் கொண்டுள்ளது; எனவே இது உலக ஆதிக்க - ஆக்கிரமிப்பு ஏகாதிபத்தியத்துக்கு எதிரான இஸ்லாமியப் புனிதப்போர் - என்பது ஈராக்கின் வாதம்.

இரண்டு தரப்புமே எதிராளியின் ஆதிக்க - ஆக்கிரமிப்பு - யுத்தக் குற்றங்களை ஆதாரமாக வைத்து பேரழிவை ஏற்படுத்தும் போரிலே இறங்குகின்றன. போர் மூளுமேயானால் அதன் நீண்டகால, குறுகிய கால பாதிப்புகள்; விளைவு - வீச்சு குறித்த மதிப்பீடுகளில் யுத்த வல்லுநர்கள் ஈடுபட்டுள்ளனர். ஈராக்கைத் தாக்கினால் உலகப்போர் வெடிக்கும் என்று சதாம் மிரட்டி வந்தபோதும் ஈராக் பெரும்பாலும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளதால் அது உலகப்போராக இராது. ஆனாலும் வளைகுடா - மேற்கு ஆசியா தழுவியதாக இருக்கும்; பாலஸ்தீன் - இஸ்லாம் பயங்கரவாத அமைப்புகளால் உலகின் பல நகரங்களிலும் பயங்கரவாதத் தாக்கல்கள் இருக்கும்; உலகப்போர் அளவுக்கு அழிவுகள் ஏற்படும். எண்ணெய் வளமிக்க வளைகுடாப்போர் ஆதலால் பலநாடுகளது, உலக முழுவதுமான பொருளாதாரம் பாதிக்கப்படும். ஈராக்கும் பல அதிநவீன ஆயுதங்களைப் பெற்றிருப்பதால் அமெரிக்காவுக்கும் இழப்புகள் குறைவாக இராது; முதல்தாக்குதலிலேயே, ஒரு சில நாட்களிலேயே 20,000 அமெரிக்கர் பலியாவர்; நவீன ஆயுதங்களது அழிவுகளுக்கு ஈடுசெய்யும் மருத்துவ - எச்சரிக்கை - தடுப்புவசதிகள் கூடக்கிடையாது; ஈராக் பேரழிவுக்குள்ளாகும்; சதாம் இதோடு ஒழிந்து போவார். ஏற்கனவே கடும் பொருளாதார நெருக்கடியில் சிக்கியுள்ள அமெரிக்காவும், கூடவே உலகநாடுகள் பெரும்பாலும் பத்தாண்டுகள் பின்னுக்குத் தள்ளப்படும்.

இவ்வளவையும் மிகத்தெளிவாகவும் யுத்தம் இரண்டு தரப்புக்குமே சாதகமாயிராதெனவும் அறிந்திருந்தும் அவை அழிவுப்போரில் வலிந்து நிற்கின்றன. இந்த நூற்றாண்டின் மிகப்பெரிய கொடிய மேலாதிக்கவாதியும் ஆக்கிரமிப்பு யுத்தவெறியனுமான அமெரிக்கா அந்த நிலைக்கு வந்துள்ள சாவலாக ஈராக்கைக் கருதுகிறது. தன் சொந்த நாட்டு குர்தீஷ் இன மக்களை இரசாயனக் குண்டுகள் வீசிக்கொன்றும், ஈரானுக்கு எதிராக ஏகாதிபத்திய ஆதரவுடன் எட்டாண்டுப்போர் நடத்தியும், குவைத்தை ஆக்கிரமித்தும் ருசி கண்டுவிட்ட ஈராக் வளைகுடா - மேற்கு ஆசியப் பிராந்தியத்தில் தனது ஆதிக்கத்தை நிலைநிறுத்தும் கனவு காண்கிறது. இரண்டு தரப்புமே வலிந்து முன்தள்ளும் இந்த ஆக்கிரமிப்பு - அநியாய - ஆதிக்க யுத்தவெறி உலகநாடுகள், மக்கள் அனைவருக்கும் எதிரானது. யுத்தத்தின் விளிம்பில் அவர்களை நிறுத்தி, ஆதிக்க சூதாட்டம் நடத்தும் அமெரிக்கா - ஈராக் இரண்டையுமே எதிர்த்து வீழ்த்துவதுதான் நியாயமானது.

படிப்பகம்

www.padippakam.com

# பத்தாண்டுகளில் வலுத்தோர் கொழுத்தனர் உழைத்தோர் மெலிந்தனர்

**ஆட்சிகள் மாறுகின்றன. புதுப்புதுக் கட்சிகளும் கூட்டுக்களும் உருவாகின்றன; கலைகின்றன. மண்டல் அமலாக்கம், மசூதி - கோவில் விவகாரம், பஞ்சாப் - காஷ்மீர் - அசாம் பிரச்சினைகள் என நாடு அலைக்கழிக்கப் படுகிறது. இத்தனைக்கும் மத்தியில் உற்பத்தியும் தொழிலும் - மக்கள் வாழ்வும், அதே திசையில்தான் போகின்றன. கொள்ளை லாபம்,செல்வச் செழிப்பில் ஒரு மேட்டுக்குடி. வறுமையிலும் பட்டினியிலும் ஏழை, எளிய மக்கள். இரண்டு நாடு. இடைவெளி அகன்றுகொண்டே போகிறது.**

பத்தாண்டுகளின் புத்தாண்டு! ஓட்டுக் கட்சித் தலைவர்கள், சினிமா நடிகைகள், மதத் தலைவர்கள், பிரபல ஜோதிடர்கள், குப் பென்று மக்களை சூழ்ந்து கொண்டனர். அரசு பிரச்சார சாதனங்கள், பத்திரிக்கைகள் மூலம் மக்களுக்கு நல்லாசிகளையும் வாழ்த்துக்க ளையும் வழங்கினார்கள். தொப்பையை தடவிக் கொண்டு 'எல்லோ ரும் ஓர் குலம், எல்லோரும் ஓர் நிறம்' என்று உபசரித்தார்கள்.

### இருவேறு உலகம்!

தரகு முதலாளிகள் பண்ணை அரண்மனைகளிலும், ஐந்து நட் சத்திர ஓட்டல்களிலும் புத்தாண்டை கொண்டாடி மகிழ்ந்தனர். மேட் டுக் குடிகளும் அவர்களது குலக் கொழுந்துகளான 'டீன் ஏஜ்' அசடுக ளும் நகரங்களின் அரையிருட்டில் 'ஹேப்பி நியூ இயர்' நடனங்களை ஆடிக் கொண்டாடின.

ஆனால், கிராமங்கள் மட்டும் சோர்வுடன் வாழ்வுக்கான போராட்டத்தில் மூழ்கிப் போய் இருந்தன. ஆளும் கும்பல்கள் புத் தாண்டில் ஆளுயர 'கேக்' வெட்டி உண்டு மகிழ்ந்தன. விவசாயிகள் அரை வயிறு சோற்றுக்கும் வழியில்லாமல் தங்கள் மனைவி குழந்தை களுடன் விஷம் குடித்து இறந்தனர்.

பல புத்தாண்டுகள் பிறந்தது! ஆட்சிகள் பல மாறியது! ஆனால், இந்த அவலம் மட்டும் மாறவேயில்லை! மேலும் மேலும் பெருகிக் கொண்டே போனது; கடந்த 10 ஆண்டுகளில் மிகவும் கூர்மைய டைந்தது!

### அவலத்தின் காரணம்!

நெருக்கடி ஆட்சி தோல்விக்கு பிறகு தனது போலி சோசலிச முகமூடியை கழற்றியெறிந்தார் பாசிச இந்திரா! ஒன்றரை ஆண்டு கால ஜனதா ஆட்சியைக் கவிழ்த்துவிட்டு '80களில் மீண்டும் ஆட் சிக்கு வந்தார். தன்னுடைய ஆட்சியை பாதுகாத்துக் கொள்ள ரஷிய சார்பை பின்னுக்குத் தள்ளி அமெரிக்கா மற்றும் மேற்கத்திய ஏகாதி பத்தியங்களை தழுவிக் கொண்டார். ஏகாதிபத்திய தேவைகளுக் கான உற்பத்தி மற்றும் அவைகளின் ஐந்து நட்சத்திர கலாச்சார நுகர் பொருளுக்கான சந்தையாகவும் இந்தியாவை சீரழித்தார்.

இதனால் என்றுமில்லாத அளவு இந்திய பொருளாதாரத்தில் விவசாயமும் கிராமப் புறங்களும் புறக்கணிக்கப்பட்டன. பஞ்சாப் போன்று ஆங்காங்கு உருவாக்கப்பட்ட பசுமைப் புரட்சி திட்டங்க ளும் ஏற்றுமதிக்கான பணப்பயிர் சாகுபடி பகுதிகளாக மாற்றப்பட் டன. 'ஏற்றுமதிக்கான உற்பத்திக்கே அனைத்து உரிமைகளும் சலுகை களும்' என்பது அரசின் சட்டப்பூர்வ கொள்கையாக அறிவிக்கப்பட் டது.

விளைவு, ஏற்றுமதிக்கான தொழில் விவசாய உற்பத்தியில் ஈடு பட்ட தரகு அதிகார முதலாளிகளின் இலாபம் 100%, 200%, 400% என்று உயர்ந்து கொண்டே போனது. நாட்டின் பெரும்பான்மையான உழைப்பாளி மக்களின், குறிப்பாக விவசாயிகளின் வாழ்வு தரகு முதலாளித்துவ நிலப்பரபுத்துவ அரசால் கொடூரமாக குறையாடப் பட்டது!

உதாரணத்திற்கு '80 ஆம் ஆண்டிலிருந்து '90 ஆம் ஆண்டு வரை இந்தியாவை ஆட்டிப் படைத்த 20 தரகு அதிகார முதலாளித் துவ கும்பலின் சொத்துக்கள் எப்படி ஊதி பெருகியது என்பதைப் பாருங்கள்! ரூபாய் கோடிகளில்!

| பெயர் | 1951 | 1981 | 1988 |
|---|---|---|---|
| டாட்டா | 151.60 | 1,840 | 5,559 |
| பிர்லா | 65.25 | 1,692 | 5,564 |
| ரிலையன்ஸ் | — | 271 | 2,033 |
| ஜே.கே. | 10.14 | 520 | 1,566 |
| தாபர் | 8.63 | 430 | 1,317 |
| மபத்லால் | 16.77 | 535 | 1,131 |
| பஜாஜ் | — | 215 | 954 |
| எல். & டி | — | 220 | 931 |
| மோதி | — | 242 | 903 |
| ஸ்பிக் | — | 44 | 867 |
| இந்துஸ்தான் லீவர் | — | 247 | 775 |
| டி.வி.எஸ். | — | 227 | 767 |
| ஏ.சி.சி. | — | 343 | 759 |
| ஸ்ரீராம் | 14.26 | 269 | 685 |
| பென்கர் | 9.06 | 281 | 652 |
| லால்சந்த் | 33.59 | 202 | 592 |
| ஐ.டி.சி. | — | — | 567 |
| ஐ.சி.ஐ. | — | 338 | 537 |
| கிர்லோஷ்கர் | 2.27 | 278 | 518 |
| யூ-பிரேவரீஸ் | — | — | 489 |

1989 மற்றும் 1990 ஆம் ஆண்டு கணக்குகளின்படி முதல் 10 இடத்தில் உள்ள இந்தியத் தரகு அதிகார முதலாளித்துவ தனித்தனி நிறுவனங்களின் சொத்து - கோடிகளில்!



படிப்பகம்

www.padippakam.com

| பெயர் | 1989 | 1990 |
|---|---|---|
| டிஷ்கோ (TISCO) (டாட்டா) | 1413.26 | 2286.65 |
| ரிலையன்ஸ் (அம்பாணி) | 2123.65 | 2203.11 |
| கிரேசிம் (பிர்லா) | 647.08 | 1875.00 |
| எச்.டி.எப்.சி. | 1056.18 | 1385.60 |
| லார்சன் & ட்யூப்ரோ | 786.56 | 1158.00 |
| 'டெல்கோ' (டாட்டா) | 736.37 | 971.97 |
| 'இந்தோ கல்ப் பெர்ட்' (பிர்லா) | 574.08 | 770.60 |
| ஜெய்பிரகாஷ் இந்த் (கௌர்) | 380.67 | 737.95 |
| 'ஸ்பிக்' | 664.33 | 658.59 |
| 'டாட்டா செம்' | 514.35 | 649.72 |

1989 மற்றும் 1990 ஆம் ஆண்டு கணக்குகளின்படி முதல் 10 இடத்தில் உள்ள இந்திய தரகு அதிகார முதலாளித்துவ நிறுவனங்களின் லாபம் - கோடிகளில்!

| பெயர் | 1989 | 1990 |
|---|---|---|
| டிஸ்கோ (TISCO) | 273.98 | 294.62 |
| ரிலையன்ஸ் | 221.55 | 252.47 |
| 'டெல்கோ' | 128.28 | 197.20 |
| 'பஜாஜ் ஆட்டோ' | 97.31 | 163.57 |
| 'கிரேசிம்' (பிர்லா) | 92.27 | 128.33 |
| 'சென்ட்சுரி டெக்ஸ்' (பி.கே.பிர்லா) | 57.10 | 120.80 |
| இந்தியன் அலுமினியம் (பன்னாட்டு நிறுவனம்) | 37.42 | 106.10 |
| இந்த் லீவர் (பன்னாட்டு நிறுவனம்) | 93.99 | 105.08 |
| 'இந்தால் கோ' (பிர்லா) | 41.60 | 104.06 |
| லார்சன் & ட்யூப்ரோ | 71.33 | 103.57 |

## ஆறு பெரும் தரகு முதலாளிகள்



டாடா



பிர்லா



அம்பாணி



ஜே.கே.



தபார்



மபத்லால்

இவையில்லாமல் ரூ.500 கோடிக்கு கீழ் சொத்து மதிப்புள்ள சுமார் 150 தரகு அதிகார முதலாளித்துவ நிறுவனங்கள் ஒவ்வொன்றும் லாபமாக மட்டும் ஆண்டொன்றுக்கு ரூ.10 கோடியிலிருந்து ரூ.50 கோடிவரை சம்பாதிக்கின்றன.

### வெற்றியின் ரகசியம்!

இவையெல்லாம் ஏதோ தனிதனித் தரகு அதிகார முதலாளித்துவ நிறுவனங்களுக்கு சொந்தமானது அல்ல! இவையெல்லாம் இந்தியாவை ஆட்டிப்படைக்கும் 20 தரகு அதிகார முதலாளித்துவ குடும்பங்களுக்கு 'ஏதோ ஒரு வகை'யில் சொந்தமானவை! அல்லது அதன் பிடியில் கட்டுப்பட்டிருப்பவை!

ஆலையே இல்லாமல் பல்வேறு தொழில் பெயர்களில் பெயருக்கு ஒரு சில அலுவலகங்களை மட்டும் நடத்திக் கொண்டு இருப்பவை. இல்லாத ஆலைகளுக்கு பல்வேறு இயந்திரங்களையும் மூலப்பொருட்களையும், தொழில் நுட்பங்களையும் இறக்குமதி செய்வதாக போலி ஆவணங்கள் மூலம் அரசை ஏமாற்றுகின்றன.

இதன்மூலம், 'கோட்டா', 'லைசென்ஸ்', 'பர்மிட்', மற்றும் வரி விலக்கு, சலுகை மான்யம், வங்கி கடன் என்று அரசிடம் பல நூறு கோடி ரூபாய் பெற்று சட்ட விரோதமாக முதலீடு செய்கின்றனர்.

மேலும், மூலதன சேகரிப்பு என்று அரசு அனுமதியுடன் பங்கு கடன் பத்திரங்களை மக்களிடம் விற்று பல நூறு கோடி ரூபாய்களை எளிதில் திரட்டுகின்றனர். அந்நிறுவனங்கள் சார்பாக பணத்தை எந்நேரத்திலும் தாங்கள் தருவதாக அரசுத்துறை வங்கிகள் உத்திரவாதம் அளிக்கின்றன.

'89 ஆம் ஆண்டில் மட்டும் இவ்வாறு இந்நிறுவனங்களில் சில மக்களிடம் பெற்ற பணம் ரூ.20,000 கோடி! இவ்வாறு கடன் பணத்தைக் கொண்டு மிகப் பெரும் கூட்டு பங்கு நிறுவனங்களில் வெறும் 17 சதவிகித பங்குகளை மட்டுமே வைத்துள்ள தரகு முதலாளிகள் அந்நிறுவனங்களை முழுவதுமாக கட்டுப்படுத்துகின்றனர். உதாரணம்: லார்சன் அன்டு டூப்ரோ நிறுவனத்தை அரசு நிதி நிறுவன பங்குகள் மூலம் கைப்பற்றிய அம்பாணி

### விசுவாச அரசு!

இவையல்லாமல் அரசு ஏகபோக உரிமையுடன் தரகு அதிகார முதலாளித்துவ நிறுவனங்களுக்கு செய்யும், கொள்கைப் பூர்வமான, சட்டப்பூர்வமான சலுகைகள்! உதவிகள்! இதற்கேற்ப நெகிழும் தன்மையுடைய பல்வேறு அரசு, நிதி நிறுவனங்கள், அறிவியல் உயர் தொழில் நுட்ப ஆய்வு, பயிற்சி; அரசு மையங்கள்!

**அரசின் சிவில் நிர்வாகத்தின் எந்தவொரு பிரிவை ஆராய்ந்தாலும், அது ஏதாவது ஒரு விதத்தில் தரகு அதிகார முதலாளிகளின் நலன் காக்கும் திட்டங்களை நிறைவேற்றிக் கொண்டிருக்கும். இவை அப்பட்டமாக மக்களுக்கு தெரிந்துவிடக் கூடாது என்பதற்காக அவை அதிசயமாக மக்கள் சேவையிலும் ஈடுபடுகின்றன.**

படிப்பகம்

www.padippakam.com

தரகு முதலாளிகளின் உற்பத்தி பொருட்களின் விலை நிர்ணயம் சந்தை உத்திரவாதம், விநியோக வலைப்பின்னல் உதவி; தரை, கடல், வான் வழி பொருள் போக்குவரத்துக்கு அரசு செய்து கொடுத்திருக்கும் அதிநவீன வசதிகள்; தொலைத் தொடர்பு பன்முக உதவி மையங்கள் என்று தங்க தட்டில் தரகுஅதிகார முதலாளிகளை ஏந்தி உச்சி முகர்ந்திருக்கிறது அரசு!

அரசின் சிவில் நிர்வாகத்தின் எந்தவொரு பிரிவை ஆராய்ந்தாலும், அது ஏதாவது ஒரு விதத்தில் தரகு அதிகார முதலாளிகளின் நலன் காக்கும் திட்டங்களை நிறைவேற்றிக் கொண்டிருக்கும். இவை அப்பட்டமாக மக்களுக்கு தெரிந்துவிடக் கூடாது என்பதற்காக அவை அதிசயமாக மக்கள் சேவையிலும் ஈடுபடுகின்றன. அதற்கும் கையூட்டு பெற்றுக் கொள்கின்றன! ராணுவமும் இப்படித்தான்!

## எஜமானன் உத்திரவு!

இவையல்லாமல் ஏகாதிபத்தியங்கள், உலக வங்கி, பன்னாட்டு நிதி நிறுவனங்கள் ஆகியவை தரகு அதிகார முதலாளிகளுக்கு தேவையான உதவிகள் செய்யுமாறு அரசுக்கும், ஆளுங்கட்சிக்கும் நேரடியாக உத்திரவிடுகின்றன. இதை நாம் சொல்லவில்லை! தற்போதைய பிரதமர் சந்திரசேகர், முந்தைய வி.பி.சிங் ஆட்சியின் மீது இதற்கான ஆதாரங்களை தூக்கியெறிந்து குற்றம் சாட்டினார்.

தொழில் துவங்குவதற்கான 'லைசென்ஸ்' முறையை தளர்த்துவது, மூலதனத்திற்கு தாராளமாக வழிவிடுவது. ஏகபோக மற்றும் சிறு தொழில் மூலதன வரையறையை செங்குத்தாக உயர்த்துவது, சிறுதொழில் (!) மீதான கடன் சலுகை கெடுபிடிகளை அகற்றுவது, பன்னாட்டு தொழில் நிறுவன கூட்டுகளுக்கு இருக்கும் தடைகளை நீக்குவது, அந்நிய மற்றும் தனியார் மூலதனத்திற்கு சிறப்பு சலுகைகள் மற்றும் பாதுகாப்பு கொடுப்பது, ஏற்றுமதிக்கான உற்பத்தி மையங்கள், தொழிற் கூடங்களுக்கு வசதியான இடங்களை ஒதுக்குவது! இவ்வாறான உலக வங்கியின் மையமான கட்டளைகளை வி.பி.சிங் அரசின் தொழிற்கொள்கையோடு பத்திக்கு பத்தி ஒப்பிட்டு காட்டினார் சந்திரசேகர்!

## உஸ்... உயர் தொழில் நுட்பம்!

வி.பி.சிங் அரசு 'லைசென்ஸ்' இல்லாமல் தொழில் துவங்குவதற்கான மூலதனத்தை ரூ.50. கோடியிலிருந்து 70 கோடியாக உயர்த்தியதை சுட்டிக்காட்டினார். மேலும், அதி உயர்தொழில் நுட்பம் எதையும் பன்னாட்டு நிறுவனங்கள் தரவில்லை! வளர்ந்துவரும் 'பாப்' ஐந்து நட்சத்திர கலாச்சாரத்திற்கான உடைகள், ''ஷூக்கள்'', விரைவு உணவுகள், குளிர்பானங்கள், ''ஐஸ்கிரீம்கள்'' பாவனைப் பொருட்கள், பளிங்குத் தரைக் கற்கள், லேசுரக ஊர்திகள், வண்ணப் பூச்சுகள், ஒலி, ஒளி புகைப்பட நவீன கருவிகள், சவர பிளேடுகள், இவைகளை தயாரித்து விற்கத்தான் பன்னாட்டு நிறுவனங்கள் வருகின்றன என்று ஆதாரங்களுடன் கூறினார்.

'பாட்டா', 'ப்ருக் பாண்ட்', 'காட்பரீஸ்', 'கிளாஸ்க்கோ', 'கோல்கேட்', 'பன் ஸ்கூல்' (பொம்மை) 'ஹீரோ ஹோண்டா', 'இன்டியா போட்டோகிராபிக் கோ', 'இன்டியன் ஷேவிங் ப்ராடக்ட்' 'ரெக்கிட் அன்ட் கோல்மன்' (ஷூ பாலிஸ், துணிசோப்பு!) இப்படி பட்டியலிட்டு 62 பன்னாட்டு நிறுவனங்களின் தொழில் நுட்பங்களை நாறடித்தார்! முழுமுழுக்க அந்நிய மூலதனத்தால் இயங்கும் அவைகள் எப்படி இந்திய பொருட்களாக நாமம் போட்டுக் கொண்டு அரசின் சலுகைகளை சுருட்டுகின்றன என்பதையும் விளக்கினார்.

வேடிக்கை என்னவென்றால், சந்திரசேகர் அரியணை ஏறியவுடன் காறி உமிழ்ந்த வி.பி.சிங் அரசு பாதையில்தான் பயணம் செய்கின்றார்.

## ரகசியமாக சலுகைகள்

காதும் காதும் வைத்தது போல் தரகு அதிகார முதலாளிகளுக்கு அரசு செய்யும் சிறு சலுகைகள், விதிமுறை தளர்வுகள், சிறு சட்ட திருத்தங்கள் இவற்றால் மட்டுமே இந்நிறுவனங்கள் பலநூறு கோடி ரூபாய்களை இலாபமாக அடைகின்றன.

உதாரணத்திற்கு '90 ஆம் ஆண்டில் அலுமினியத்தகடு விற்பனை மீதிருந்த கட்டுப்பாட்டை நீக்கியது அரசு. விற்பனையில் 25 வது இடத்திலிருந்த 'இன்டியன் அலுமினியம்', 'இன்டல்கோ' என்ற இரு நிறுவனங்கள் திடீரென லாபத்தில் 7 வது இடத்திற்கு பாய்ந்தன.



**அரசும், ஆட்சியாளர்களும் திட்டமிட்டு விவசாயத்தையும் கிராமப்புறங்களையும் மீளமுடியாத புதைகுழியில் தள்ளிவிட்டனர். கிராமப்புறங்களின் முதுகெலும்பை பகிரங்கமாகவும் மறைமுகமாகவும் வெட்டி சிதைத்துவிட்டனர்.**

'89 ஆம் ஆண்டில் வெறும் ரூ.21.33 கோடி மட்டுமே மூலதனமாக போட்டது 'வீடியோன்' நிறுவனம்! '90ஆம் ஆண்டில் பகல் கொள்ளைக்காரன் அம்பானியையே புறந்தள்ளிவிட்டு (லாப விகிதத்தில் 409.45 மடங்கு) முதல் இடத்திற்கு பாய்ந்து தரகு அதிகார முதலாளிகளை கலக்கியது. ஏற்றுமதி விற்பனை வருமானத்தில் அதற்கு தனி வரிச் சலுகைகள் காட்டப்பட்டதே இதற்கு காரணம்!

## மிதியடியாக விவசாயி!

மறுபுறம் இந்திய நாட்டின் முதுகெலும்பு என்று வர்ணிக்கப்படும் விவசாயி கும்மிருட்டில் புழுவாக வாழ்ந்து மடிகிறான். வாழ்க்கையில் எந்த ஒரு ஒளியும் அவன் கண்டதில்லை. வாழ்க்கையில் எந்த ஒரு இன்பமும் அவர்கள் அனுபவித்ததில்லை!

மாறாக அரசும், ஆளும் வர்க்கங்களும் தங்களுக்கு ஏற்படும் எல்லா அரசியல் பொருளாதார நெருக்கடிகள் வேதனைகள் அனைத்தையும் விவசாயிகள் மீது வரியாக சுமத்துகின்றன. நிதிப் பற்றாக்குறை என்று கூப்பாடு போட்டு விவசாயிகள் நலதிட்டங் களையும் கிராமப் புறமேம்பாடுகளையும் புறக்கணிக்கிறது.

## வாய்ப்பந்தல்!

கூலி, ஏழை விவசாயிகள், சிறு விவசாயிகள், நடுத்தர மற்றும் பணக்கார விவசாயிகள், நிலக்கிழார்கள் என்று நிலவுடமை அடிப்படையில் பிரித்து சலுகைகள், மான்யங்கள், உதவிகள் செய்வதாக அரசு கூறுகிறது.

வறட்சி வெள்ளம், பஞ்சம் ஏற்படும் காலங்களில் தேர்தல் சமயங்களில் 'விவசாயிகளுக்கு கணிசமான அளவு கடன் தள்ளுபடி' என்று அரசு பிரச்சார சாதனங்கள் காதைப் பிளக்கின்றன. இது நடைமுறையில் எந்த அளவு உண்மையோ அதே யோக்கியதையில்தான் மற்ற விவசாய நலத்திட்டங்களும் செயல்படுத்தப்படுகின்றன.

விவசாயிகளின் தோழன் என்று கூறிக் கொண்டுவந்த வி.பி.சிங் அரசு தனது பட்ஜெட்டில் வெறும் 6.75% மட்டும்தான் விவசாய துறைக்கு ஒதுக்கியது. இதுதான் நாட்டின் உயிர் மூச்சான விவசாய தொழிலை பாதுகாக்கும் லட்சணம்!

10,000 ரூபாய்க்கு மிகைப்படாத விவசாய கடன்கள் எல்லாம் தள்ளுபடி செய்வோம் என்றது. ஆட்சிக்கு வந்தபிறகு அப்பொறுப்புக்களை மாநில அரசுகளின் தலையில் சுமத்தி நழுவிக் கொண்டது. இதை அளவுகோலாக வைத்து காங்கிரசு பெருச்சாளிகளின் விவசாய கொள்கையின் பலன்களை ஓரளவு எடைபோட்டு பாருங்கள்! உண்மை விளங்கும்!

## உண்மை நிலை

நாட்டின் மக்கள் தொகையில் தொடர்ந்து வறுமைக் கோட்டுக்கு கீழிருப்பவர்கள் 45%க்கும் மேல் - கிராமப்புற விவசாயிகளிடையே இப்புள்ளி விவரம் 70% 'தேசிய' அளவில் கல்வியறிவு அற்றவர்களின் எண்ணிக்கை 60% • கிராமங்களில் 75%! அரசுக் கணக்குப்படி இந்தியாவில் வேலையற்றவர்களின் எண்ணிக்கை 320 லட்சம்! இது மொத்த மக்கள் தொகையில் 4%. கிராமப்புறங்களில் வேலையற்றவர்களின் எண்ணிக்கை 20%.

இப்படி 'தேசிய' அளவில் சுகாதாரம், சமூக நலம், நாட்டு முன்னேற்றம் என்று புள்ளி விவரங்களை எடுத்தால் கிராமப்புறங்கள் அதில் 2 மடங்கு கூடுதலாக பாதிக்கப்பட்டிருப்பது வெளியில் வருகின்றன.

பூனையை யானை மீது வந்து கொடுக்கும் ஆட்சியாளர்கள், விவசாயிகளுக்கு ஏராளமான சமூக நல திட்டங்களையும் நிலச் சீர்திருத்த சட்டங்களையும் அமுல் படுத்தியிருப்பதாக ஒவ்வொரு பட்ஜெட்டின் போதும் பேசுகிறார்கள்!



படிப்பகம்

www.padippakam.com




கொத்தடிமைத் தனத்தை ஒழிக்கவும் வேலைவாய்ப்பு உரிமை கோரியும் பழங்குடியினர் போராட்டம்

## தொடை கறி யாருக்கு?

'80 ஆம் ஆண்டுகளிலிருந்து கடந்த 10 ஆண்டுகளில் விவசாய நல்வாழ்வு மேம்பாட்டு திட்டங்களுக்காக தேசீய அளவில் மத்திய அரசு ஒதுக்கிய பணம் ரூ.25,000 கோடி! ஆனால், அதே நேரத்தில் திட்டவகை சாராத துறைகளுக்கு மைய–மாநில அரசுகள் ஒதுக்கிய பணம் ரூ.2,80,000 கோடி! இத்தொகை முழுக்க ஐந்து நட்சத்திர கலாச்சார நுகர்பொருள் உற்பத்தி. அதற்கான சலுகை, மானியங்களுக்காக செலவழிக்கப்பட்டது. இதனால், நகர தெருக்களில், மாருதிகார், ஹோண்டா, யெமாகா ஆகியன சீறி பாய்ந்தன.கடைகளில் பெப்சிகோலா பொங்கி வழிந்தது! வீட்டு கூரையின் மீது கொத்துக் கொத்தாக வானொலி 'ஆன்டனாக்கள்'!

## விவசாயிகளுக்கு நுகத்தடி!

மறுபுறம் கிராமப்புறங்களில் விவசாயம் பொய்த்துப் போனதால் விவசாயிகள் கடன் சுமை தாங்க முடியாமல், வாழ வழியில்லாமல், குடும்பம் குடும்பமாக தற்கொலை செய்துக் கொண்டனர். ஆந்திர மாநில பருத்தி விவாயிகள் நூற்றுக் கணக்கில் இறந்தனர். ஒரிசா கலகாந்தி மாவட்டத்தில் விவசாயிகள் மாங்கொட்டை மாவு, தழைகளை உணவாகக் கொண்டு பல்வேறு நோய்களுக்கு ஆளாகி மாண்டனர். குழந்தைகள் கொடூரமாக பல்வேறு நோய்களால் இறந்து போனார்கள்! விவசாய பெண்களும், குழந்தைகளும் விலைக்கு விற்கப்பட்டனர். பஞ்சம் பிழைப்பதற்காக வேண்டி நகர்ப்புறங்களுக்கு அகதிகளாக செல்வது, முடிவேயில்லாமல் தொடர்ந்தது.

## தங்கத் தட்டில் தரகு முதலாளி!

இருந்தும், அரசு விவசாயத்தையும் கிராமப்புறங்களையும், புறக்கணிக்கும் கொள்கையை குரூரமாக அமுல்படுத்தியது. ஆண்டு 'தேசிய' வருமானத்தில் வெறும் கால்பங்கு மட்டுமே பங்களிப்புச் செய்து வரும் பொதுத்துறைக்கு நாட்டின் மூலதன இருப்பிலிருந்து பாதிபங்குக்கு மேல் செலவிடுகிறது அரசு. மேலும் அவற்றின் உற்பத்திப் பொருட்களை நினைத்த நேரத்தில் விலையேற்றிக் கொள்ள பச்சைக் கொடி காட்டுகிறது! நிலக்கரி, எஃகு, பெட்ரோலியம், பொருட்கள், மின்சாரம் இவற்றின் மொத்த விலை குறியீட்டு எண் முறையே 937.1, 652.0, 647.0, 700.8 என்று அரசே விலை நிர்ணயித்து இருக்கிறது.

ஆனால், விவசாயப் பொருட்களான, கோதுமை, நெல், இவற்றுக்கு மொத்த விலை குறியீட்டு எண் முறையே 240.8, 296.3 என்று அரசு நிர்ணயித்து இருக்கிறது. வங்கிக் கடன்களில் 36 சதம் தரகு அதிகார முதலாளிகளுக்கு தருகிறது. விவசாயத் துறைக்கு வெறும் 17 சதம் மட்டுமே கொடுக்கிறது.

தரகு அதிகார முதலாளிகள் தங்கள் உற்பத்திப் பொருட்களை விலை சாதகமற்ற சூழ்நிலையில் கிடங்கிலேயே வைத்துக் கொண்டு அதன் மதிப்பைக் காட்டி வங்கிகளில் கோடிக் கணக்கில் பணம் கடன் பெறுகின்றனர். விவசாயிகளுக்கோ அவ்வசதி மறுக்கப்படுகிறது. மகசூல் காலங்களில் வர்த்தக சூதாடிகள் அற்ப விற்பனைக்கு கொள்முதல் செய்ய அரசே இப்படி வழி ஏற்படுத்திக் கொடுக்கிறது.

தரகு அதிகார முதலாளிகளின் தொழிற்சாலைகளின் உற்பத்தி திறனை உச்சபட்சம் வெளிக் கொண்டுவர நவீன தொழில் நுட்பம் அனைத்தையும், அரசு, அயல்நாட்டிலிருந்தும் உள்நாட்டிலிருந்தும் சேகரித்து சலுகை விலையில் கொடுக்கிறது. விவசாய மேம்பாட்டிற்கு உதட்டு சேவையை தவிர வேறு எதையும் செய்ய மறுக்கிறது. மண்வள பாதுகாப்பு,நீர்ப்பாசன வசதிகள், சாகுபடி நில உருவாக்கம், பயிர்ப்பாதுகாப்பு, உச்சபட்ச மகசூல் இவை எல்லாவற்றையும் அரசு ஏகபோகமாக்கிக் கொண்டு ஏற்றுமதிக்கான பணப்பயிர் செய்யும் கும்பல்களுக்கு சலுகை விலையில் கொடுக்கிறது.

தானே இயற்றியுள்ள நில உச்சவரம்பு சட்டங்கள், சுற்றுசூழல் சமன்படுத்தும் வன பாதுகாப்பு, நீர் நிலைகள் பராமரிப்பு, மண் வளப்பாதுகாப்புக்கான சுழற்சி பயிற்சிமுறை மற்றும் விவசாய கூலி நிர்ணயம் போன்ற சட்டங்களை அரசு தானே மதிக்காமல் புறக்கணிக்கிறது அல்லது மீறுகிறது.

அரசும், ஆட்சியாளர்களும் திட்டமிட்டு விவசாயத்தையும் கிராமப்புறங்களையும் மீளமுடியாத புதைகுழியில் தள்ளிவிட்டனர். மேலும், விவசாயம் மற்றும் கிராமப்புறங்களின் முதுகெலும்பை பகிரங்கமாகவும் மறைமுகமாகவும் வெட்டி சிதைத்துவிட்டனர்.

ஆக, விவசாயிகளின் வாழ்வில் ஒளிவிளக்கு பிறப்பதும் புத்தாண்டு வருவதும் அரசு மற்றும் ஆட்சியாளர்களின் வாழ்த்துக்க ளாலும், நல்லாசிகளாலும் நடக்கப் போவதில்லை! மாறாக அந்த ஏமாற்று கும்பலை அணிதிரண்டு வீழ்த்தும் நாள்தான் விவசாயிகளுக்கு நன்னாள்!

● குணசேகரன்.



படிப்பகம்

www.padippakam.com

# புலிவாலைப்பிடிக்கும் புது அரசாங்கம்

[redacted]

## பஞ்சாப் பிரச்சினைக்குத் தீர்வு - சமாதானம் ஏற்பட்டுவிடும் போல ஒரு தோற்றம் உருவாக்கப்படுகிறது. ஆனால் அது உண்மையில் இறுதி முறிவை நோக்கித்தான் விரைகிறது.

தொள்ளாயிரம் எலிகளைப் பிடித்துத் தின்றுவிட்டு பூனை புனித யாத்திரைக்குப் புறப்பட்டதாம். அது போலத்தான் பஞ்சாபில் நரவேட்டையாடும் அரசு பயங்கரவாத ஆட்சியாளர்கள் தமது குற்றங்களையும் தோல்விகளையும் மறைக்க மீண்டும் பேச்சு வார்த்தை நாடகமாடத் தொடங்கியுள்ளனர்.

சந்திரசேகர் ஆட்சிக்கு வந்ததும் சீக்கிய அரசியல் மற்றும் மதத்தலைவர்கள் கைது செய்யப்பட்டு விடுவிக்கப்பட்ட பின்னர் அனைத்து சீக்கிய அரசியல் கட்சிகளும் மத வாத அமைப்புகளும் படேகாரில் கடந்த டிசம்பர் 26 அன்று கூடி தற்காலிக ஐக்கியத்தைச் சாதித்துள்ளன. அக்கூட்டத்தில் பஞ்சாபுக்கு சுயநிர்ணய உரிமை கோரும் தீர்மானத்தை நிறைவேற்றி, சிம்ரான்ஜித் சிங் மானை தமது பிரதிநிதியாகத் தேர்வு செய்து அரசுடன் பேச்சுவார்த்தை நடத்த தீர்மானித்தனர். அதன்படி மான், சீக்கிய சமூகத்தின் சார்பாக சந்திரசேகரைச் சந்தித்து கோரிக்கை மனுவைக் கொடுத்து இந்திய அரசியல் சட்டத்தின் 51வது பிரிவின்படி பேச்சுவார்த்தை நடத்தக் கோரினார். மானை சந்தித்துப் பேசிய சந்திரசேகர் 51வது சட்டவிதிகளின் அடிப்படையில் பேச்சுவார்த்தை நடத்தப் போவதாக அறிவித்தார்.

### தேசிய வெறியர்களின் கூச்சல்

உடனே காங்கிரசு, பாரதீய ஜனதா ஆகிய ஆளும் வர்க்கக் கட்சிகளும், போலிக் கம்யூனிஸ்டுகளும் இதைக் கடுமையாக எதிர்த்தன. 'அரசியல் சட்டத்தின் 51-வது விதியானது, இந்தியா பிறநாடுகளுடன் கொண்டுள்ள உறவைப் பற்றியதாகும். எனவே அதனடிப்படையில் பேச்சு வார்த்தை நடத்தமுடியாது; வேண்டுமானால் 51-ஏ பிரிவின்படி பேசலாம்; ஆனால் அது குடிமகனின் கடமைகளைப் பற்றி விளக்குகிறது' என்று சட்டத்தை முறைகேடாக பயன்படுத்துவதாக எதிர்ப்பு தெரிவித்தனர். மேலும் சீக்கியர்கள் கோரும் சுயநிர்ணய உரிமையை ஏற்க முடியாது (அது பிளவுவாத பிரிவினைவாத அடிப்படையிலானது. தேச ஒற்றுமைக்கே எதிரானது) சீக்கியர்களின் கோரிக்கை அடிப்படையில் பேச்சு வார்த்தை நடத்துவதும், அதற்காக சட்டத்தை திருத்த முயற்சிப்பதும் மிக அபாயகரமானது; அது புனிதமான சட்டத்தையே கொச்சைப் படுத்துவதாகும் என்று எச்சரித்தனர். இதோடு ரகசிய பேச்சுவார்த்தை கூடாது; மான் கொடுத்த மனுவை பகிரங்கமாக வெளியிட வேண்டும் என்றனர்.

அரண்டு போன சந்திரசேகர், சீக்கியர்களின் கோரிக்கை பிரிவினைவாதமானது; சுயநிர்ணய உரிமையை ஒருக்காலும் ஏற்க முடியாது என்று எதிரொலித்தார். அவர், இப்போது பேச்சுவார்த்தையில் இறங்குவதற்கு, தானும் வி.பி.சிங்கைப் போல முயற்சி எடுத்ததாகக் காட்டிக் கொள்ள வேண்டும் என்பது மட்டும் காரணமல்ல; உண்மையில் பஞ்சாபில் ஆட்சியாளர்கள் கட்டவிழ்த்து விட்ட அரசு பயங்கரவாத யுத்தம் தோல்வியடைந்து விட்டது; மதவெறி பயங்கரவாதிகளின் கை மேலோங்கிவிட்டது. எனவே மாற்றுவழிகளையும் உத்திகளையும் வகுப்பதற்காக இப்போது பேச்சுவார்த்தை நடத்த வேண்டிய நிர்ப்பந்தம் ஆட்சியாளர்களுக்கு ஏற்பட்டுள்ளது.

### பஞ்சாபின் இன்றைய நிலை என்ன?

துணை ராணுவப் படைகளைக் குவித்தும், தொடர்ந்து ஊரடங்கு உத்திரவு போட்டும், ரகசிய கொலைக் குழுக்களைக் கட்டி இலக்கு வைத்து தீவிரவாதிகளை நர வேட்டையாடியும் கூட அரசு பயங்கரவாதிகளால் சீக்கிய பயங்கரவாத இயக்கத்தை அழிக்க முடியவில்லை. சீக்கிய தீவிரவாதிகள் கொல்லப்படுகிறார்கள். ஆனால் இக்கொலைகளுக்குப் பிறகு சீக்கிய பயங்கரவாதம் மேலும் வலுவடைந்து தீவிரமாகிக் கொண்டே போகிறது. சீக்கிய தீவிரவாதிகள் திடீரென கடையடைப்பு நடத்த உத்தரவிடுகின்றனர். அதன்படியே அனைத்து கடைகளும், அங்காடிகளும் மூடப்படுகின்றன. போலீசு - கோர்ட்டுகளைப் புறக்கணித்துவிட்டு உள்ளூர் பஞ்சாயத்துக்கள் மூலம் மக்கள் தமது பிரச்சனைகளைத் தீர்த்துக் கொள்ளுமாறு கோருகின்றனர். அதன்படியே தீவிரவாதிகளின் செல்வாக்குள்ள பகுதிகளில் குறிப்பாக எல்லைப்புற மாவட்டங்களில் உள்ளூர் பஞ்சாயத்துகள் மூலம் மக்கள் தமது பிரச்சனைகளைப் பேசித் தீர்த்துக் கொள்கின்றனர்.

சீக்கிய தீவிரவாதிகளின் உத்திரவுப்படி பள்ளிகளில் இந்தியில் கற்பிக்கப்படுவது தடை செய்யப்பட்டுள்ளது. அதற்குப் பதிலாக பஞ்சாபிய - குர்முகி மொழியில் கற்பிக்கப்படுகிறது. வானொலி, தொலைக்காட்சிகளில் நிகழ்ச்சிகளை பஞ்சாபி மொழியில் ஒலிபரப்புமாறு உத்திரவிட்டதைத் தொடர்ந்து இன்று அரசே இந்தியில் ஒலிபரப்புவதை நிறுத்திவிட்டு பஞ்சாபி மொழியில் ஒலிபரப்புகிறது. பஞ்சாபிலிருந்து வெளிவரும் பத்திரிக்கைகளில் தம்மை "தீவிரவாதிகள்" என்று கொச்சைப்படுத்தி குறிப்பிடக்கூடாது என்றும் "போராளிகள்" எனக் குறிப்பிடுமாறும் உத்திரவிட்டு அதைச் சாதித்துள்ளனர்.

தீவிரவாதிகளின் உத்திரவுப்படி சீக்கியப் பெண்களின் பாரம்பரிய உடையான "சால்வார் கம்மீஸ்" இன்று பள்ளிகளிலும் பிற இடங்களிலும் கட்டாய சீருடையாக்கப்பட்டுள்ளது. அது போல ஆண்கள் பாரம்பரிய உடையுடன் தாடியும் தலைப்பாகையுமாக இருப்பது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. மதுக்கடைகளும் போதைப் பொருட்களும்

சீக்கிய சமூகத்தின் பிரதிநிதி மானுடன் சந்திரசேகர் — உதட்டிலே புன்னகை; உள்ளத்திலே வஞ்சகம்.





படிப்பகம்

www.padippakam.com

ஒழிக்கப்பட்டு விட்டன. மதக் கோட்பாட்டின்படி தமது வருவாயில் பத்தில் ஒரு பங்கினை கடவுளுக்கு காணிக்கையாகச் செலுத்தவேண்டுமென்பதை தீவிரவாதிகள் கட்டாய விதியாக்கியுள்ளனர்.

### அரசு பயங்கரவாதத்தின் தோல்வி

இவற்றை மீறுவோர் சுட்டுக் கொல்லப்படுகின்றனர். அல்லது பயங்கரவாதிகளின் கருப்புப் பட்டியலில் சேர்க்கப்படுகின்றனர். சீக்கிய தீவிரவாதிகளிடமிருந்து போலீசாரால் அவர்களைக் காக்கவும் முடியவில்லை. நம்பிக்கையிழந்த அவர்கள் இப்போது தற்காப்புக்காக ஆயுதம் ஏந்துகின்றனர். மறுபுறம் தீவிரவாதிகளால் கொல்லப்படும் போலீசு துணை ராணுவப் படைகளின் எண்ணிக்கை உயர்ந்து கொண்டே போகிறது. ''ஈழப் போரில் கூட இந்த அளவுக்கு இழப்பு ஏற்பட்டதில்லை. ஆனால் உள்நாட்டுப் போரில் நாங்கள் பெருத்த இழப்புக்கு ஆளாகியுள்ளோம்'' என்று ஒப்புக் கொள்கிறார் ஒரு போலீசு அதிகாரி. எல்லைப்புற மாவட்டங்களில் தீவிரவாதிகள் இணையான போட்டி அரசாங்கம் நடத்துவதாகத்தான் இதுநாள் வரை பத்திரிக்கைகள் எழுதி வந்தன. இப்போது அந்த நிலைமை மாறி முழுவதும் அவர்கள் கட்டுப்பாட்டின் கீழ் இருப்பதாகவும், அரசு நிர்வாகம் செயலிழந்து விட்டதாகவும் அவர்களே பக்கம் பக்கமாக எழுதுகிறார்கள்.

**தம்மால் பிரச்சினைகளைத் தீர்க்க முடியாதபோது, 'அது பேச்சுவார்த்தைக்கே அப்பாற்பட்டது; பிரிவினைக்கே இடமில்லை என்பதுதான் இந்திய ஆட்சியாளர்களின் ஒரே கோட்பாடாக உள்ளது.**

தமது தோல்வியையும் குற்றங்களையும் மறைக்க சீக்கிய தீவிரவாதிகள் விதித்துள்ள கட்டுப்பாடுகளையும் அதனால் ஏற்பட்டுள்ள விளைவுகளையும் பீதியூட்டும் வகையில் ஆட்சியாளர்கள் பிரச்சாரம் செய்கிறார்கள். வீரேந்திர வர்மா - கில் ஆகிய அரசு பயங்கரவாத கும்பலை பொறுப்பிலிருந்து மாற்றி இப்போது புதிதாக மல்ஹோத்ரா - மன்காட் கும்பலை நிறுவியும், டிசம்பர் முதலாக 5 மாதங்களுக்கு இலக்கு-திட்டம் தீர்மானித்து, அரசு பயங்கரவாதத்தை விரிவு படுத்தியும் கூட ஆட்சியாளர்களால் மதவெறி பயங்கரவாதத்தை ஒழிக்க முடியவில்லை. மக்களிடம் நம்பிக்கையையும் பெற முடியவில்லை. சுய விருப்பத்தினாலும், நிர்பந்தத்தாலும் சீக்கிய தீவிரவாதிகளுக்கு மக்கள் தரும் ஆதரவு பெருகிக் கொண்டே போகிறது.

### பழைய - புதிய ஆட்சியாளர்களிடம் தீர்வு எதுவும் கிடையாது

ஆனால் பஞ்சாபுக்கு மாநில சுயாட்சி அல்லது சுயநிர்ணய உரிமை உள்ளிட்ட எந்தக் கோரிக்கையையும் ஆட்சியாளர்கள் ஏற்கத் தயாரில்லை. அரசு பயங்கரவாதத்தை ஏவி அடக்குவது அகாலிகளைப் பிளவுபடுத்தி துரோகிகளை வைத்து ஒப்பந்தம் போட்டு பொம்மையாட்சியை நிறுவி ஜனநாயகத்தை நிலைநாட்டி விட்டதாக மாய்மாலம் செய்வதைத் தவிர வேறு தீர்வு எதுவும் அவர்களிடம் கிடையாது. இத்தகைய தோல்வி கண்ட தீர்வையும் தமது கையாலாகாத் தனத்தையும் மூடி மறைக்க, 'இந்தியாவில் தேசிய இனமே கிடையாது; இந்தியர் என்ற இனம் தான் உண்டு' என அவர்கள் விதண்டாவாதம் செய்யத் தவறுவதில்லை.

தம்மால் பிரச்சினைகளைத் தீர்க்க முடியாதபோது, 'அது பேச்சுவார்த்தைக்கே அப்பாற்பட்டது; பிரிவினைக்கே இடமில்லை' என்பதுதான் இந்திய ஆட்சியாளர்களின் ஒரே கோட்பாடாக உள்ளது. பஞ்சாப் பிரச்சனை மட்டுமல்ல; காஷ்மீர் பிரச்சினைக்கும் கூட இதையே தீர்வாகச் சொல்லி கண்ணைக் கட்டிக் கொண்டு கரிக்குருவியைப் பிடிக்க முயலுகிறார்கள். இதே போல அயோத்தி

## மான் கொடுத்த மனுவில் இருப்பது இதுதான்!

*சந்திரசேகருடன் மான் பேச்சுவார்த்தை நடத்தியபோது சீக்கியர்களின் சார்பாக கொடுத்த கோரிக்கை மனுவை பகிரங்கமாக்க வேண்டும் என்று காங்கிரசு, பாரதீய ஜனதா, 'மார்க்சிஸ்டு' ஆகிய ஓட்டுக் கட்சிகள் கூச்சலிட்டன. சீக்கியர்களின் கோரிக்கை பிரிவினை அடிப்படையிலானது; நாட்டுக்கு பேராபத்து என்று காட்டி அதன்மூலம் அரசியல் ஆதாயமடையத் துடித்தனர். அடுத்த நாளே சீக்கியர்களின் கோரிக்கை மனு பத்திரிகைகளில் வெளிவந்தது. ஆனால் அது இந்திய ஆட்சியாளர்களின் அரசு பயங்கரவாத அடக்குமுறையையும் காட்டுமிராண்டித் தனத்தையும் தோலுரித்துக் காட்டிவிட்டது.*

*சீக்கியர்களின் சார்பாக மான் அளித்த மனுவின் சாராம்சம் இதுதான்:*

*இந்திய மக்களின் சுதந்திரத்திற்கும் உரிமைக்கும் சீக்கியர்கள் முக்கிய பங்கு வகித்துள்ளனர். இந்திய மக்களோடும், அனைத்து இனங்களோடும் எப்போதும் நட்பையும் சமாதானத்தையும் விரும்புகிறார்கள். அதே போல இந்தியாவும் சீக்கிய மக்களின் அரசியல், பொருளாதார. ஜனநாயக, சட்ட, பிராந்திய உரிமைகளை மதிக்கும் என்று நம்புகிறார்கள்.*

*சுதந்திரம் வழங்கப்பட்டபோது சீக்கியர்களுக்கு சிறப்பு உரிமைகள் தரப்பட வேண்டும் என்று 1947 சுதந்திர சட்டம் கூறுகிறது. ஆனால் சீக்கியர்களின் அடிப்படை உரிமை தொடர்ந்து மறுக்கப்படுவதோடு, இந்தியா தான் கையெழுத்திட்டுள்ள சர்வதேச சமாதான-உரிமைக்கான ஒப்பந்தங்களையும் காலில் போட்டு மிதித்து, கட்டுப்பாடற்ற அரசு அடக்குமுறையை ஏவுகிறது. இன்று பஞ்சாப் துப்பாக்கி முனையில் தூக்கி நிறுத்தப்பட்டுள்ளது. பஞ்சாபைப் புறக்கணித்து அடக்கி ஒடுக்கியதாலேயே நிலைமை இன்று மோசமடைந்துள்ளது.*

*1984-ல் இந்திரா கொல்லப்பட்டதையொட்டி நாடெங்கும் ஆயிரக்கணக்கான சீக்கியர்கள் கொல்லப்பட்டனர். கொலையாளிகள் இன்றுவரை தண்டிக்கப்படவில்லை. அதே சமயம் சீக்கியர்கள் நடத்தும் அமைதியான ஊர்வலம் கூட மிருகத்தனமாக அடக்கப்படுகிறது.*

*65 மற்றும் 76வது சட்டத் திருத்தங்கள் பஞ்சாபை இந்தியாவின் காலனியாக்கிவிட்டது. மற்ற மாநிலங்களை விட பஞ்சாபுக்காகவே தனிச்சிறப்பான அடக்குமுறைச் சட்டங்கள் போடப்படுகின்றன. சட்ட பூர்வமாகவோ, அரசு நிர்வாகத்தின் மூலமாகவோ முறையிட பஞ்சாப் மக்களுக்கு இன்று எந்த வாய்ப்பும் கிடையாது. சந்தேகிக்கப்படும் சீக்கிய அப்பாவி மக்கள் கேள்விமுறையின்றி சுட்டுக் கொல்லப்படுகின்றனர்.*

*கடந்த 44 மாதங்களாக பஞ்சாபில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசு கிடையாது. பாகிஸ்தான் எல்லையில் பதற்றம் உள்ளதைக் காட்டி தேர்தல் மறுக்கப்படுகிறது. ஆனால் அதே சமயம் எல்லையிலுள்ள பாகிஸ்தானின் சிந்து மகாணத்தில் சட்டம் ஒழுங்கு மோசமான நிலையில் உள்ளபோது கூட மத்திய, மாநிலத் தேர்தல்கள் நடத்தப்பட்டுள்ளன.*

*பஞ்சாபிலுள்ள சிறுபான்மை இந்துக்கள் ''இந்துத்தவா'' இயக்கம் நடத்துகின்றனர். பாரதீய ஜனதாவும் விசுவ இந்து பரிஷத்தும் பாபர் மசூதியை இடிக்கக் கோருகின்றனர். நாளை சீக்கிய பொற்கோவில் உள்ள இடத்தில் தான், ராமர் இலங்கையிலிருந்து அமிழ்தத்தைக் கொண்டு வந்து புதைத்தார் என்று இடிக்கக் கோருவர். இத்தகைய விபரீதங்கள் நேருவதைத் தடுக்கவே சீக்கியர்களுக்கு உரிமை கோருகிறோம்.*

*மொழிவழி மாநிலங்கள் சுதந்திரத்துக்குப் பிறகு அமைக்கப்பட்டும் கூட பஞ்சாபி மொழி திட்டமிட்டே புறக்கணிக்கப்படுகிறது. நேருவும் பஞ்சாபி இந்துக்களும் இந்தியை பஞ்சாபின் தாய்மொழியாகத் திணித்தனர். பஞ்சாபுக்குச் சொந்தமான தலைநகர் சண்டிகாரும் அதைச் சார்ந்த பகுதிகளும் திட்டமிட்ட இதர மாநிலத்திற்கு தாரை வார்க்கப்பட்டது. அதே போல பஞ்சாபுக்குச் சேர வேண்டிய நதிநீர் பிற மாநிலங்களுக்குப் பங்கிடப்பட்டுவிட்டது. பஞ்சாப் வங்கியில் போடப்படும் சேமிப்பும் மூலதனமும் பிற மாநில வளர்ச்சிக்காக தொடர்ந்து அபகரிக்கப்படுகிறது. எந்த அன்னிய நிறுவனமும் ஏன், வெளிநாட்டில் வாழும் சீக்கியர்கள் கூட மத்திய அரசின் அனுமதியின்றி பஞ்சாபில் தொழில் தொடங்க முடிவதில்லை. ராணுவப் படைகளில் சீக்கியர்கள் தொடர்ந்து புறக்கணிக்கப்பட்டு பின்னுக்குத் தள்ளப்படுகிறார்கள்.*

*எனவேதான், எமது மதம், மொழி, பிராந்திய உரிமையைக் காக்க சுயநிர்ணய உரிமையைக் கோருகிறோம்.*

படிப்பகம்

www.padippakam.com



பாக். எல்லையை ஒட்டியுள்ள பகுதிகளில் அப்பாவி பொதுமக்கள் அரசு பயங்கரவாதிகளால் சுட்டுக் கொல்லப்படுகின்றனர். இங்கே அடையாள அட்டையுடன் இளம் சிறுவர்கள்.

ராமஜென்மபூமி/ பாபர் மசூதி பிரச்சினையைத் தீர்க்க முடியாமல், 'கோர்ட்டு தீர்ப்பு தான் முடிவு; அது தவிர வேறெந்த தீர்வையும் ஏற்க முடியாது' என்று வரம்பிட்டுக் கொள்கின்றனர். இவையனைத்தும் இந்திய ஆளும் கும்பல்களால் இப்பிரச்சனைகளைத் தீர்க்க முடியாத கையாலாகாத்தனத்தையும், அவர்கள் ஏற்றிப் போற்றும் அரசியல் சட்டத்தின் ஓட்டாண்டித் தனத்தையும் தான் காட்டுகிறது.

மேலும் ஆளும் கும்பல்கள் வாதிடுவது போல, இந்தியாவின் சட்டம் புனிதமானதோ, சாசுவதமானதோ அல்ல. அது காலனியாதிக்கவாதிகளின் நலன்களுக்காக உருவாக்கப்பட்ட காட்டுமிராண்டிச் சட்டம். போலிச் சுதந்திரத்துக்குப் பின்னர் அதையே இந்தியாவின் சட்டமாக்கிய ஆட்சியாளர்கள் தமது தேவைக்கேற்ப அதை பலமுறை திருத்தி புதிய அடக்குமுறைச் சட்டங்களைக் கொண்டு வந்துள்ளனர். 'புனிதமான' இச்சட்டங்களை அவர்களே துச்சமாக மதித்து பலமுறை மீறியும் உள்ளனர். இந்தியா எந்தவொரு ஆக்கிரமிப்புப் போரிலும் ஈடுபடாது என்ற சட்டத்தை ஏற்றுக் கொண்டுள்ளதாகக் கூறும் இவர்கள்தான் வங்கதேசப் போரிலும் பின்னர், அண்மையில் ஈழ ஆக்கிரமிப்புப் போரிலும் இறங்கினர். இத்தகைய தேசிய வெறிபிடித்த ஆளுங்கும்பலின் நலன்களுக்கான காட்டுமிராண்டி சட்டத்தைக் கொண்டு பிரச்சினைகளை ஒருக்காலும் தீர்க்க முடியாது. மாறாக நெருக்கடிகள் முற்றவே செய்யும்.

### சீக்கியர்கள் மட்டுமே தேசிய இனமாக முடியாது

மறுபுறம், சீக்கிய தீவிரவாதிகள் மதவாத அடிப்படையிலான சுயநிர்ணய உரிமையைத் தான் கோருகிறார்கள். தமது 'காலிஸ்தான்' லட்சியத்திற்காக பஞ்சாப் மக்களின் நியாயமான சுயநிர்ணய உரிமைக்கான கோரிக்கைகளையும் போராட்டங்களையும் கேடாகப் பயன்படுத்துகிறார்கள். முஸ்லீம்களுக்கான தனிநாடாக பாகிஸ்தான் மதவாத அடிப்படையில் பிரிவினை செய்யப்பட்டது போல சீக்கியர்களுக்கான தனிமாநிலமாக பஞ்சாபை காலிஸ்தானாக மாற்றக் கோருகிறார்கள். இந்த நோக்கத்துடனேயே அப்பாவி இந்துக்களைத் தாக்கி பஞ்சாபிலிருந்து விரட்டுகிறார்கள்.

ஆனால் பஞ்சாப் என்பது சீக்கியர்கள் மட்டுமல்ல; குறிப்பிட்ட மதத்தைச் சேர்ந்தவர்கள் மட்டும் தேசிய இனமுமல்ல. பஞ்சாப் தேசிய இனம் என்பது சீக்கிய - இந்து - முஸ்லீம்களை உள்ளடக்கியது. மதத்தால் வேறுபட்டிருந்தாலும் சிறுபான்மை இந்துக்களும் முஸ்லீம்களும் பஞ்சாப் தேசிய இனக் கலாச்சார பொருளாதார வாழ்வில் ஒன்றி தலைமுறை தலைமுறையாக வாழ்ந்து வருபவர்கள். அவர்களைப் பிரித்துவிட்டு சீக்கியர்களை மட்டும் மதவாத அடிப்படையில் தேசிய இனமாகக் கருதமுடியாது.

ஆனால் சீக்கிய தீவிரவாதிகள் சுயநிர்ணய உரிமைக்கான கோரிக்கையுடன் மத விவகாரங்களையும் சேர்த்து குழப்புகிறார்கள். அகாலிதள அரசியல் கட்சிகளும் அந்த திசையிலேயே செல்கின்றன. சீக்கியர்களின் மதஉரிமை, அரசியலையும் மதவிவகாரங்களையும் சேர்த்து குழப்பி மதவெறியர்கள் ஆதாயமடைய முயற்சிப்பதை ஒருக்காலும் ஏற்கமுடியாது.

பல்வேறு தேசிய இனங்களின் சிறைக்கூடமாக உள்ள இந்தியாவில், அனைத்து தேசிய இனங்களுக்கும் சுயநிர்ணய உரிமை, மதநம்பிக்கைகளை தனிநபர் விவகாரமாக்கி அரசியல் பொருளாதார வாழ்விலிருந்து துண்டித்து விடுவது ஆகியவை மூலமே இப்பிரச்சனைகளுக்குத் தீர்வு காண முடியும். பாட்டாளி வர்க்கத் தலைமையிலான ஒரு புதிய ஜனநாயக அரசு மட்டுமே இந்தத் தீர்வுகளை முன்வைத்து சாதிக்க முடியும்.

● பாலன்.

# அடக்குமுறைக்கு அஞ்சிடோம்

செப்டம்பர் மாதம் குருவாரெட்டியூர் வி.வி.மு ஒன்றிய மாநாட்டில் பேசியதைக் காரணம் காட்டி டிசம்பர் மாதம், ம.க.இ.க. மற்றும் வி.வி.மு தோழர்கள் மீது (வன்முறையை தூண்டினார்கள் என்று பொய் குற்றம் சாட்டி) வழக்கு போட்டுள்ளது போலீசு.

மத்திய அரசிற்கு கணக்கு காட்டி ஆட்சியை தக்க வைத்துக் கொள்வதற்காக தி.மு.க அரசால் ஏவப்பட்ட இவ்வடக்குமுறையைக் கண்டித்து தமிழகமெங்கும் இயக்கம் எடுக்கப்பட்டது.

திருச்சியில் 10.12.90 அன்று தெப்பக்குளம் அஞ்சலகம் முன்பு, ம.க.இ.க. ஆர்ப்பாட்டம் நடத்தியது. தோழர் தமிழ்மணி தலைமையில் 25 பேர் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டு கைது செய்த தோழர்களை விடுவிக்கக் கோரியும், பொய் வழக்கை திரும்பப் பெறக் கோரியும் முழக்கமிட்டனர். இதுவல்லாமல் நகர் முழுவதும் சுவரொட்டி ஒட்டி இயக்கம் எடுக்கப்பட்டது.

உத்தமபாளையம் தாலுகா அலுவலகம் முன்பு 24.12.90 அன்று அடக்குமுறைக்கெதிரான ஆர்ப்பாட்டம் நடத்த வி.வி.மு அனுமதி கேட்டு மறுக்கப்பட்டது. இதை அம்பலப்படுத்தி திட்டமிட்ட நாளில் தெருமுனைக் கூட்டங்கள் நடத்த தீர்மானிக்கப்பட்டது. உ.பா. பேருந்து நிலையத்தில் தெருமுனைப் பிரச்சாரத்தை முடித்து, அடுத்த இடத்திற்கு நகர்ந்தபொழுது மோப்பம் பிடித்து வந்த போலீசு, தோழர்களை கைது செய்து வேனில் ஏற்றியது. வேன் ஊரைச் சுற்றி போலீசு நிலையம் வந்து தோழர்களை இறக்கி விட்டது. தோழர்கள் வழிநெடுக வேனில் இருந்தே முழக்கமிட்டு வந்ததும், போலீசு நிலையத்தையும் பிரச்சார மேடையாக்கி பாடல்பாடி, உரை நிகழ்த்தியதும் போலீசின் அராஜக செயலை மக்கள் கவனத்திற்கு கொண்டு செல்ல வாய்ப்பாக அமைந்தது. அடக்குமுறைக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் முகமாக, உண்ணக் கொடுத்த மதிய உணவை வேண்டாமென தோழர்கள் மறுத்தனர். வேறு வழியில்லாமல் அன்று மாலையே தோழர்களை போலீசு விடுவித்தது.

தஞ்சை மேரீஸ் கார்னரிலிருந்து 18.12.90 அன்று ஊர்வலம் புறப்பட்டு காவேரி சிறப்பங்காடி எதிரில் திலீபன் திடலில் முடிந்து பின் ஆர்ப்பாட்டம் நடந்தது. வி.வி.மு., ம.க.இ.க. தோழர்களும் ஆதரவாளர்களும் கல்லூரி மாணவர்களும் ஏறத்தாழ 60 பேர் கலந்து கொண்டனர்.

திருக்காட்டுப்பள்ளியில் 20.12.90 அன்று திருவையாறு வட்டார செயலர் ஜெயசீலன் தலைமையில் ஆர்ப்பாட்ட ஊர்வலம் நடைபெற்றது.



படிப்பகம்

www.padippakam.com

# பாசிசப் புலிகளின் ஆதரவாளர்களுக்கு ஒரு சவால்

மக்கள் கலை இலக்கியக் கழகத்தின் சென்னைக் கிளை தக்க நேரத்தில் மேற்கொண்ட துணிச்சலானதொரு நடவடிக்கை, ஈழ விடுதலை ஆதரவாளர்கள் எனச் சொல்லிக் கொள்ளும் பல சிறு குழுக்களின் இரட்டை வேடத்தை அம்பலப்படுத்தி விட்டது. அவர்கள் ஈழ விடுதலை ஆதரவாளர்கள் என்பதைவிட புலிகளின் பாசிசத்துக்கு வக்காலத்து வாங்குபவர்கள் என்பதுதான் சரியானதென்று நிரூபித்து விட்டது.


தன்னுரிமை இயக்கத்தை சேர்ந்த பல சிறு குழுக்கள் இணைந்து ஈழ விடுதலை ஆதரவாளர்கள் கூட்டமைப்பு ஒன்றை ஏற்படுத்தியுள்ளன. அதன் முதல் பொதுக்கூட்டம் கடந்த 7ந்தேதி சென்னையில் மத்திய நூலக கட்டிட அரங்கில் நடந்தது. இந்திய ஆக்கிரமிப்பு மற்றும் சிங்கள இன ஒடுக்குமுறைக்கு எதிராக ஈழ விடுதலைக்குப் போராடி வரும் குழுக்களையும் கூட தடை செய்து, அதன் உறுப்பினர்களைக் கொன்று வருகிறது, விடுதலைப் புலிகளின் பாசிச அமைப்பு. அது இப்போது தமிழ் மக்கள் பாதுகாப்புப் பேரவையின் உறுப்பினர்களைப் பிடித்து வைத்துக் கொண்டுள்ளது; அவர்களின் கதி என்ன ஆனது என்று தெரியவில்லை. புலிகளின் இப்பாசிச நடவடிக்கையைக் கண்டித்தும் இந்தியப் புரட்சியாளர்களின் ஆதரவு கோரியும் தமிழ் மக்கள் பாதுகாப்புப் பேரவை மற்றும் தமிழ் - சிங்கள மக்கள் நட்புறவுக் கழகம் ஆகியவற்றின் வேண்டுகோள் வந்துள்ளது.

புலிகளின் பாசிசப் போக்கை அம்பலப்படுத்த எண்ணிய சென்னை ம.க.இ.க. மேற்படி ஈழ விடுதலை ஆதரவாளர் கூட்டமைப்பு பொதுக் கூட்டத்தில் அந்த வேண்டுகோளின் பிரதிகளையும், புதிய ஜனநாயகத்தையும் விநியோகிக்க அரங்கத்துக்கு வெளியே "கடை"போட்டது. நமது நியாயமான நடவடிக்கையை அங்கு வந்த கணிசமான ஈழ விடுதலை ஆதரவாளர்கள் ஆதரித்தனர். ஆனால், கூட்டமைப்பின் தலைவர்களோ பொருமினர்; குட்டித் தலைவர்களோ ஆத்திரமடைந்தனர். தனித்தனியாகவும், கும்பலாகவும் வந்து ம.க.இ.க. தோழர்களை ஏசியும், மிரட்டியும் நயந்து பேசியும் விரட்டுவதற்கு முயன்றனர். "மாற்றுக் கருத்து, விமர்சனங்கள் வைப்பது எங்கள் உரிமை. முடிந்தால், மேடையிலே போய் பதில் சொல்லுங்கள்" என்று ம.க.இ.க.வினர் பதிலடி கொடுத்ததும் பின்வாங்கினர்.

இதற்கிடையே மேடையில் பேசி வந்த மக்கள் ஜனநாயக இளைஞர் கழகத்தின் தோழர் ஞானம் 'ஈழ விடுதலைப் போரை வர்க்க ரீதியில் பார்க்க வேண்டு'மெனப் பேச ஆரம்பித்தார். அவ்வளவுதான்! 'வர்க்கம் கிடையாது, இனம்தான்' என்று கூச்சல் போட்டு அவரைத் தொடர்ந்து பேச விடாமல் நிர்பந்தமாக இறக்கி விட்டனர்.

இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு ஒரு கும்பல் ம.க.இ.க.வினரை நோக்கி வந்தது. ஏசியும், தாக்குவதற்கு முயன்றும் புதிய ஜனநாயகம் ஏடுகளை மிதித்தும் ரகளை செய்தனர். ஆனால், ம.க.இ.க. தோழர்கள் உறுதியாக நின்று மறுத்து பதிலடி கொடுத்தனர். வேறு வழியின்றி கூட்டமைப்புப் பிரமுகர்களே தமது சகபாடிகளை உள்ளே போகும்படி செய்தனர். புலிகளின் பிரதிநிதி ஒருவர், தி.க.வினர், எம்.சி.பி.ஐ பிரமுகர், இ.ம.மு. இன்குலாப், திலீபன் மன்ற தியாகு, அன்னையரணி சரசுவதி ராஜேந்திரன், தன்னுரிமை இயக்க பொழிலன் ஆகியோர் இந்த "ரகளையிலும் - சமாதானத்திலும்" முக்கியப் பங்காற்றினர்..

ஈழ விடுதலை ஆதரவாளர் கூட்டமைப்பினர் புதிய ஜனநாயகத்தைக் கண்டு ஆத்திரமுற்றனர். ம.க.இ.க. தோழர்களை விரட்டவே முயன்றனரே தவிர அவர்கள் புலிகளின் பாசிசத்துக்கு எதிராக எழுப்பிய கேள்விகளுக்கு யாருமே பதில் சொல்லத் துணியவில்லை. "ஆம்! வன்முறை சர்வாதிகாரிகள் (பாசிஸ்டுகள்)தான்! மாற்றுக் கருத்துக்கு இடமில்லை!" என்று ஆத்திரத்தோடு ஒப்புக் கொண்டனர். இதன் மூலமும் ம.ஜ.இ.க. தோழரது வாயடைத்ததன் மூலமும் தமிழீழமும், தன்னுரிமைத் தமிழ்நாடும் இவர்கள் கையில் சிக்கினால் என்னவாகும் என்பதைக் காட்டி விட்டார்கள்.



# ஆர்.எம்.எஸ். ஊழியர் நியாயம்: அரசின் அடாவடித்தனம்

சென்னையில் உள்ள ரயில்வே தபால் சேவை (ஆர்.எம்.எஸ்) ஊழியர்களின் நான்கு நாள் வேலை நிறுத்தத்திலேயே 1.20 கோடித் தபால்கள் தேங்கி விட்டன. தபால் எடுத்துச் செல்லும் வாகன ஊழியர்களும் வேலை நிறுத்தத்தில் பங்கேற்பதால் இரயில்வே மற்றும் விமான நிலையங்களில் மலைமலையாகத் தபால் பைகள் குவிகின்றன. இந்த விவரங்களே போதும், இந்த ஊழியர்கள் இதுவரை எவ்வளவு கடுமையாக உழைக்கிறார்கள் என்பதை நிரூபிப்பதற்கு! ஆனால், அரசோ அவர்களது நியாயமான கோரிக்கைகளை ஏற்க மறுத்து எதிர் நடவடிக்கைகளில் தீவிரமாக இறங்கியுள்ளது.

ஆர்.எம்.எஸ். அஞ்சல் பிரிப்பகத்தில் பத்து, பதினைந்து ஆண்டுகளாக அற்பக் கூலிக்கு பல ஆயிரம் நிரந்தரமற்ற ஊழியர்கள் பணிபுரிகின்றனர். ஏற்கனவே 342 இடங்கள் காலியாக இருந்து அப்பணிகளில் இவர்களை அமர்த்த மறுத்து வருகிறது நிர்வாகம். அதோடு கிறிஸ்துமஸ், புத்தாண்டு வாழ்த்துக் கடிதங்களைப் பிரிப்பதற்கு குறைந்த கூலி கொடுத்து ஓய்வு பெற்ற ஊழியர்களை அமர்த்தி சிறப்பு வேலை வாங்கியது. இதை எதிர்த்துத்தான் அஞ்சல் பிரிப்பக ஊழியர்கள் வேலை நிறுத்தம் செய்தனர்.

பொங்கல் விழாவை ஒட்டி பணிக்குத் திரும்ப வேண்டியது ஊழியரது கடமையெனக் கூறிப் பத்திரிகைகளுக்கு விளம்பரம் தந்தது நிர்வாகம். ஆனால், ஊழியரது நியாயமான கோரிக்கையை ஏற்க மறுத்து ஓய்வு பெற்ற ஊழியர்கள், மாணவர்கள், குடும்பத் தலைவர்களை வைத்து அஞ்சல் பிரிப்பு வேலைகளைச் செய்ய முயன்றது. மற்ற பிரிவு அஞ்சல் துறை ஊழியர்களும், போராட்டத்தில் குதிப்பதாக எச்சரித்தும் அரசின் அடாவடித்தனம் நீடித்தது.

இயந்திர மயமாக்கியும் வேலைப் பளுவைக் கூட்டியும் நிரந்தர ஊழியர்களை வதைக்கும் அரசு, நிந்தரமற்ற ஊழியர்களை பல ஆண்டுகளாகச் சுரண்டி வருகிறது. ஆனாலும், வேலை நிறுத்தத்தால் ஏற்பட்டுள்ள சிரமங்களை தாமதங்களைக் காட்டிப் பொது மக்களிடம் நல்ல பிள்ளையாகப் பாசாங்கு செய்கிறது. மற்றப் பிரிவு மக்களிடமிருந்து தனிமைப்பட்டு தொழிற்சங்க இயக்கங்கள் நடத்தப்படுவதைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்கிறது. தொலைபேசி ஊழியர் போராட்டத்திலும் இவ்வாறுதான் செய்தது. கடந்த 8.1.91 அன்று நிர்வாகத்துடன் பேச்சுவார்த்தை நடத்திய தொழிற்சங்கத் தலைவர்கள் வேலைநிறுத்தத்தை முடித்துக் கொள்வதாக அறிவித்தனர். உடனே, சென்னை அண்ணாசாலை தபால் துறை தலைமை அதிகாரி அலுவலகத்தின் முன் கூடிய தொழிலாளர்கள், உணர்வோடு ஒற்றுமையாக நடத்திய போராட்டத்தைக் காட்டிக் கொடுத்த தொழிற்சங்க துரோகிகளையும் நிர்வாகத்தையும் எதிர்த்து ஆர்ப்பாட்டம் செய்து தமது ஆத்திரத்தை வெளிப்படுத்தியுள்ளனர். இனியும் இத்துரோக தொழிற்சங்கங்களை நம்புவதில் பயனில்லை. எனவே தகுந்த படிப்பினைகளைப் பெற்று புரட்சிகரமான முறையில் தொழிலாளர் இயக்கம் முன்னேறி வெற்றி பெற வேண்டும்.



படிப்பகம்

www.padippakam.com

# சாலையார் மீதான மதிப்பீடு சரிதான்

## இனதுரோகியும் புரட்சியின் எதிரியுமான கருணாநிதி பற்றிய சாலையாரின் மதிப்பீடும் அணுகுமுறையும் தான் எமது விமர்சனத்திற்கான ஆதாரம்.

அன்பார்ந்த நண்பர் குடந்தை குகன் அவர்களுக்கு,

கடந்த ஜூன் புதிய ஜனநாயகம் இதழில், "கருணாநிதியின் கடைக்கண் பார்வைக்குக் காத்திருக்கும் சாலை இளந்திரையன்" என எழுதியிருந்தோம். அதற்கு சாலையாரே தனது அறிவியக்கம் இதழில் மறுப்பும் எதிர் விமர்சனமும் எழுதியிருந்தார்.

அதன்பின் அக்டோபர் இறுதி வாரம் சாலையார் குறித்து அவ்வாறு நாங்கள் எழுதியதன் மீது ஆதாரப் பூர்வமான விளக்கம் கோரிக் கடிதம் எழுதியிருந்தீர்கள். வேறு சில தவிர்க்கவியலாத பணிகள் காரணமாக உடன் பதில் எழுத முடியாமற் போனது. இதற்கிடையே உங்களது கடிதம் நவம்பர் அறிவியக்கம் இதழில் வந்தது. அவ்வாறு வெளியிட்டதன் மூலம் எங்கள் பணியைக் குறைத்தீர் என மகிழ்ச்சியோடு நேரடியாகவே உங்கள் கேள்விகளுக்குப் பதில் அளிக்க விழைகிறோம். ஏற்பட்டுவிட்ட காலதாமதத்துக்கு வருந்துகிறோம்.

"பகுத்தறிவு" வாழ்க்கையினராகிய தாங்கள் சாலையாரது எழுத்தையும் பேச்சையும் விமர்சனபூர்வமாக அணுகினாலே போதும். எங்களது விமர்சனம் சரியானதென விளக்கம் பெற்று விடமுடியும். கருணாநிதி மீதான சாலையாரின் மதிப்பீடும் அணுகுமுறையும்தான் சாலையார் மீதான எங்கள் விமர்சனத்துக்கு ஆதாரமாக உள்ளது. இதை முதலில் நீங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ள வேண்டும் எனக் கோரு-

தமிழின துரோகத்தில் ஈழத்தின் ஈ.பி.ஆர். எல்.எஃப், டெலோ, பிளாட் தலைமைகளைவிட கருணாநிதியும் அவரது கட்சி ஆட்சியும் - எந்த வகையிலும் குறைந்ததில்லை. ஈழத்தைப் போல இங்கேயும் இன விடுதலைப் போர் வெடித்திருக்குமானால், அது தெளிவாகவே தெரிந்திருக்கும். கருணாநிதியின் இனத் துரோகம் வெறுமனே வந்துவிடவில்லை. அதற்கான பொருளாயத வர்க்க அடிப்படை இருக்கிறது. கருணாநிதியும் வீரமணி உட்பட அவரது சகபாடிகளும் கோடி கோடியாக குவித்துள்ள முதலாளிகள்தாம்! ஆகவே, அவர்கள் தமிழின விடுதலைக்கு துரோகிகளாகவும் சமனியப் புரட்சிக்கு எதிரிகளாகவும் நிற்கிறார்கள்.

கருணாநிதி, அவரது கட்சி, ஆட்சியின் மீது இத்தகு மதிப்பீடும், இதற்கேற்ற அணுகுமுறையும் வைக்காத எவரும் உண்மையான இன விடுதலைப் போராளியாகவோ, சமனியப் புரட்சியாளராகவோ இருக்க முடியாது! மாறாகத் தன் தோலைப் பாதுகாத்துக் கொள்ளவும், அவரது தயவை எதிர்நோக்கியும் இருப்பதாகத்தான் கருதமுடியும். பிரிவினைத் தடைச் சட்டத்தைக் கண்டஞ்சி அண்ணாதுரை நேரடியாகவும், பெரியார் ஈ.வெ.ரா. மறைமுகமாகவும் தமது இலட்சியத்தைக் கைவிட்டபோது எதிர்க்கத் துணியாத பாரதிதாசன் முதல் கருணாநிதியுடன் உறவு கொண்ட தேவநேயப் பாவாணர், பெருஞ்சித்திரனார் வரை பலரிடம் இதைக் காண்கிறோம். சாலையாரும் அப்படித்தான் என்றே கருதுகிறோம். அதற்கான ஆதாரம் சாலையாரின் எழுத்தும் பேச்சும் தான்.

தமிழின விடுதலையின் துரோகியும் சமனியப் புரட்சியின் எதிரியுமான கருணாநிதியின் ஆட்சி பற்றி, "தன்மான இயக்கத் ... ஆட்சி" "பிற்பட்ட

ஆட்சியையும் சாடி சாலையார் எழுதவில்லையா என்று நீங்கள் கேட்கலாம். ஆனால், அதுவும் கூட அவர் மீதும் ஆட்சியின் மீதும் வெறுப்புற்றுள்ள தமிழர்களைத் திரட்டி கருணாநிதியிடமே மீண்டும் சமரசம் செய்துவிக்கும் வகையிலேதான் சாலையாரின் மேற்கண்ட அணுகுமுறை உள்ளது.

"பதவி ஆசையையும், பண வெறியையும், துறந்த ஒரே வணங்காமுடிப் பேராசிரியர்" என்று சாலையார் தம்மைப் பற்றிக் கூறிக் கொள்ளுகிறார். ஆனால், "ச்சீ... சீ... இந்தப் பழம் புளிக்கும்" என்கிற தோரணையில் தான் சாலையார் இப்படித் துறவியாகியுள்ளார். அண்ணாமலை நகர் நாடக அறிஞர் டாக்டர் கோராவுக்கு சாலையார் எழுதிய கடித வரிகளே இதற்குச் சாட்சியாக உள்ளது. துணைவேந்தர் போன்ற பதவிகளுள் ஒன்றில் அமரும்படி டாக்டர் கோராவும் பிறரும் விருப்பம் தெரிவித்திருந்தும் பின்வருமாறு சாலை எழுதுகிறார்.

"நான் முற்றும் துறந்தவனல்ல; பதவியே...... இடையறாமல் செய்து கொண்டு இருக்கிறேன்" என சாலையார் எழுதினார்.

இதிலே ஏக்கமும் ஆத்திரமும் மட்டுமல்ல; தற்புகழ்ச்சி, தன்னகந்தை ஆகிய கொடிய நோய்களின் நோய்க்குறிகள் உங்களுக்குத் தெரியவில்லையா? கருணாநிதியிடம் கோபமாய் எழுதும்போதும், கோரிக்கை விடும்போதும் "நான் அறிஞன், நான் அறிஞன்" என்றுதானே பறையடித்துப் பீற்றிக் கொள்கிறார், சாலையார். அவற்றிலே தற்புகழ்ச்சியும், தன்னகந்தையும் மட்டுமல்ல, மதிப்பும் பொறுப்பும் அதாவது புகழும் பதவியும் கோரும் ஏக்கம் உங்களுக்குத் தெரியவில்லையா?

இத்தகைய ஏக்கமும், ஆத்திரமும், முகப்புகழ்ச்சி விரும்பும் கருணாநிதியின் ... விட அருவெறுக்கத்தக்க தற்பு ... எல்லாம்

படிப்பகம்

பிரகடனப் படுத்தியு[...] ஜெயலலிதா கட்சி டுகளுக்குக் காங்கிரசும் ஜெயலலிதா திமிழர் யும் எதிரிகள் என்பது பகுத்தறிவுத் திமிழர் கள் அறிந்ததுதான். ஆகவே கருணாநிதியும் அவரது கட்சியும் ஆட்சியும் எப்படிப்பட்ட வர் என்பதுதான் முக்கியமானது. தமிழினத் தின் மிகப்பெரிய துரோகியும் ஒடுக்குமுறையாளரும் எனக் கருணாநிதி மீண்டும் மீண்டும் நிரூபித்து வருகிறார்.

ஆட்சியைப் பிடிப்பதற்காகத்தான் தமிழ் இனம், மொழி உரிமை ஆகியவை குறித்து முதலைக் கண்ணீர் வடித்தார். ஆட்சிக்கு வந்தபின் அதைக் காத்துக் கொள்வதற்காக பார்ப்பன - பனியா கும்பலின் எடுபிடியானார். ஆட்சிக் கவிழ்ப்பு பீதியினால் ஈழப் போராளிகளையும், மார்க்சிய - லெனினியப் புரட்சியாளர்களையும், தன்னுரிமை இயக்கத்தவர்களையும் வேட்டையாடுகிறார்.

"தேச"துரோக பிரிவினை வழக்குகள் போடுகிறார். எந்த "தேச" துரோகம்? தமிழ் தேசத்துக்கா? இல்லை; பார்ப்பன - பனியா தேசத்துக்கு துரோகம் செய்கிறார்களாம்! இவர்களை ஒடுக்குவதற்காக சிறப்பு போலீசுப் படை (கியூ பிரிவு) அமைத்தார். மத்தியத் துணை இராணுவத்தைத் துணைக்கு அழைத்தார். மற்ற தேசிய இனப் போராளிகளை ஒடுக்கத் தமிழகப் போலீசை அனுப்பினார். தமிழ் வழிக் கல்வி இயக்கத்தவரைச் சாடி, ஆங்கில வழிக் கல்விக்கு வக்காலத்து வாங்குகிறார். இப்படி கருணாநிதியின் இனத் துரோகங்களை அடுக்கிக் கொண்டே போகலாம்.

கொலை [...] சிறையிலுள்ள அயோக்கிய சகா[...] தப்பிவிடுகிறார்கள். இதுவும் கூட அதிகாரிகளை முடக்கி, குற்றவாளிகளைத் தப்புவித்து சட்டம் - ஒழுங்கு பிரச்சினையை எழுப்பி தி.மு.க. அரசை ஒழித்துக் கட்ட மேல் சாதி, மேல் வர்க்கத்தினர் செய்யும் சதி என்கிறார் சாலை; இதைத் தமிழக அரசு விசாரிக்கவும் கோருகிறார்.

கட்சித் தொண்டர்களை உசுப்பி மோதவிட்டும், அனுதாபத்தைக் கிளறி ஆதாயம் தேடவும் தம்மீது கொலை முயற்சி சதி நடப்பதாக இப்படிப் பலமுறை ஏற்கனவே கருணாநிதி நாடகமாடியுள்ளார். சாலைக்கு இது தெரிந்தும் கருணாநிதியை ஆர்.எஸ்.எஸ். கொல்ல முயலுவதாக அவர் கூறும் திடுக்கிடும் தகவல் உண்மைதான் என்றும், "நம்முடைய ஆட்சியைப் பொறுக்க மாட்டாமல் பார்ப்பனர்கள் அவ்வாறு செய்து விடுவார்கள்" என்றும் எச்சரிக்கிறார் சாலை. தமிழறிஞர்களும், தமிழ்த் தொண்டர்களுமாகிய தன்னுரிமை இயக்கத்தவர்கள் கருணாநிதியின் பகைவர்கள் அல்ல; நண்பர்கள் என்கிறார். நோய்ப் படுக்கையில் கிடந்தபோது தன்னிடம் கருணாநிதி நலம் விசாரிக்கவில்லையே எனப் புலம்புகிறார்; புரளுகிறார்.

தமிழனத் துரோகியும் சமரசப் புரட்சியின் எதிரியுமான கருணாநிதியிடம் இத்தகைய அக்கறையும் எதிர்பார்ப்பும் கொண்டிருப்பதுவே சாலையார் மீதான புதிய ஜனநாயகத்தின் விமர்சனம் சரியானதெனக் காட்டிவிடுகிறது. கருணாநிதியையும் அவரது

[...] கொஞ்சம் பாருங்கள்:

"இன்று வாழும் தமிழ் அறிஞர்களுக்குள்ளேயே பதவி ஆசையும், பணவெறியும் துறந்த ஒரே வணங்காமுடிப் பேராசிரியர் சாலையார்" என்று தம்மைத் தாமே கூறிக் கொள்கிறார். "உண்மையில் தமிழுக்குத் தமிழகத்தில் தலைமை நிலை ஏற்பட வேண்டும் என்று முழுமனதோடு விரும்புகிறவர்கள் சாலை - சாலினியும் அவர்களுடைய அறிவியக்கப் பேரவையினரும் மட்டுமே. உங்களைப் போன்ற ஒருசில ஆர்வலர்கள் ஆங்காங்கே இருக்கட்டும்" என்று ஒரு மதுரைக்காரருக்கு சாலையார் எழுதுகிறார். தமிழறிஞர்கள், தன்னுரிமைப் போராளிகள் என்று சாலையார் கூடிக் குலாவுகிறவர்களைக் கூட இவை இழிவு படுத்துபவை அல்லவா? கருணாநிதியின் நேர்பார்வைக்குப் போகாமல் கடைக்கண் பார்வைக்குக் காத்திருப்பது தன்மானம் கருதி அல்ல; இத்தகைய தற்புகழ்ச்சி, தன்னகந்தை காரணமாகத்தான்.

சாலையார் மீது புதிய ஜனநாயகம் விமர்சனம் வைத்ததும் அது "மஞ்சள் தனமானது" "கற்பூரத்தின் வாசனை தெரியாத கழுநாய்க் கம்யூனிஸ்டுகள்" என்றெல்லாம் அவர் எழுதிவிட்டார். சாலையார் மீது விமர்சனம் வைப்பது தவறல்ல; ஆனால், அது உண்மையும் தெளிவும் பொருந்தியிருப்பின் பரிசீலித்து ஏற்பதாக எழுதியுள்ளீர்கள். அவ்வாறே செய்வீர்கள் என்று நம்புகிறோம்.

— ஆசிரியர் குழு, புதிய ஜனநாயகம்.

# வி.வி.மு.வுக்கு எதிராக போலீசு பா.ம.க. கட்சி கூட்டு – அவதூறு

ஆதிக்க சக்திகளின் ரவுடித்தனத்திற்கும், உடனிருந்து ஊக்குவிக்கும் போலீசு ரவுடிகளின் அடக்குமுறைக்கும் அஞ்சாமல் அவற்றை முறியடித்து வளர்ந்து வரும் வி.வி.மு., இயல்பாகவே எதிரிகளின் வயிற்றில் புளியை கரைத்திருக்கிறது. தேவாரம் மீனாட்சிபுரத்தில் போலீசு எடுபிடி செல்லையாவும் எஜமானன் இன்ஸ்பெக்டர் நடராஜனும் வி.வி.மு மீது அடக்குமுறைகளையும், அவதூறு பிரச்சாரத்தையும் நடத்தி வருகின்றனர்.

இவற்றை அம்பலப்படுத்தி வி.வி.மு எழுதி வைத்த தட்டியை திருடிச் சென்றது இக்கும்பல். 27.11.90 அன்று நடைபெறவிருந்த கண்டனப் பொதுக்கூட்டத்திற்கு கடைசி நேரத்தில் அனுமதி மறுத்து கூலிப்படைகளை வைத்து மேடையை பிரித்தது.

மேலும் 30(2) சட்டம் இருப்பதாகக் கூறி தெருமுனைக் கூட்டத்திற்கு அனுமதி தர மறுத்து அத்தோடு உ.பாளையம் பகுதியில் உள்ள அனைத்து அச்சகங்களிலும் வி.வி.மு பிரசுரம் அடிக்கக்கூடாது என மிரட்டியுள்ளது போலீசு. போலீசின் அராஜகத்தை அம்பலப்படுத்தி தட்டி, பிரசுரம், சுவரொட்டி, சுவரெழுத்து மூலம் தொடர்ந்து வி.வி.மு பிரச்சாரம் எடுத்துச் சென்றது. 5.12.90 அன்று தாலுக்கா அலுவலகம் முன்பாக கண்டன ஆர்ப்பாட்டமும் நடத்தியது.

இஞ்சி தின்ற குரங்காகிவிட்ட நடராஜன் கும்பல் அண்மையில் வி.வி.மு மீதான அவதூறு பிரச்சாரத்தில் இறங்கியுள்ளது. எடுபிடி செல்லையா, பாட்டாளி மக்கள் கட்சி என்ற பெயரில் வி.வி.மு தோழர்களின் கடந்த கால தவறுகள் சிலவற்றை மிகைப்படுத்தி பிரசுரம் வெளியிட்டுள்ளான். கடந்த காலத்தில் சில சீரழிவுகளுக்கு உட்பட்டிருந்தவர்கள் தங்களை மாற்றிக் கொண்டு வி.வி.மு. விற்கு வந்ததிலிருந்து புரட்சிகர நேர்மையையும், ஒழுக்கத்தையும் கடைபிடித்து வருவதை பகுதி மக்களே நன்கறிவர். போலீசு-ரவுடிக் கும்பலின் பொய் பிரச்சாரத்திற்கு தோழர்கள் அஞ்சி முடங்கப்போவது இல்லை.

www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com

# பாசிஸ்டுகளே! சிந்தனையைச் சிறையிட முடியுமா?

**பல்வேறு நிர்பந்தங்களால் தமது தாயகத்தில் இருந்து வெளியேற்றப்பட்டு, விரட்டப்பட்டு மேலைநாடுகளில் குடியேறியுள்ள ஈழத்தமிழர்களில் சிலர். தமது மனவெழுச்சிகளையும், எண்ணங்களை பல சிறு பத்திரிகைகளாக வெளிப்படுத்தினர். அவை விழலுக்கு இறைத்த நீராகி விடக்கூடாது; ஈழ - இலங்கை விடுதலைக்கு உரமாக வேண்டும்.**

ஈழத்தின் 'கையறு நிலை' கடல் கடந்த மேலை நாடுகளில் பல்வேறு தமிழ் சிறு பத்திரிக்கைகளை இன்று வெளிக் கொணர்ந்துள்ளது. தனி நபர்களாலும் குழுக்களாலும் நடத்தப்படும் தேடல், மனிதம், புதுமை, தூண்டில் போன்ற — ஏறத்தாழ இருபத்தைந்துக்கும் மேற்பட்ட இதழ்கள் மேலை நாடுகளிலிருந்து வெளிவருகின்றன. ஈழத்தில் கருத்துச் சுதந்திரத்துக்கு கதவடைப்பு செய்யப்பட்டுள்ள நிலையில் இத்தகைய பத்திரிக்கைகளே இன்று பல சரியான கருத்துகளுக்கான விவாத மேடையாக உள்ளன.

கடல் கடந்து பிழைப்பைத் தேடி மேலைநாடுகளுக்குச் சென்ற தொழிலாளிகள், உயர்கல்வி கற்று இந்நாடுகளில் பணியாற்றும் அறிவுஜீவிகள், ஈழ அகதிகள், ஈழ விடுதலை இயக்கங்களில் பங்கேற்று தலைமையின் தவறான போக்கினால் அதிருப்தியடைந்து வெளியேறி, புதிய பாதையைத் தேடுவோராக மேலைநாடுகளுக்குச் சென்ற 'முன்னாள்' போராளிகள், இதர குழுக்களின் தாக்குதலுக்கு அஞ்சி தஞ்சமடைந்தவர்கள் - என பலதரப்பட்ட ஈழத் தமிழர்களால் பல இதழ்கள் வெளியிடப்படுகின்றன. ஈழத்தைப் போல் கருத்துச் சுதந்திர கதவடைப்பு மேலைநாடுகளில் இல்லாததால், ஈழ விடுதலை இயக்கத்தின் தவறுகள், குறைகள், துரோகம், அராஜகம், ஐக்கியம் பற்றி துணிச்சலாகவும் பகிரங்கமாகவும் இப்பத்திரிக்கைகள் விமர்சனங்களை முன்வைக்கின்றன.

### மூன்றுவகை போக்குகள்

இப்பத்திரிக்கைகளை குறிப்பாக மூன்று வகையாகப் பிரிக்கலாம். தமது சுயதிருப்திக்காகவும், தமது மேதாவித்தனத்தைக் காட்டுவதற்காகவும் நடத்தப்படும் பத்திரிக்கைகள் ஒருவகை. முன்னாள் போராளிகள், ஈழ விடுதலை இயக்கத்தை களத்திலிருந்து வழிகாட்டவோ தலைமை தாங்கவோ முடியாமல் தோல்வி கண்டவர்கள், இன்றுள்ள அனைத்து ஈழப் போராளிக் குழுக்களின் மேல் அவநம்பிக்கையும் அதிருப்தியும் கொண்டவர்களால் இப்பத்திரிக்கைகள் நடத்தப்படுகின்றன. ஈழ விடுதலை இயக்கத்தை வழிநடத்திச் செல்லும் ஆற்றலோ மாற்றுத் திட்டமோ இல்லாத இவர்கள் தமது தோல்வியை மறைக்க இச்சிறு பத்திரிக்கைகளின் மூலம் தமது அறிவுஜீவித் தனத்தைக் காட்டுகின்றனர்.

ஈழ விடுதலை இயக்கத்தின் இன்றைய போக்கைப் பற்றி சூடேறிய விமர்சனங்கள், 'புதிய இடது' போக்கினை ஆதரித்து மயிர் பிளக்கும் சித்தாந்த, கலை இலக்கியக் கோட்பாட்டுக் கட்டுரைகள் என்று தமது அறிவுஜீவித் தனத்தையும் மேதாவிலாசத்தையும் பறைசாற்றிக் கொள்ள இப்பத்திரிக்கைகளை ஒரு சாதனமாகப் பயன்படுத்திக் கொள்கின்றனர்.


இந்த பிழைப்புவாத அறிவுஜீவிகள் தான் இப்போது 'புதிய இடது' போக்கையும், தாராளவாத, அமைப்புசாராத, கலைப்புவாதப் போக்கையும் பிரதிநிதித்துவப் படுத்திக் கொண்டு, ஈழ விடுதலை இயக்கத்தை மேலும் குழப்புபவர்களாக உள்ளனர். தமது உணர்வுகளை வெளிப்படுத்த ஆர்வத்துடன் பத்திரிக்கை தொடங்குபவர்கள் இத்தகைய பிழைப்புவாத பழம் பெருச்சாளிகளின் படைப்புகளை அறிந்தோ, அறியாமலோ வெளியிடுவதன் மூலம் மேலை நாட்டிலுள்ள ஈழத் தமிழர்களைக் குழப்புவதோடு, தாமும் குழம்பி திசை தெரியாமல் தத்தளிக்கிறார்கள்.


பத்திரிக்கையை வெறும் விவாத மேடையாக்கி பலதரப்பட்ட கருத்துக்களை வெளியிடுவது மற்றொரு வகை. பாதிக்கப்பட்ட - பழிவாங்கப்பட்ட போராளிகள், ஆதரவாளர்களால் இத்தகைய இதழ்கள் வெளியிடப்படுகின்றன. பெரும்பாலான ஈழப் போராளி அமைப்புகளின் அராஜகம், சீரழிவு மற்றும் தலைமையின் துரோகத்தால் அதிருப்தியடைந்து விலகி, புதிய மாற்று வழியை முன்வைக்க முடியாமல் எல்லா வகையான கருத்துக்களையும் கலவையாக வெளியிடுகின்றனர். தலைமையின் துரோகத்தால் விரக்தியடைந்த இவர்கள், எதிர்மறையாக 'எந்த தலைமையுமே சரியல்ல; தலைமையே கூடாது' என்று சூடுபட்ட பூனைபோல பத்திரிக்கைகளில் வெளியிடுகின்றனர். இப்பத்திரிக்கைகளிலும் முன்னர் குறிப்பிட்ட பிழைப்புவாத அறிவு ஜீவிகளின் படைப்புகளும் வெளிவருகின்றன.


மேற்கூறிய இரண்டு போக்கினதும் விளைவாக, 'புதிய இடது' போக்கை உணர்வு பூர்வமாக ஆதரிப்பவர்களும் உண்டு. இவர்கள் தம்து சுயதிருப்திக்காகவும், தமது மேதாவிலாசத்தைக் காட்டிக் கொள்ளவும் பத்திரிக்கை நடத்துவதோடு, புதிய இடது' கருத்துக்களையும் படைப்புகளையும் வெளியிட்டு அதன் மீது விவாதம் நடத்துகின்றனர். கருத்து சுதந்திரம், அமைப்புக் கட்டுப்பாடு கூடாது, 'வைதீக மார்க்சியம்' என்று மார்க்சியத்தை நிராகரிக்கும் போக்கை அறிந்தே பிரதிநிதித்துவப் படுத்துபவர்கள் இதில் இன்னொரு ரகம்.

இவ்விரு போக்குகளிலிருந்தும் வேறுபட்டு தம்மால் இயன்ற அளவுக்கு சமூக உணர்வோடு செயல்படுபவர்களால் மூன்றாவது வகை பத்திரிக்கைகள் நடத்தப்படுகின்றன. ஈழ விடுதலை இயக்கத்தை முன்னெடுத்துச் செல்ல மாற்றுத் திட்டங்களை இவர்களால் முன்வைக்க இயலாத போதிலும், தாம் வாழும் பகுதியிலுள்ள ஈழத் தமிழர்களிடம் நிலவும் கலாச்சார சீரழிவுகளுக்கு எதிராக நின்று, அவர்களை புரட்சிகர உணர்வில் பயிற்றுவிப்பதில் அக்கறையுடன் செயல்படுபவர்கள்.

மேலைநாட்டு ஈழத் தமிழர்களால் நடத்தப்படும் சிறு பத்திரிக்கைகளில் சில எமக்கு தொடர்ச்சியாக கிடைக்காததால் அவற்









படிப்பகம்

www.padippakam.com

றைப் பற்றி முழுமையான கருத்துக்கு வர முடியவில்லை. சில ஏடுகள் தொடர்ந்து வெளிவருகிறதா என்றும் தெரியவில்லை. எனவே, எமக்குக் கிடைத்த சில பத்திரிக்கை களைப் பற்றி சுருக்கமாகத் தொகுத்தளிக்கி றோம்.







**தேடல்:** கனடாவிலிருந்து இப்பத்திரிக்கை வெளிவருகிறது. ''மானுடம் வெல்லும் என்ற நம்பிக்கை உள்ளவர்கள் இணையும் தேவைக்குரிய பயணமாக இப்பத்திரிக்கை இருக்கும்''. ''தமிழ் மானுடத்தை உன்னதங் களுக்கு மாற்ற முடியும் என்ற நம்பிக்கையு டன் செயற்பட முயற்சிக்கின்ற சொற்ப பேர் நாங்கள்'' என்று இவர்கள் தமது இதழில் அறிமுகப்படுத்திக் கொண்டுள்ளனர். இப் பத்திரிக்கை பலவகை கலவைவாத கருத்துக் களைக் கொண்ட விவாத மேடைபோல் உள் ளது. நண்பர்கள் யார், துரோகிகள் யார் என்று இனம் பிரிக்காமல், ''எமது போராட்டம் ஒருசில குழுக்களின் போட்டா போட்டியாக இல்லாமல் அது மக்களின் அர சியல் மேம்பாட்டிற்கான போராட்டமாக மாற்றப்பட வேண்டும்'' என்று சமரசவாத மாக எழுதுகிறது. அசோமித்திரன், சுந்தர ராமசாமி, நீல.பத்மநாபன் முதலான ''கலை கலைக்காகவே'' எனும் கோட்பாட்டைக் கொண்ட தமிழ் இலக்கியவாதிகளைப் பாராட்டி எழுதுகிறது.

**அ ஆ இ:** தலைமையின் துரோகம், ஜனநா யக மறுப்பு முதலானவற்றால் அதிருப்தியுற் றவர்கள் நெதர்லாந்திலிருந்து இப்பத்திரிக் கையை வெளியிடுகின்றனர். ''உண்மைக ளைத் தேட வேண்டும்; அதன் மூலம் சரி யான கருத்துக்களை வெளிக்கொணர வேண்டும். நேர்மையான ஆரோக்கியமான கருத்துப் பரப்பைத் தொடர வேண்டும்'' என்ற கொள்கையுடன் பத்திரிக்கையை ஒரு விவாத மேடையாக வெளியிடுகின்றனர். பிழைப்புவாத அறிவுஜீவிகளின் படைப்பு கள் இப்பத்திரிக்கையில் அதிகமாக வெளிவ ருகிறது.

**தூண்டில்:** மேற்கு ஜெர்மனியிலிருந்து இப்பத்திரிக்கை வெளிவருகிறது. புலிகளின் அராஜகத்தையும் பாசிசப் போக்கையும் அம்பலப்படுத்தும் அதேவேளையில் எல்லா இயக்கங்களையும் நிராகரிப்பதாக உள்ளது. ஈழ விடுதலை இயக்கம் பற்றி கற்ப னையான தீர்வுகளும் மிகையான எதிர் பார்ப்புகளும் கொண்டதாக அதன் படைப்பு கள் உள்ளன. எடுப்பான கேலிச் சித்திரங்க ளுடன் வடிவமைப்பில் மேம்பட்டதாக இப் பத்திரிக்கை உள்ளது.

**தாயகம்:** இது கனடாவிலிருந்து வெளிவரு கிறது. புலிகளின் அராஜகத்தையும் பாசிசப் போக்கையும் அம்பலப்படுத்துகிறது. தினச ரிகளில் வெளியாகும் செய்திகளை அப்ப டியே எடுத்து வெளியிடும் பத்திரிக்கையாக உள்ளது. மேலைநாட்டில் வாழும் ஈழத் தமி ழர்களின் குட்டி முதலாளித்துவ உணர்வுக ளுக்கு தீனி போடும் வகையில், உணவுப் பொருட்கள், ஆடை, வீடியோ, சினிமா, நகை, கேசட், சாராயம் முதலான அனைத்து கடைகளையும் பற்றி விளம்பரங்களை பக் கம் பக்கமாக வெளியிடுகிறது.

**பனிமலர்:** இது லண்டனிலிருந்து வெளிவ ருகிறது. எமக்கு முதல் இதழ் மட்டுமே கிடைத்தது. ஈழ விடுதலை இயக்கத்தை முன் னெடுத்துச் செல்வதற்கான அக்கறையு ணர்வை இவ்விதழில் காணமுடிகிறது. மார்க்சிய ஆசான்களின் மேற்கோள்களு டன், ஈழத் தமிழர்களிடம் நிலவும் கலாச்சார சீரழிவுகளை கேலி செய்யும் சமூக உணர் வைக் கொண்டதாக உள்ளது. வடிவமைப் பில் மேம்பட்டதாக உள்ள இப்பத்திரிக்கை, உள் அட்டைகளில் ஒட்டல், வீடியோ கடை விளம்பரங்களை வெளியிட்டுள்ளது.

**சுவடுகள்:** இது நார்வேயிலிருந்து வெளி யிடப்படுகிறது. ஈழ அறிவுஜீவிகள், கவிஞர் களின் படைப்புகள் நிறைய வெளியிடப் படுகின்றன. இதர மூன்றாம் உலக நாடுக ளின் புரட்சிகர இயக்கங்களைப் பற்றிய செய்திகள் வருகின்றன. என்றாலும், ஈழ விடுதலை இயக்கத்தை முன்னெடுத்துச் செல்வதற்கான திட்டம் ஏதுமின்றி இப்பத்தி ரிக்கை உள்ளது. தமது சுயதிருப்திக்காக இதனை வெளியிடுவது போல இப்பத்தி ரிக்கை அமைந்துள்ளது. இதிலும் உணவு அங்காடி, விமானப் பயண ஏஜென்சி பற் றிய விளம்பரங்கள் வெளியிடப் படுகிறது. இது முதலாளித்துவ பத்திரிக்கை போல குறுக்கெழுத்துப் போட்டி நடத்துகிறது.

**புதுமை:** இது சுவிஸ்லாந்திலிருந்து வெளி யிடப்படுகிறது. மார்க்சிய விரோத பல வண் ணத் திரிபுவாதக் கருத்துக்களையும், 'புதிய இட்து' போக்கையும் முழுமையாக பிரதிநி தித்துவப் படுத்துகிறது. ''முழுமையானதும் நிலையானதும் பிழையானது'' என்ற முழக் கத்துடன் 'வைதீக' மார்க்சியத்தை எதிர்க்கி றது. ட்ராட்ஸ்கியின் வாழ்க்கை வரலாறு பற்றிய நூலை வாசகர்களுக்கு அறிமுகப்ப டுத்தி அந்நூலைப் பாராட்டி எழுதுகிறது. மற்றொரு இதழில் புதிய ஜனநாயகம் இத ழைப் பற்றி கூறுமாறு ஒரு வாசகர் கேட் டுள்ள கேள்விக்கு, ''சர்வாதிகாரி ஸ்டா லினை 70% சரி எனவும், மாவோவை 100% சரி எனவும் துதிபாடுபவர்கள்; சிறு, ஏழை விவசாயிகளையே தமது சக்தியாகக் கருதுப வர்கள். இனவாத தன்மையற்றவர்கள்; ஆனால் குறுங்குழுவாதிகள்'' என்று பதில ளிக்கிறது. இன்னுமொரு கேள்விக்கு பதில ளிக்கையில் பாலு மகேந்திரா, மணிரத்னம் ஆகியோரை தமக்குப் பிடித்த புத்திசாலித் னமான தமிழ் திரைப்பட இயக்குனர்களாக சித்தரிக்கிறது. தன்னார்வக் குழுக்களுடன் சங்கமமாகி விட்ட கட்சிக் கலைப்புவாதி எஸ்.வி.ராஜதுரை, ஈழத்தின் யேசுராஜா முத லான புதிய இடது போக்கினருடன் உடன் பட்ட கருத்துக்களை வெளியிடுகிறது.

**மனிதம்:** இது சுவிஸ்லாந்திலிருந்து வெளி வருகிறது. மேற்கூறிய இருவகைப் போக்கி லிருந்து வேறுபட்டு சமூக உணர்வோடு வெளியிடப்படும் மூன்றாவது போக்கை பிர திநிதித்துவப் படுத்துகிறது. இருப்பினும் ''பூவே பூச்சுடவா'', ''கேளடி கண்மணி'', ''புதுவசந்தம்'' ஆகியவற்றை நல்ல படங்க ளாக மதிப்பீடு செய்துள்ளது. எஸ்.வி.ராஜது ரையின் ''அல்தூசர் - ஒரு அறிமுகம்'' என்ற நூலுக்கு ஒரு பக்க அளவுக்கு விளம்பரம் செய்து, ''மார்க்சியத்திலுள்ள பல்வேறு போக்குகளுடனும் ஆழமான பரிச்சயம் ஏற் படுத்திக் கொள்ள விரும்பும் ஒவ்வொருவ ரும் படிக்க வேண்டிய நூல்'' என்று அறிமு கப்படுத்தியது. இத்தகைய குறைகள் காணப் பட்டாலும் தவறுகளை உணர்ந்து திருத்திக் கொள்ளும் போக்கு இப்பத்திரிக்கையில் காணப்படுகிறது.

இவை தவிர ஜெர்மனியிலிருந்து அமு தம், அக்னி; பிரான்சிலிருந்து ஓசை; சுவிஸ் லாந்திலிருந்து விடுதலைப் பாதை, அக்னி; கனடாவிலிருந்து பார்வை, தமிழ் எழில், வீணைக் கொடி, நாயகன், தமிழ் முரசு ஆகிய ஏடுகள் வெளிவருகின்றன. இவை எமக்கு கிடைக்காததால் கருத்து ஏதும் கூற முடியவில்லை.

### மேலைநாட்டு ஈழத்தமிழர்களின் வாழ்நிலையும் சமூக உணர்வற்ற போக்கும்

மேற்கூறிய இருவகை குட்டி முதலா ளித்துவப் போக்கிற்கு மேலைநாடுகளில் வாழும் ஈழத் தமிழர்களின் வாழ்நிலையே வளமான சமூக அடிப்படையாக உள்ளது.

***ஈழ விடுதலை இயக்கத்தை வழிநடத்திச் செல்லும் ஆற்றலோ மாற்றுத் திட்டமோ இல்லாத சில அறிவு ஜீவிகள் தமது தோல்வியை மறைக்க இச்சிறு பத்திரிக்கைகளின் மூலம் தமது 'மேதாவிலாசத்தை' வெளிச்சம் போட்டு காட்டுகின்றனர். 'புதிய இடது' போக்கையும், அமைப்பு சாராத, கலைப்புவாதப் போக்கையும் பிரதிநிதித்துவப் படுத்தும் இவர்கள், ஈழ விடுதலை இயக்கத்தை மேலும் குழப்புகின்றனர்.***

படிப்பகம்

www.padippakam.com

இவர்களில் பெரும்பாலோர் தொழிலாளிகள். ஆலைத் தொழிலாளிகளைவிட, மேலைநாட்டவரால் இழிவான தொழிலாகக் கருதப்படும் ஓட்டல் தொழிலாளிகளாக, சாக்கடை - தெரு சுத்தம் செய்பவராக இடுகாட்டைச் சுத்தம் செய்பவராக உள்ளவர்களே அதிகம். பிழைக்கப் போன இடத்தில் கூட நிம்மதியாக வாழ முடியாமல் மேலை நாட்டு வெள்ளை இனவெறிக் கும்பல்களால் தொடர்ந்து தாக்குதலுக்கு ஆளாகிறார்கள். இவ்வாறு தமது வாழ்வு சூறையாடப் படுவதற்கான அபாயம் நிலவிய போதிலும், பாட்டாளி வர்க்க வாழ்க்கை முறையை பலர் வெறுத்து ஒதுக்கிவிட்டு இருக்கிறவரை அனுபவிப்போம் என்கிற மேலைநாட்டு குட்டி முதலாளித்துவக் கலாச்சாரத்தில் மூழ்கிக் கிடக்கிறார்கள்.

மறுபுறம், பெண்ணடிமைத்தனம், திருமணத்துக்கு பெருமளவில் வரதட்சிணை - சீதனம் வாங்குவது, சடங்கு - சம்பிரதாயங்களைப் பின்பற்றுவது என்கிற நிலப்பிரபுத்துவ கலாச்சாரத்துடன் இசைந்து வாழ்கிறார்கள். அதாவது மேலைநாட்டு குட்டி முதலாளித்துவக் கலாச்சாரமும் கீழை நாட்டு நிலப்பிரபுத்துவக் கலாச்சாரமும் கலந்த ஒரு வீரிய ஒட்டுரக கலாச்சாரத்தைப் பிரதிபலிக்கிறார்கள். ஒப்பீட்டு ரீதியில் வசதியான வாழ்க்கையும், ஈழத்தைப் போலன்றி தொல்லைகளிலிருந்து விடுபட்ட நிலையும் இருந்தபோதிலும் கூட, இவர்கள் சமூக உணர்வும் அக்கறையுமின்றி இருப்பது மிகவும் வேதனைக்குரியது.

கடந்த ஆண்டு சுவிஸ் நாட்டிலுள்ள சூரிச்சில் வாழும் ஈழத் தமிழர்கள் சிலர் நடத்திய பொங்கல் விழா இதன் எடுப்பான வெளிப்பாடாக உள்ளது. இந்த விழாவுக்கு ஈழத்திலிருந்து வாழையும் செவ்விளநீர் குலைகளும் ''ஏர் லங்கா'' விமானத்தின் மூலம் இறக்குமதி செய்யப்பட்டது. மேடையில் கிருபானந்த வாரியாரின் பக்திப் பிரசங்கமும், சீர்காழி சிவ.சிதம்பரத்தின் பக்திப் பாடல்களும் காசெட்டுகளில் ஒலித்தன. விறைக்கும் குளிரிலும் நான்குமுழ வேட்டி கட்டி, மேலுடம்போடு ஐயர் வந்து பூசை செய்தார். பட்டு வேட்டியும் புடவையும் அணிந்து ஈழத் தமிழ்க் குடும்பங்கள் விழாவைக் கொண்டாடி வீடியோ படம் எடுத்து குதூகலித்தனர். மிகையான ஆடம்பரத்துடன் நடந்த இந்த விழாவுக்கு ஏறத்தாழ 35,000 பிராங்குகள் விரயமாக்கப்பட்டது.

ஈழ மக்களும் இந்தியாவிலுள்ள அகதிகளும் சொல்லொணா வேதனையிலும் அவலத்திலும் வாழும்போதுதான், மேலை நாட்டிலுள்ள சில ஈழத்தமிழர்கள் கொஞ்சமும் கூச்சமின்றி இவ்வாறு விழாக் கொண்டாடினர். பொங்கல் விழா மட்டுமல்ல; இன்னும் சிலர் தமது குழந்தைகளுக்கு மேல்நாட்டுப் பாணியில் ஆடம்பரமாக பிறந்தநாள் விழா கொண்டாடி வீடியோ படம் எடுப்பது, ஆண்டுதோறும் தமது திருமண நாளை குதூகலமாகக் கொண்டாடி மகிழ்வது என்றுள்ளனர். வேறு சிலர் புதிதாக வரும் தமிழ் சினிமா வீடியோக்கள், சினிமா - மஞ்சள் - மசாலா பத்திரிக்கைகளை வாங்கி ரசித்துக் கொண்டிருக்கின்றனர். பெரும்பாலான தமிழ் சிறு பத்திரிக்கைகள், குறைந்தபட்சம் தாம் வாழும் பகுதியிலுள்ள ஈழத் தமிழர்கள்




சிலரிடம் காணப்படும் இத்தகைய சீரழிவுக் கலாச்சாரத்திற்கு எதிராக சமூக உணர்வுடன் போராடக் கூட முன்வராமல் சமரசமாகிப் போகின்றன. இத்தகைய குட்டி முதலாளித்துவ தாராளவாத, சமரசப் போக்குதான் இப் பத்திரிக்கைகளின் சித்தாந்த கண்ணோட்டமாக வெளிப்படுகிறது.

### ''மனிதம்'' குழுவின் முன்னுதாரணமிக்க செயல்பாடுகள்

ஆனால் இவர்களிடமிருந்து மாறுபட்டவர்களாக சுவிஸ் நாட்டைச் சேர்ந்த ''மனிதம்'' பத்திரிக்கை குழுவினர் உள்ளனர். வெறுமனே பத்திரிக்கை நடத்தி கதைப்பதோடு நின்றுவிடாமல், மேலைநாட்டு ஈழத் தமிழர் பலரிடம் நிலவும் கலாச்சார சீரழிவுகளுக்கு எதிராக தொடர்ந்து விடாப்பிடியாகப் போராடி வருகிறார்கள்.

*கடல் கடந்து வாழும் ஈழத் தமிழர்களில் பலர் மேலை நாட்டு குட்டி முதலாளித்துவக் கலாச்சாரமும், கீழை நாட்டு நிலப்பிரபுத்துவ கலாச்சாரமும் கலந்த ஒரு வீரிய ஒட்டு ரக கலாச்சாரத்தைப் பிரதிபலிக்கின்றனர். ஒப்பீட்டு ரீதியில் வசதியான வாழ்க்கையும், ஈழத்தைப் போலன்றி தொல்லைகளிலிருந்து விடுபட்ட நிலையும் இருந்தும் கூட இவர்கள் சமூக உணர்வும் அக்கறையுமின்றி இருப்பது வேதனைக்குரியது.*

சுவிஸ் நாட்டுக்கு வந்து மதப் பிரச்சாரம் செய்து ஏய்க்கும் பண்டாரங்கள், பாதிரிகளை அம்பலப்படுத்துவது; தமிழ் சினிமா வீடியோக்களைப் பார்த்து சீரழியும் ஈழத் தமிழர்களைப் பற்றி; அவர்கள் ஆடம்பரமாகக் கொண்டாடும் குழந்தைகளின் பிறந்த நாள் விழா, மணநாள் விழா போன்றவற்றை அம்பலப்படுத்தி இணக்கமான முறையில் சுட்டிக்காட்டி திருத்தப் போராடுவது; திருமணத்துக்கு சீதனம் வாங்குவது முதல் தாலி அணிவிப்பது வரையிலான பல்வேறு நிலப்பிரபுத்துவ அடிமைக் கலாச்சாரத்துக்கு எதிராக பொறுப்பான முறையில் போராடுவது — முதலான ஆக்கபூர்வமான பங்களிப்பைச் செய்து வருகிறார்கள்.

மேலும், ஈழ விடுதலை இயக்கத்திற்கு நிதி திரட்டுவதற்காக தமிழ் சினிமா போடுவது, கழிசடை நடிகர் - நடிகைகளை வைத்து ஆபாசமாக கலை நிகழ்ச்சி நடத்துவது என்கிற வழக்கமான, தவறான போக்கினை அம்பலப்படுத்தி, நிதி திரட்டுவதற்கான நேர்மையான மாற்று வழிமுறைகளையும் முன்வைத்தனர்.

இவற்றோடு 'மனிதம்' என்ற வீடியோ பத்திரிக்கையைத் தயாரித்து அதன் மூலம் உலக அரசியல் நடப்புகள், புரட்சிகர போராட்டங்கள், மனிதனின் பரிணாம வளர்ச்சி முதலானவற்றை பல்வேறு சிரமங்களுக்கு நடுவே 4 தொகுப்புகளைக் கொண்டு வந்து ஈழத் தமிழர்களை முற்போக்கான சிந்தனையில் பயிற்றுவிக்க முயற்சி எடுத்துள்ளார்கள்.

எந்த ஒரு சிறு பத்திரிக்கையும் அதைச் சார்ந்த குழுவும், ஈழத் தமிழர்களிடம் நிலவும் குட்டி முதலாளித்துவ சீரழிவுகளை எதிர்த்து போராடாமல் முடங்கிக் கிடக்கும் போது மனிதம் குழுவினரின் முன்னுதாரண மிக்க முயற்சியைப் பாராட்டாமல் இருக்க முடியாது. இத்தகைய முன்முயற்சியை லண்டனிலிருந்து வெளிவரும் பனிமலர், ஜெர்மனியிலிருந்து வெளிவரும் தூண்டில் ஆகிய பத்திரிக்கைகளில் கருத்து ரீதியிலாவது காணமுடிகிறது. இருப்பினும் அவர்கள் செயல்பூர்வமாக என்ன செய்தார்கள், செய்கிறார்கள் என்பதைப் பற்றி விபரங்கள் தெரியவில்லை.

இத்தகைய முன்முயற்சியுடைய பத்திரிக்கைகளும் குழுக்களும் முதற்படியாக ஒரு பாட்டாளி வர்க்க அமைப்பை உருவாக்க வேண்டும். சிதறிக் கிடக்கும் மேலைநாட்டு ஈழத் தமிழர்களை ஒருங்கிணைப்பது என்பது கடினமான பணி என்றாலும் இத்தகைய புரட்சிகர அமைப்பின் மூலம் மட்டுமே மேலைநாட்டு ஈழத்தமிழர்கள் மத்தியில் நிலவும் கலாச்சார சீரழிவுகளுக்கு எதிராகவும், திசைமாறி இழுக்க முயற்சிக்கும் 'புதிய இடது' போக்கிற்கு எதிராகவும் சித்தாந்த ரீதியிலும் செயல் ரீதியிலும் போராட முடியும். ஈழ விடுதலை இயக்கத்துடனும் பிறநாட்டுப் புரட்சிகர இயக்கங்களுடனும் தம்மை நெருக்கமாகப் பிணைத்துக் கொள்ளும் இத்தகையதோர் அமைப்பு மட்டுமே ஈழத்திலுள்ள புரட்சிகர ஜனநாயக சக்திகளை ஐக்கியப்படுத்தும் வகையில் ஆக்கபூர்வமான மாற்றுத் திட்டத்தை முன்வைத்து ஈழ விடுதலைக்கான தமது பங்களிப்பைச் செய்ய முடியும். இதற்கான காலம் கனியவில்லை என்று தள்ளிப் போடுவதைவிட இப்போதிருந்தே அதற்கான முயற்சியில் இறங்குவதுதான் ஈழவிடுதலைப் போராட்டத்திற்கு புதிய நம்பிக்கையூட்டும் திருப்பு முனையாக அமையும்.

● மனோகரன்.



படிப்பகம்

www.padippakam.com

# சமூக விரோதிகளின் பிடியில் தொலைபேசியகம்

நினைத்துப் பார்க்கவும் முடியாத புதுப்புது வழிகளில் மக்கள் சொத்துக்களைக் கொள்ளையிடுவது, சூறையாடுவது நடக்கிறது. முதலாளிகள், அதிகாரிகள், அரசியல்வாதிகள் மற்றும் சமூக விரோதிகள், இதிலே கை தேர்ந்தவர்களாகி உள்ளார்கள். லைசென்சு, பர்மிட், கோட்டா, காண்டிராக்ட் தருவதில், கள்ளக் கணக்கு வைப்பதில் முதலாளிகளும் அதிகாரிகளும் மோசடி செய்வதைப் பார்த்திருக்கிறோம். நிலக்கரி, மின்சாரம் போன்றவற்றைத் திருடுவதில் அவர்கள் கூட்டுக் கொள்ளையில் ஈடுபடுவதைக் கேட்டிருக்கிறோம். இப்போது தொலைபேசித் துறையில் இதுபோன்றதொரு மோசடி!

மத்திய அரசின் தனி அமைச்சக நிர்வாகத்தின் கீழ்உள்ள சேவைத்துறை நிறுவனம் தான் தொலைபேசித்துறை. ஆனால், அது ஓர் அரசு நிறுவனமாக உள்ளதா? அல்லது சில முதலாளிகள், சமூக விரோதிகளின் தனியுடமைக் கம்பெனியாக உள்ளதா என்று அதன் ஊழியர்களே அஞ்சுமளவுக்கு அங்கே மோசடிகள் நடக்கின்றன.

உதாரணத்துக்கு, கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள குழித்துறை தொலைபேசியகம். அருகிலுள்ள குலசேகரம் ரப்பர் வியாபாரிகள், குழித்துறையைச் சுற்றியுள்ள முந்திரிப் பருப்பு வியாபாரிகள், களியக்காவிளையில் உள்ள இறால் மீன் வியாபாரிகள். உண்மையில் இந்த வியாபாரிகள்தான் குழித்துறை தொலைபேசியகத்தில் பணிபுரியும் சில (ஊழியர்கள்) இயக்குநர்களுக்கு முதலாளிகள். இவர்கள் மூலமாக தொலைபேசியகத்தையே தமது தனியுடமைக் கம்பெனியாக்கிக் கொண்டவர்கள்.

சமூக விரோதியான ஒய்.செல்வராஜ் என்பவர் தலைமையில் விஜயகுமார், கிருஷ்ணன் ஆகிய சில தொலைபேசி இயக்குநர்கள், தொலைபேசி வாடிக்கையாளர்களான மேற்கண்ட முதலாளிகளின் ஏஜெண்டுகளாகவே பணியாற்றுகின்றனர். இவர்களின் முக்கியமான பணி தமது எஜமானர்களான இந்த வாடிக்கையாளர்களுக்கு டில்லி, பம்பாய், கல்கத்தா மற்றும் வெளிநாடுகளுக்கும் பதிவு செய்யாமல் டிரங்கால்கள் தொலைதூரத் தொடர்புகளை ஏற்படுத்திக் கொடுப்பதுதான். பதிவு செய்யாமல் 'டிரங்கால்கள்' இணைப்பு செய்து தருவதால் அதற்குரிய கட்டணத்தொகை தொலைபேசித் துறைக்கு இந்த முதலாளிகள் தரவேண்டியதில்லை; அதற்கான பில்கணக்கில் இத்தொகை வராது. அதற்குப் பதிலாக, பதிவு செய்து டிரங்கால்கள் பேசினால் என்ன தொகையாகுமோ அதில் பாதி ஒய்.செல்வராஜ் தலைமையிலான கும்பலுக்கு தந்துவிடுகிறார்கள்.

இந்த மோசடியும் ஊழலும் குழித்துறை தொலைபேசியக நிர்வாகம் முதல் புதுடில்லியிலுள்ள அதன் அமைச்சகம் வரை தெரியும். இந்தக் கும்பல்மீது நடவடிக்கை எடுக்குமாறு அமைச்சகத்திலிருந்தே உத்திரவு வந்தது: ஆனால், அதற்கும் உள்ளூர் நிர்வாகம் வெறும் கண்துடைப்பு நடவடிக்கைகளே எடுத்தது. காரணம், இதன் அதிகாரிகளே மேற்படி வியாபாரிகள், முதலாளிகளுக்கு மிகவும் வேண்டியவர்கள். மேலும் செல்வராஜ் கும்பல்தான் இந்த அதிகாரிகளுக்குத் தேவையான வேறு பிற காரியங்களையும் சாதித்துக் கொடுக்கிறது. எனவே, அதிகாரிகளே கண்டுபிடித்த பல முறைகேடுகள் மோசடிகளையும் கூட மேலே கொண்டு போகாமல் அமுக்கி விடுகிறார்கள்.

அதுமட்டுமல்ல, உள்ளூர் போலீசு நிலையத்தோடும் உறவு ஏற்படுத்திக் கொண்டு ஒரு சமூக விரோத, தரகுத் தலைவனாகவே தொலைபேசி இயக்குநர் செல்வராஜ் வளர்ந்து விட்டார். ஊரில் ''அண்ணே, அண்ணே'' என்றழைக்கப்படும் இவர் மார்த்தாண்டத்தில் உள்ள போலீசு நிலையத்தில் நியமிக்கப்படாத அதிகாரியாகிவிட்டார். அதாவது தரகனாகி விட்டார். போலீசு நிலையத்தில் இவர்மூலம் எதையும் சாதிக்கலாம்; இவரை மீறி அங்கு எதுவும் நடக்காது! அங்குள்ள அதிகாரிகளும் ஊழல் பேர்வழிகள் ஆனதால், ஒருவருக்கொருவர் பிடிப்பு ஈடுபாடு! அதன் அதிகாரிகள் விழுப்புரம், சென்னை ஆகிய தொலைதூரத்தில் உள்ள உறவினர்களுடன் உறவாடுவதற்கு இந்த செல்வராஜ் கும்பல்தான் 'ஓசி' இணைப்பு செய்து கொடுக்கும்.

**மத்திய அரசின் தனி அமைச்சக நிர்வாகத்தின் கீழ்உள்ள சேவைத்துறை நிறுவனம்தான் தொலைபேசித்துறை. ஆனால் அது ஓர் அரசு நிறுவனமாக உள்ளதா? அல்லது சில முதலாளிகள், சமூக விரோதிகளின் தனியுடமைக் கம்பெனியாக உள்ளதா என்று அதன் ஊழியர்களே அஞ்சுமளக்கு அங்கே மோசடிகள் நடக்கின்றன.**



இவ்வளவு செல்வாக்குள்ள செல்வராஜ் சும்மா இருப்பாரா...? தன் கை வரிசையை மேலும் விரிவு படுத்தியுள்ளார். குழித்துறையின் முக்கியமான வாவுபலி திருவிழாவில் 10 நாடகங்கள் நகராட்சி கலையரங்கில் நடைபெறும். சில தனியார்கள் நடத்துவார்கள். கடந்த இரண்டு வருடமாக செல்வராஜ் கும்பலும் நாடகம் நடத்துகிறது. வசூல் வேட்டைக்காகத்தான்!

பினாமி பெயரில் அரங்கைப் பதிவு செய்துகொண்டு, தொலைபேசி மனமகிழ் மன்றத்தின் சார்பில் நாடகம் போடுவதாகக் கூறிக் கொண்டு, 2, 3 இயக்குநர்களோடு வசூல் வேட்டையில் இறங்கிவிடுவார். 1000 ரூபாய், 500 ரூபாய் என்று நாடக, 'டிக்கெட்' - நன்கொடை போட்டு தொலைபேசி மனமகிழ் மன்றத்தின் பெயரால் 50,000 ரூபாய் வரை வசூல் செய்து விடுவார். பிற தொலைபேசி வாடிக்கையாளர்களோ தொலைபேசி இணைப்புத் தராமலும், அதிகத் தொகை பில் போட்டும் இந்தக் கும்பல் பழி வாங்கிவிடும் என்ற பயத்தினால் கேட்டதொகையைக் கொடுத்து விடுகிறார்கள்.

நேர்மையான தொலைபேசி ஊழியர்கள் சாதாரண வாழ்க்கைக்குத் திண்டாடிக் கொண்டிருக்கையில், மேற்கொண்ட சமூக விரோத வசூல் வேட்டை நடத்தும் செல்வராஜ் பினாமி பெயரில் 'ஆட்டோ' 'பிளாட்' எல்லாம் வாங்கிக் குவிக்கிறார். இவரது மோசடி ஊழல் நடவடிக்கைகளை எல்லாம் நிர்வாகச் சிறப்புக் கண்காணிப்புப் பிரிவுக்கு (விஜிலன்ஸ்) புகார் செய்தும், அவ்வாறு செய்வது பெரிய வழக்காகிவிடும் என்று கூறி போலீசின் சிறப்புப் பிரிவிடம் ஒப்படைக்க மட்டுமே நிர்வாகம் முயன்றது. போலீசே இந்த செல்வராஜ் கும்பலின் கட்டுப்பாட்டில் இருக்கும் போது இதுவும் கண்துடைப்புதான்! தொலைபேசி ஊழியர் சங்கம் புகார் கொடுத்தும்கூட, கையும் களவுமாகப் பிடிபட்ட வழக்குகளில் கூட தகுந்த நடவடிக்கை எடுக்க மறுக்கிறது, நிர்வாகம்.

இதனால், குழித்துறை தொலைபேசியகமே செல்வராஜ் குத்தகைக்கு எடுத்துக் கொண்டதைப் போல அவரது அதிகாரம் அதிகமாகி வருகிறது. நிர்வாக அதிகாரிகள், போலீசு அதிகாரிகள், உள்ளூர் வியாபாரிகள் - முதலாளிகளது ஆதரவு இருக்கையில் செல்வராஜ் போன்ற மோசடி, ஊழல், சமூக விரோதிகளுக்கு வேறென்ன பலம் வேண்டும். பம்மபாய், டில்லி, கல்கத்தா போன்ற பெருநகரங்கள் உட்பட தொலை பேசியகங்களில் மறைமுகமாக நடக்கும் இத்தகைய முறைகேடுகள் பரவி அவை முறையாகவும் மாறிவரும் என்பதற்கு இது ஒரு சான்றாக இருக்கிறது.



படிப்பகம்

www.padippakam.com




● நமது நாட்டில் படிப்பறிவற்றவர்கள் ஏராளம். இப்பாமரர்களிடம் புரட்சிகர சிந்தனையை வளர்க்க பு.ஜ. என்ன செய்துள்ளது? என்ன செய்யப் போகிறது? — கணேசன், சாத்தூர்.

☆ படிப்பறிவற்ற உழைக்கும் மக்களிடையே புரட்சிகர சிந்தனையை வளர்ப்பதற்கு பத்திரிக்கை நேரடியாக முக்கியப் பங்காற்ற முடியாது. அப்பணியை வேறு சில வடிவங்களில் மேற்கொண்டுள்ள புரட்சியாளர்களுக்கு கருத்துத்தானம் என்கிற முறையில் உதவிகரமாகவும் வழிகாட்டியாகவும்தான் பத்திரிக்கை செயல்பட முடியும். பத்திரிக்கை மற்றும் சிறுவெளியீடுகள் மூலமாக இதைச் செய்து வருகிறோம். அரைகுறையாகப் படித்தவர்களுக்குப் பயன்படும் வகையில் படக்கட்டுரைகள் வெளியிடுவதை மேற்கொண்டுள்ளோம். இம்மாதிரியான பணிகளே இன்னும் ஏராளமாகச் செய்ய வேண்டியுள்ளது.

கையெழுத்துப் பிரதிகளாகவாவது படக்கட்டுரைகள், படக்கதைகள், கலை நிகழ்ச்சிகள், ஓரிரு ஒலி - ஒளி நாடாக்கள், அறை - அரங்கக் கூட்டங்கள் மூலமாக புரட்சியின் முன்னணியாளர்களை அரசியல் படுத்தும் பணிகளில் நமது தோழமை அமைப்புகள் ஈடுபட்டுள்ளன. ஆனால் இவை அனைத்தும் கூட எழுதப்படிக்கத் தெரியாதவர்களுக்குப் புரட்சிச் சிந்தனையூட்டுவதற்குப் போதா. எனவே உள்ளூர்ப் பிரச்சினைகளில் தலையிடுவது முதல் அரசியல் முழக்கங்களின் அடிப்படையில் இயக்கங்கள் நடத்துவது வரையிலான வேறு சிலவடிவங்களையும் அவ்வமைப்புகள் செய்கின்றன. நடைமுறையில் இவைபெரும் வீச்சை ஏற்படுத்தும் போதுதான் பெருந்திரளான மக்கள் புரட்சிகர சிந்தனை பெற முடியும்.

● 1988 நவம்பர் 15 இல் சுதந்திர பாலஸ்தீன நாட்டைப் பிரகடனம் செய்துள்ள பாலஸ்தீன விடுதலை அமைப்பின் (பி.எல்.ஓ) விடுதலைப் பாதை சரியானதா? அது மார்க்சிய லெனினியக் கோட்பாடுகளை ஏற்றுப் போராடி வரும் அமைப்பா?

— ஏ.வி.அண்ணாதுரை, ஆலத்தூர்.

☆ முதலாளித்துவ, குட்டிமுதலாளித்துவ தலைமையிலான ஒன்பது குழுக்களின் கூட்டமைப்புதான் பாலஸ்தீன விடுதலை அமைப்பு (பி.எல்.ஓ). விடுதலைப் புலிகள் உட்பட எல்லா ஈழப்போராளி குழுக்களும் மார்க்சிய - லெனினியக் குழுக்களெனத் தம்மை கூறிக்கொள்வதைப் போல பி.எல்.ஓ.வில் உள்ள சில குழுக்களும் கூறிக்கொள்கின்றன. ஆனால் இவற்றில் எவையும் மா-லெ. குழுக்கள் அல்ல. பி.எல்.ஓ.வுக்கு வெளியே டாக்டர் ஜார்ஜ் ஹப்பாஷ் தலைமையிலான பாலஸ்தீன மக்கள் விடுதலை முன்னணி (பி.எஃப்.எல்.பி) என்ற டிராட்ஸ்கிய அமைப்பும் ஒன்றுள்ளது.

பெருமளவு சர்வதேச ஆதரவு பெற்றிருப்பது பாலஸ்தீன விடுதலை இயக்கம். இருந்தும் குட்டி முதலாளித்துவ, முதலாளித்துவ தலைமையின் காரணமாக தீர்க்கமான, சரியான பாதையின்றி பின்னடைவுக்குள்ளாகி இருக்கிறது. பிற்போக்கு அரசு-அரசர்களையும், இராணுவ சர்வாதிகாரிகளையும், ருஷ்ய சமூக ஏகாதிபத்தியத்தையும் சார்ந்து சீரழிவுக்கும் துரோகத்துக்கும் பலியாகி இருக்கிறது. உலகின் வேறுபிற விடுதலை இயக்கங்கள் எதிர்கொள்ளாத வேறுபிற பிரச்சினைகளுக்கும் அது முகங்கொடுக்க வேண்டியிருப்பதைச் சிறப்பாகக் குறிப்பிட்டாக வேண்டும்.

அதாவது பாலஸ்தீனப் போராளிகள் நின்று போரிடுவதற்கான போர்க்களம் எதுவும் கிடையாது. சொந்த மண்ணிலேயே அகதிகள் மற்றும் சித்திரவதை முகாம்களிலேயே இஸ்ரேலிய இனவெறி இராணுவக் கண்காணிப்பின் கீழ்தான் பெரும்பான்மையான மக்கள் வைக்கப்பட்டுள்ளனர். எஞ்சிய பாலஸ்தீனர்கள் லிபியா, ஜோர்டான், லெபானான், சிரியா முதலிய அரபு நாடுகளில் உள்ள அகதிகள் முகாம்களில் வாழுகின்றனர். இதன் காரணமாக எதிரிகளின் மீது புரட்சிகரப் பயங்கரவாதத் தாக்குதல்கள் தொடுக்கும்படியான நிர்ப்பந்தத்துக்கு பாலஸ்தீன போராளிகள் தள்ளப்பட்டுள்ளனர். ஆனால் அரபு மதவாதிகளும், இராணுவ சர்வாதிகாரிகளும் தமது சொந்த அரசியல் நலன்களுக்காக சில தொழில்முறை பயங்கரவாதக் குழுக்களைக் கட்டி, தாக்குதல்கள் நடத்தி பாலஸ்தீன போராளிகள் மீது பழிபோடுவதும் நடக்கிறது. இப்படிப் பல பலவீனங்கள் இருப்பினும் பாலஸ்தீன மக்களுக்கெதிரான யூத ஜியோனிச இனவெறி பாசிசத்தாக்குதல்கள் அக்கிரமமானவை, கொடூரமானவை. அவற்றுக்கெதிரான பாலஸ்தீன விடுதலைப் போர் நியாயமானது. அரசியல் முன்முயற்சியையும் சர்வதேச ஆதரவையும் பெறுவதற்கான முயற்சியாக சுதந்திர பாலஸ்தீனப் பிரகடனம் அவசியமானதுதான். அது இஸ்ரேலிய ஆக்கிரமிப்பாளர்களை மேலும் தனிமைப்படுத்தியுள்ளது.

● 'புரட்சிக் கவிஞர்', பாவேந்தர் பாரதிதாசன் பற்றி உங்களது கருத்து என்ன? அவர் திராவிட இயங்கங்களை ஆதரித்தார் என்பதற்காக அவரை நீங்கள் புறக்கணிப்பது சரியா?

பல வாசகர்களிடமிருந்தும் வந்துள்ள கேள்வி.

☆ இந்த நூற்றாண்டின் தலை சிறந்த சீர்திருத்தத் தமிழ்க் கவிஞர்களில் ஒருவர் பாவேந்தர் பாரதிதாசன் என்று கருதுகிறோம். ஆனால் அவர் ஒரு புரட்சிக் கவிஞர் என்று கருதுவதற்கில்லை. குட்டிமுதலாளித்துவ, தேசிய முதலாளித்துவ அமைப்புகளாக இருந்தபோது திராவிட இயக்கங்கள் பின்பற்றிய சீர்திருத்தக் கருத்துக்களைத்தான் செறிவானமுறையில் பாரதிதாசன் வெளிப்படுத்தினார். ஆனால் திராவிட இயக்கம் காரியவாத பிழைப்புவாத இயக்கமாகவும், ஆளும்வர்க்கங்களின் எடுப்பிடியாக மாறிய போது பாரதிதாசன் அதை எதிர்க்கவில்லை. பாரதிதாசனைப் புரட்சிக் கவிஞர் என்று போற்றும் 'கம்யூனிசப் புரட்சிக்காரர்கள்'தான் அவர் திராவிட இயக்கத்தைவிட மாறுதலாக எந்த வகையில் புரட்சிகரமானவராய் இருந்தார் என்பதைக் கூற வேண்டும். அவரது இலக்கியப் படைப்புகளை மட்டும் வைத்து வரலாற்று மதிப்பீடு செய்வது அறிவியல் பூர்வமானதாகவும் இராது.

**இந்த நூற்றாண்டின் தலை சிறந்த சீர்திருத்தத் தமிழ்க் கவிஞர்களில் ஒருவர் பாரதிதாசன். ஆனால் அவர் ஒரு புரட்சிக் கவிஞர் என்று கருதுவதற்கில்லை. பாரதிதாசனைப் புரட்சிக் கவிஞர் என்று போற்றும் 'கம்யூனிசப் புரட்சிக்காரர்கள்'தான் அவர் திராவிட இயக்கத்தைவிட மாறுதலாக எந்த வகையில் புரட்சிகரமானவராய் இருந்தார் என்பதைக் கூற வேண்டும்.**

பாரதிதாசன் இனவிடுதலை இலக்கியத்தில் உறுதியாக இருந்தார் என்று பலரும் கூறுகின்றனர். ஆனால் 1962 இல் இந்தியா சீன ஆக்கிரமிப்புப் போர்தொடுத்த போது, பிரிவினைத்தடைச் சட்டம் வருமென நேரு அரசு மிரட்டிய போது திராவிட நாடு கோரிக்கையைக் கைவிட்டது தி.மு.க.; அதோடு இந்திய தேசிய வெறியை ஏற்று அதன் ஆக்கிரமிப்புப்போருக்கு ஆதரவாகப் பிரச்சாரம் செய்து, நிதி திரட்டியது. பாரதிதாசனும் இந்த நிலையை ஏற்று "சீனப் படையெடுப்பை எதிர்த்து அனைத்திந்திய மக்களை வீறுகொண்டெழும்படி" பாடல்கள் எழுதினார். அப்போது காங்கிரசு அரசு கவிஞர்கள், எழுத்தாளர்கள் கூட்டத்தைக் கூட்டி "தேச"பக்திப் பிரச்சாரம் செய்வதற்காக கலை நிகழ்ச்சிகள், நாடகங்கள், நாட்டியங்கள் எழுதித்தரும்படி கோரியது. அக்கூட்டத்தில் கலந்து கொண்டு இசைவு தெரிவித்த பாரதிதாசன் அரசு செலவில் நடத்துவதற்காக 'இந்தியாவின் பெருமையையும் சீனத்தின் சிறுமையையும் மக்களுக்குத் தெரிவிக்க' நாட்டிய நாடகம் ஒன்றை எழுதவும் முயன்றார். இன உணர்வைக் கைவிட்டு "இந்திய தேசிய வெறி"க்கு பாரதிதாசனும் பணிந்து



படிப்பகம்

www.padippakam.com

போனதையே இது குறிக்கிறது. திராவிட இயக்கப் போக்கிலிருந்து மாறுபட்டவராய் பாரதிதாசன் இருக்கவில்லை என்பதற்கு இது ஒரு சான்றாகும்.

● **சில நூறு ஆண்டுகளுக்கு முன் இந்தியாவில் நுழைந்த அரபு மொழியும், உருதுமொழியும் மதபோதனைக்காகவும் இரண்டாம் நிலை ஆட்சி மொழியாக (உருது) சில மாநிலங்களிலும் இருக்கும் போது.**

**ஆயிரம் ஆண்டுகள் பழமையானதும், பல காவியங்களையும் உள்ளடக்கியதும், தமிழுக்கு நிகரான தொன்மையும் வாய்ந்த சமஸ்கிருதம் தேசியமொழிப் பட்டியலில் இருந்து நீக்கப்பட வேண்டும் எனத் தங்களது தோழமை அமைப்பு ம.க.இ.க. சுவரெழுத்து எழுதுவது மனச்சாட்சிக்கு விரோதமான செயல் என்பது தங்களுக்குத் தெரியாதா? அல்லது அவ்வாறு நீக்கச் சொல்வதற்கான காரணங்களைத் தகுந்த ஆதாரங்களுடன் விளக்குக!**

***— சிவக்குமார், திருச்சிராப்பள்ளி.***

☆ வாசகர் சில விவரங்களைத் தவறாகக் கொடுத்துள்ளார். உருது மொழி வெளியிலிருந்து இந்தியாவுக்குள் நுழைந்தது அல்ல. அரபு, பாரசீக மொழிகள் இந்திய மொழிகளுடன் இணைந்து இங்கேயே உருவானதுதான் உருது. இந்தியத் துணைக் கண்டத்தில் மட்டுமே புழங்கப்படும் மொழி; இந்திய மக்கள் தொகையில் 10% விகிதத்தினரின் தாய்மொழி உருது. உருதுமொழியை அடிப்படையாக வைத்து வடஇந்திய மொழிகளின் எழுத்து வடிவத்தைக் கொண்டு உருவாக்கப்பட்டதுதான் இந்தி! எனவேதான் உருது, இந்தி ஆகியவற்றில் எதுபேசினாலும் அவற்றைத் தாய்மொழிகளாகக் கொண்டவர்களால் புரிந்து கொள்ள முடிகிறது. வடஇந்திய எழுத்தாளர்களும், அரசியல்வாதிகளும் உருது இலக்கியங்களைச் சரளமாகப் பேசுவதும் இதனால்தான். 60க்கும் மேற்பட்ட இந்திமொழிப் பிரிவுகள் உள்ள வடஇந்தியாவில் ஒருவகையில் அம்மக்களின் பொது மொழியாக இருப்பதுவே உருதுதான்! எனவேதான் 'இந்திச் சினிமாக்களின் வசனம், பாடல்களில் உருதுமொழி உள்ளன! எழுத்துக்கள் மட்டும்தான் புதிதாக உருவாக்கப்பட்ட இந்தி வரிவடிவத்தைக் கொண்டிருக்கின்றன!

அரபுமொழி நமது நாட்டிலுள்ள இஸ்லாமிய மதபோதனைக் கல்வி நிறுவனங்களிலும், தனிச்சிறப்பான பள்ளி - கல்லூரிகளிலும் ம்ட்டுமே போதிக்கப்படுகிறது. அரபுமொழி அரபுநாடுகளிலும் உருது இந்தியத் துணைக் கண்டத்திலும் மக்கள் புழக்கத்தில் எழுதப்படிக்கப் பயன்படுத்தப்படுகின்றன. ஆனால் சமஸ்கிருதம் எந்தக் காலத்திலும் எந்த நாட்டிலும் மக்கள் பயன்படுத்துவதற்கான மொழியாக இருந்ததில்லை; அதற்குத்தடையும் விதிக்கப்பட்டிருந்தது.

சமஸ்கிருதத்தை ஒரு மொழியாக மட்டும் கருத முடியாது-அது நமது நாட்டில் பெரும்பான்மையினரான உழைக்கும் மக்களுக்கு எதிரான சாதி, வருணாசிரம, மத ஒடுக்குமுறையின், பார்ப்பன சனாதன ஆதிக்கத்தின் கருவியாக இருக்கிறது. சமஸ்கிருதக் காவியங்கள் எனப்படுபவைகள் எல்லாம் இந்த ஒடுக்குமுறை, ஆதிக்கத்தைப் போதிக்கும் வேதங்களும் - உபநிசதங்களும் இதிகாசபுராணக் கட்டுக்கதைகளும் ஆபாசங்களும்தான். இந்த உண்மையைத் தெரிந்து கொள்ளக் கூடாது என்பதற்காகத்தான் ''சூத்திரர்களும், பஞ்சமர் - சண்டாளர் ஆகிய அத்தி சூத்திரர்களும்'' அதைப் பேசினால் நாக்கை அறுப்பதையும், கேட்டால் காதிலே ஈயத்தைக் காய்ச்சி ஊற்றுவதையும் தண்டனையாக வைத்தார்கள். ''தேவபாஷை'' - கடவுள் மொழி என்று 'இரகசிய'மாக வைத்துக் கொண்டார்கள். இந்த அடிப்படையில்தான் பார்ப்பனரல்லாதார் கோவில் அர்ச்சகராவது, கோவில்களில் தமிழில் அர்ச்சனை நடத்துவது போன்றவற்றைப் பார்ப்பனர்கள் எதிர்க்கிறார்கள். அர்ச்சகர்கள், ஓதுவார்கள், புரோகிதர்களாக இருக்கும் பார்ப்பனர்களே கூட சமஸ்கிருத சுலோகங்களை மனப்பாடம் செய்து ஒப்பிக்கும் பிழைப்பு நடத்துகிறார்களே தவிர அவற்றின் பொருள் அறிந்து செய்பவர்கள் அல்ல. வேதபராயணம் செய்யும் பார்ப்பனர்கள் கூட ஒரு சில சமஸ்கிருத சுலோகங்களைச் சொல்லி விட்டு இப்போதைய நிலைமைக்கேற்ப பூசிமெழுகிக் கவர்ச்சியூட்டிச் சமாளிக்கின்றனர்.

பூணூல் அணிவது, தார்பாச்சு - பஞ்சகச்சம் கட்டிக் கொள்வது, அக்கிரகாரத்தில் வாழ்வது போன்றவை எவ்வாறு வருணாசிரம, சாதி - மத, பார்ப்பன சனாதன ஆதிக்கத்தின் சின்னங்கள் - வழக்கங்களோ அதே போலத்தான் சமஸ்கிருதமும். ஒவ்வொருமுறை சமஸ்கிருத சுலோகங்களைச் சொல்லும் போதும் அதன் 'காவியங்களை' பாராயணம் செய்யும்போதும் மக்களை இழிவுபடுத்துவதாகத்தான் பொருள். இன்னும் சொல்வதானால் உழைக்கும் மக்களின் பிறப்பைக் குறித்தும் ஏசுவதாகும். இவ்வாறு, நாட்டின் எந்தப்பகுதி மக்களும், எந்தக்காலத்திலும் புழக்கத்தில் வைத்துக்கொள்ளாத, வருணாசிரம, சாதி, மத ஒடுக்குமுறையின் கருவியாக இருந்த, மூடத்தனம், ஆபாசம், புனைச்சுருட்டுகள் நிறைந்த மொழி தேசிய மொழியாக அங்கீகரிக்கப்பட்டு பள்ளி - கல்லூரிகளில் போதிக்கப்படுகிறது; வானொலி - வானொளி மூலம் திணிக்கப்படுகிறது; அதன் வளர்ச்சிக்காகக் கோடி கோடியாகக் கொட்டப்படுகிறது. எதற்காக? பார்ப்பன சனாதன ஆதிக்கத்தை நியாயப்படுத்தவும், நிலைப்படுத்தவும்தான்!

**ஒவ்வொருமுறை சமஸ்கிருத சுலோகங்களைச் சொல்லும் போதும் அதன் 'காவியங்களை' பாராயணம் செய்யும் போதும் உழைக்கும் மக்களை இழிவுபடுத்துவதாகத்தான் பொருள். அது அவர்களின் பிறப்பைக் குறித்து ஏசுவதாகும். இட்லரின் பாசிச சின்னங்கள் எவ்வாறு தேசிய அவமானங்களாகக் கருதி ஒழிக்கப்பட்டனவோ அவ்வாறு வருணாசிரம, சாதிமத,பார்ப்பன சனாதன ஆதிக்கச் சின்னங்களை - வழக்கங்களை அவமானங்களாகக் கருதி ஒழிக்க வேண்டும்.**

சமஸ்கிருதத்தை ஆராய்ச்சியாளர்கள் பயில்வதையாரும் எதிர்ப்பதில்லை. ஆனால் தேசிய மொழியாக்கி வளர்க்க முயல்வதையும், கோவில்பூசைகள், பிறப்பு - இறப்பு, மணவிழா போன்ற சடங்குகளில் பயன்படுத்துவது போன்றவற்றை அனுமதிக்கக் கூடாது. இட்லரின் பாசிச சின்னங்கள் எவ்வாறு எப்படி தேசிய அவமானங்களாகக் கருதி ஒழிக்கப்பட்டனவோ அவ்வாறு வருணாசிரம சாதிமத பார்ப்பன சனாதன ஆதிக்கச் சின்னங்களை - வழக்கங்களை அவமானங்களாகக் கருதி ஒழிக்க வேண்டும். அதற்கான இயக்கத்தின் ஒரு பகுதியாகத்தான் மக்கள் கலை இலக்கியக்கழகம் சமஸ்கிருத எதிர்ப்பு இயக்கம் நடத்துகிறது. அது சரியானதுதான்!

● **ஒரு புதிய ஜனநாயகம் தலையங்கத்தில் (இரத்த வெள்ளத்தில் இந்தியா) ஆர்.எஸ்.எஸ். போன்ற பயங்கரவாத அமைப்புகளின் வன்முறைச் செயல்கள் பற்றியும் ஆந்திராவில் நடந்த ரெயில் தீ வைப்பு சம்பவம் பற்றியும் எழுதியிருந்தீர்கள். அதைச் செய்தது மக்கள் யுத்தக்குழுதான் என்று பத்திரிக்கைகளும் போலீசும் சொல்வதாகவும் அக்குழு மறுத்து இருப்பதாகவும் எழுதி உள்ளீர்கள். போலீசும் பத்திரிக்கைகளும் சொல்வது எல்லாவற்றிலும் வேறுபட்டு எழுதும் நீங்கள் ஏன் இதில் உங்கள் கருத்தை வைக்கவில்லை. அச்சம்பவத்தை மக்கள் யுத்தக் குழுதான் செய்தது என்று சொல்ல உங்களுக்குப் பயமா? இக்குழுதான் செய்தது அல்லது செய்யவில்லை என்று எழுதவேண்டியதுதானே. ஆந்திராவில் உள்ள புரட்சியாளர் என்று சொல்லும் மக்கள் யுத்தக் குழுவும் ஆர்.எஸ்.எஸ்சும் ஒன்று என்பதைப்பற்றி உங்களின் தெளிவான பதிலை எதிர்பார்க்கிறோம்.**

***— மீனவன், இராமேசுவரம்.***

☆ புரட்சிகர அமைப்புகளுக்குள் 'சிண்டு முடிந்து விடுவது, கொம்பு சீவிவிடுவது' ஆகிய வேலைகளில் சில குழுக்களும், நபர்களும் ஈடுபட்டுள்ளனர். வாசகரின் கேள்வி அத்தகைய தொனியில் இருக்கிறது. இருப்பினும் பொறுப்புணர்வோடு பின்வரும் பதிலைத் தருகிறோம். அத்தலையங்கம், சம்பவம் நடந்த ஒரு சில நாட்களில் எழுதப்பட்டது. உறுதிப்படுத்த இயலாத நிலையில் செய்தியாக மட்டும் கொடுத்தோம். இன்னமும் அதேநிலை நீடிக்கிறது. முரண்பட்ட தகவல்கள்தான் கிடைத்துள்ளன. புரட்சிகர மார்க்சிய - லெனினியக் குழுவான மக்கள் யுத்தக்குழுவும் அதற்கு நேரெதிரான மதவெறி பாசிச ஆர்.எஸ்.எஸ்.சும் ஒன்று என்பது பச்சைப் புளுகும் அவதூறுமாகும். மக்கள் யுத்தக் குழுவுடன் கருத்து வேறுபாடு கொண்டு அதை விமர்சிப்பதாலேயே இவ்வாறு இட்டுக்கட்டிக் கூறுவதை சகித்துக் கொள்வோம் என்று எதிர்பார்ப்பது முட்டாள்தனமானது.

படிப்பகம்

www.padippakam.com



# சிவந்த கண்கள் கவனிக்கட்டும்

கடந்த மாதம் ஹரியானா சென்ற தேவிலாலுக்கு அவரது பரிவாரங்கள் தங்க கிரீடம், வெள்ளி கைத்தடி, ரூபாய் நோட்டு மாலையெல்லாம் அணிவித்து வரவேற்றார்கள். மாநில அரசு அதிகாரிகள் அனைவரும் பத்து நாட்களாக வரவேற்பு வேலைகளையே கவனித்தனர். பல லாரிகளில் 15000 பேரை திரட்டிக் கொண்டு வந்து பெரிய ஊர்வலமே நடத்தினார்கள். இந்த களேபரங்களுக்கு மத்தியிலும் மேகம் தேர்தல் படுகொலை நாயகர்களுக்கு தக்க பதிலடி கொடுத்தார்கள், ஒரு கிராமத்து மக்கள். செருப்புகளால் ஆன ஒரு பெரிய அலங்கார வளைவு, அதன் நடுவே செருப்பு மாலையணிந்த தேவிலால் படம், சைக்கிள் டயர் மாலையணிந்த செளதாலா படத்தை சுமந்த படி கழுதை... என்ற முறையில் வரவேற்பு அமைத்து எதிராக கோஷமெழுப்பினர். ஊர் பஞ்சாயத்தை வேறு கூட்டி அடுத்த தேர்தலில் தேவிலாலை புறக்கணித்து டாங்கிக்கு (எதிரணி) ஓட்டுப் போடவேண்டும் என முடிவெடுத்திருக்கிறார்கள். அரண்டுபோன தேவிலால் கும்பல் பஞ்சாயத்து தலைவர்களை விலைபேசி இழுக்கும் முயற்சியில் குதித்துள்ளது.

கோர்ப்பசேவின் முதலாளித்துவ சீர்திருத்தங்கள் ரஷ்யாவை இந்தியாவிடமே கையேந்தும் நிலைக்கு தள்ளிவிட்டன. ரஷ்யாவில் உணவு பஞ்சம் - அத்தியாவசிய பொருள் தட்டுப்பாடு உச்ச நிலையை எட்டியிருப்பது அறிந்தே! அமெரிக்கா, ஜப்பான், ஜெர்மன் முதலிய நாடுகள் உதவியது போக இன்று இந்தியாவும் ரஷ்யாவுக்கு உதவ முன் வந்துள்ளது. 20,000 டன் எடையுள்ள அரிசி மற்றும் குறிப்பிட்ட அளவு பால்பவுடர், மருந்து வகையறாக்களை இலவசமாகவும், ஒரு மில்லியன் டன் கோதுமையை கடனாகவும் கொடுக்க தீர்மானித்துள்ளது. இதை பெருமையாக காட்டி இந்தியா வளர்ச்சியடைந்து விட்டதாக அதிகாரிகள் பீற்றி திரிகிறார்கள். அதுசரி, இந்தியாவில் உணவு பஞ்சமும் அத்தியாவசியப் பொருட்களின் தட்டுப்பாடும் முற்றி வருகிறதே அதற்கு என்ன செய்யப் போகிறார்கள்?

அரசாங்கம் மேற்கொண்டு வரும் கண்துடைப்பு வேலைகள் அதன் அதிகாரிகளே சகித்துக் கொள்ள முடியாமல் போய்விட்டன. முன்பு அரியானா மேகம் தேர்தல் கொலைகளை விசாரிக்கப் போட்ட கமிஷன் அதிகாரி நீதிபதி மதோன் வெறுப்புற்றுப் பதவி விலகினார். இப்போது தாழ்த்தப்பட்ட - பழங்குடி மக்கள் கமிஷன் அதிகாரி பி.டி. சர்மா பதவி விலக முடிவு செய்துவிட்டார். அம்மக்களின் மேம்பாட்டுக்குத் தாம் கொடுத்த அறிக்கையை எந்த அரசும் அமுலாக்க மறுக்கிறது என்பது அவரது புகார். குறிப்பாக, நர்மதா, தேரி போன்ற பூதாகரமான அணைகள் கட்டி இயற்கை வளங்கள் மீதான மலைவாழ் மக்களது அடிப்படை உரிமைகளை அரசு பறிக்கிறது; அதன் மூலம் அவர்களது வாழ்வுரிமையையே மறுக்கிறது என்று குற்றஞ்சாட்டுகிறார்.

கல்பாக்கம் அணு உலை அடிக்கடி இயங்காமல் நிறுத்தி வைக்கப்படுகிறது. இதன் உதிரி பாகங்களும், குழாய்களும் சேதமடைந்துள்ளது. இவை அவ்வப்பொழுது பழுது பார்க்கப்பட்டு மீண்டும் உத்தரவாதமற்ற முறையிலேயே இயக்கப்படுகிறது. எஃப்.பி.டி.ஆர். எனும் இந்த பழைய மின் உற்பத்தி முறை கையாள்வதற்கு மிகவும் கடினமானதும், ஆபத்து மிகுந்ததுமாகும் என்கிறார்கள் விஞ்ஞானிகள். கதிரியக்க கதிர்கள் கசிந்து தொழிலாளர்களையும் அவர்களது குடும்பத்தினரையும் பெரிதும் பாதிக்கிறது. 1988ல் கேன்சர் நோய் பாதிக்கப்பட்டு 27 பேர் இறந்தனர். ஆனால், உண்மை நிலையை அதிகாரிகள் வெளியிட மறுக்கிறார்கள். தொழிலாளர்களையும் வெளியிட முடியாத வண்ணம் சட்டம் போட்டு மிரட்டுகிறார்கள். நமது வரிப்பணத்தைச் செலவிட்டு நமது உயிருக்கே உலைவைக்கும் திட்டத்தை கூடங்குளத்தில் வேறு தொடங்கப் போகிறார்களே. இவர்களை (ஆட்சியாளர்களை) என்ன செய்யலாம் சொல்லுங்கள்?

அயோத்தி பாபர் மசூதி பிரச்சினையில் மட்டுமல்ல லண்டனிலும் ஆர்.எஸ்.எஸ். கும்பல் தன் கைவரிசையை காட்டியுள்ளது. லண்டன் பி.பி.சி. நிறுவனம் '90-ம் ஆண்டின் சிறந்த மனிதர் விருது வழங்க இங்கிலாந்து இந்தியர்கள் மத்தியில் வாக்கெடுப்பு நடத்தியது. இதில் ஆர்.எஸ்.எஸ். குண்டர்கள் கும்பல் கும்பலாக போலி பெயர்களிலும், ஒரே பெயர்களிலும் கள்ள ஓட்டு போட்டு அத்வானியை தேர்ந்தெடுத்தார்கள். இது அம்பலமானதும் அத்வானியின் தேர்வை ரத்து செய்துள்ளது, பி.பி.சி. நிறுவனம். ஒழுங்கு, கட்டுப்பாடு, நேர்மை, புனிதம்... என்றெல்லாம் புளுகும் ஆர்.எஸ்.எஸ்.கும்பலின் யோக்கியதை இந்தியாவில் மட்டுமல்ல உலகளவில் நாறுகிறது.

சர்ச்சைக்குரிய(!) 'சாத்தானின் கவிதைகள்' நூலை எழுதிய சல்மான் ருஷ்டி பிறப்பில் ஒரு காஷ்மீர் முஸ்லீம். நான் மதப் பற்று உள்ளவன் அல்ல - முஸ்லீம் அல்ல என்று அறிவித்து பல்வேறு எதிர்ப்புகளுக்கு எதிராக உறுதியுடன் இருந்தவர், அண்மையில் லண்டனில் மதத் தலைவர் முகம்மது அலி மொகோப் முன்னிலையில் முஸ்லீம் மதத்திற்கு மாறி, ''நான் எழுதியது எல்லாம் ஏற்றுக் கொள்ள முடியாதவை - தவறுதான்'' என்று மன்னிப்பு அறிக்கை வெளியிட்டுள்ளார். தமக்கு எதிராக வந்த எதிர்ப்புகளும் கொமெய்னியின் கொலை மிரட்டலும் காலப்போக்கில் மறைந்து விடும் என்று எதிர்பார்த்தவர், கொமெய்னியின் இறப்பிற்குப் பின்னும் தம்மை கொல்லும்படியுள்ள ஈரான் மதச் சட்டம் தொடரவே உயிருக் கஞ்சி எடுத்த முடிவுதான் இது என்பதில் சந்தேகமில்லை.

மணிப்பூரில் போதைப் பொருள், விபச்சாரம், ஆபாச சினிமா - வீடியோ பெருகி அன்றாடம் கற்பழிப்பு - கொலை சம்பவங்கள் நடப்பதும், எய்ட்ஸ் நோய் பரவுவதும் சகஜமாகிவிட்டது. 8 வயது சிறுமியை அவளது தந்தையின் நண்பர் கற்பழித்துள்ளார் என்றால் பார்த்துக் கொள்ளுங்கள்! சென்ற வருட ஆய்வில் 1564 பேரில் 54% பேருக்கு எய்ட்ஸ் நோய் அறிகுறி இருப்பதாக கண்டு பிடிக்கப்பட்டது. இச்சீரழிவுகளுக்கு அரசும் போலீசும் உடந்தையாக இருக்கிறது. மக்கள் விடுதலைப்படை (PLA) என்ற அமைப்பு இச்சீரழிவுகளுக்கு எதிராக நடவடிக்கைப் பூர்வமாக போராடி வருகிறது. போதைப் பொருள் விற்பவனை - கடத்துபவனை தண்டிப்பது, விபச்சார விடுதி முதலாளிகளை எச்சரித்து - மறுத்தால் கொல்வது, வீடியோ பார்லர்களில் ஆபாச கேசட்டுகளை கைப்பற்றி கொளுத்துவது... போன்ற நடவடிக்கைகளால் பெண்கள் அமைப்புகள் மத்தியிலும் மக்கள் மத்தியிலும் செல்வாக்கு பெற்று விளங்குகிறது மக்கள் விடுதலைப்படை.

கியூபா அதிபர் பிடல் காஸ்ட்ரோவின் 'பெருமைமிகு' பிரபலமான முகத் தோற்றத்தை அழிக்க - அவரது தாடிமயிரை அழிக்க '60களில் அமெரிக்க உளவு நிறுவனமான சி.ஐ.ஏ. பலமுறை முயற்சித்ததாம். இதுதவிர அவரைக் கொல்ல குறைந்தது 8 சதிகள் மேற்கொள்ளப்பட்டன என்று எட்வர்டு என்ற அமெரிக்க நாடாளுமன்ற உறுப்பினரே பகிரங்கமாக அறிவித்துள்ளார். காஸ்டிரோவின் பேனாவில் விஷப் பொடி




படிப்பகம்

www.padippakam.com

யைத் தடவுவது, அவரது சுருட்டில் நச்சு மருந்தைக் கலப்பது, தாடிமயிரை சிதைக்க முகப்பவுடருடன் நச்சுப் பொடியைக் கலப்பது முதலான பலவகை சதிகள் மேற்கொள்ளப்பட்டன. இதுவன்றி 1954-ல் குவாத மாலா நாட்டில் ஆட்சிக் கவிழ்ப்பை நடத்தியது, 1955-ல் சீனாவுக்கு எதிராக தலாய் லாமா எதிர்ப்புரட்சி கும்பலுக்கு பயிற்சியும் ஆயுத உதவியும் அளித்தது, ஈராக்கிலுள்ள குர்திஷ் இன மக்களின் போராட்டத்தை ஆதரித்து ஆட்சியைச் சீர்குலைக்க ஏவியது முதலான அமெரிக்க உளவு நிறுவனத்தின் அடுக்கடுக்கான சதிகளை அம்பலப்படுத்திக் காட்டியுள்ளார்.

போதைப் பொருள் கட்டுப்பாட்டு குழுவால் தடை விதிக்கப்பட்டிருந்த கோவா அஞ்சுனா கடற்கரைச் சந்தையை மீண்டும் திறந்து விட்டார்கள். வாராந்திர வியாபாரிகள் சங்கம், கவிழ்க்கப்பட்ட முதல்வர் பார்போசா, சிவசேனா பஞ்சாயத்துத் தலைவர் காமிலே டிசோசா போன்றவர் ஆதரவோடு இது நடக்கிறது. நிர்வாண ஹிப்பிகள் திரியும் இக்கடற்கரையில் 2 ரூபாய் வாடகை கொடுத்து போதைப் பொருள்கள் உட்பட அவர்களின் தேவைக்கான "அனைத்தும்" விற்கப்படுகின்றன. இதனால் பள்ளிச் சிறுவர்களும் போதையுடனே வீடு திரும்புவதாக பெற்றோர்கள் புலம்புகின்றனர்.

1977 ஆம் ஆண்டு. பீகார் - பெல்ச்சியில் தாழ்த்தப்பட்ட மக்கள் குர்மி நிலப் பிரபுக்களால் உயிரோடு கொளுத்தப் பட்டார்களே நினைவிருக்கிறதா? இப்போது அங்குள்ள தாழ்த்தப்பட்டோர் நிலை என்ன தெரியுமா? அதே குர்மி நிலப் பிரபுக்களுக்கு 9 மணிநேரம் உழைத்து ஒரு கிலோ அரிசி கூலி வாங்கிப்போய் வயிற்றைக் கழுவி, கொத்தடிமைகளாக வதைகிறார்கள். பாசிச ஆட்சி நடத்தி பதவியிழந்திருந்த இந்திரா சாலை வசதியே இல்லாத அக் குக்கிராமத்துக்குப் போய் ஆறுதலும் வாக்குறுதிகளும் வழங்கினார். காங்கிரசு முதல்வர், பாட்னாவுக்கு அழைத்து பெரும்விழா நடத்தி பெல்ச்சியின் 30 குடும்பங்களுக்கு நிலம் தருவதாக அறிவித்தார். ஆனால் பட்டா கூடத் தரப்படாத மேட்டு நிலங்களான அவை தரிசாகத்தான் கிடைக்கின்றன. காங்கிரசு - ஜனதா - காங்கிரசு - ஜனதா என ஆட்சிகள் மாறினாலும் தாழ்த்தப்பட்டவர் அடிமை வாழ்வும், நிலப் பிரபுக்களின் கொட்டமும் மாறவில்லை.



பெல்ச்சிக்கு யானை மீது போய் சேர்ந்த இந்திரா

## சென்னையில் கள்ளச்சாராய சாம்ராஜ்ஜியம்

### போலீசு - ரயில்வே - மின்வாரிய அதிகாரிகள் உடந்தை

போலீஸ் அனுமதியுடன் கள்ளச்சாராயக் கடைக்கு போகும் வழி - என்று தட்டிகளில் எழுதி சென்னை ம.க.இ.க., வில்லிவாக்கத்தில் உள்ள கள்ளச்சாராயக் கடைக்கு எதிராக 30.12.90 அன்று ஆர்ப்பாட்டம் நடத்தியது. சாராயக் கடையைச் சுற்றி கட்டப்பட்ட இத்தட்டிகள் மக்கள் மத்தியில் சிறந்த வரவேற்பை பெற்றது. கடைக்கு எதிராக ஒரு மணி நேரம் ஆர்ப்பாட்டம் நடத்திவிட்டு பின் மார்க்கெட் பகுதியில் 2 இடங்களில் ஊர்வலமாகச் சென்று ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

ஐந்து நாட்களுக்குப் பின் ஒரு போலீஸ் படை கள்ளச் சாராயக் கடைகளை - விற்பனையை ஒழிக்கப் போவதாக 5 மணி நேரமாக தேடுதல் நாடகமாடி சிலரை கைது செய்தது. அத்தோடு சில சிறு வியாபாரிகள் மீது போக்குவரத்துக்கு இடையூறாக கடை போட்டனர் என 50, 60 ரூபாய் அபராதம் வசூலித்து சென்றது. ஆனால், அடுத்த நாளிலிருந்தே மாமூல் கள்ளச் சாராய விற்பனை தொடர்ந்து நடைபெறுகிறது.

சென்னை வில்லிவாக்கம், கள்ளச் சாராய சாம்ராஜ்ஜியத்திற்கு பெயர் போனது. ஆந்திராவிலிருந்து ரயிலில் கள்ளச் சாராயம் கடத்தப்படுகிறது. இரவில் அன்றாடம் ஒரு குறிப்பிட்ட நேரத்தில் பகுதியில் உள்ள விளக்குகள் எல்லாம் அணையவும் அந்த ரயில் நிற்கவும் கள்ளச் சாராயம் முறையாக கடத்தப்படுகிறது. போலீசு மட்டுமல்ல; ரயில்வே அதிகாரிகள், மின் வாரிய அதிகாரிகள் உட்பட அனைவரும் கடத்தல் கும்பலுக்கு உடந்தை.

இப்பகுதியில் கள்ளச்சாராய விற்பனையை பலர் குடும்பம் குடும்பமாக செய்து வருகின்றனர். இவர்கள் "எங்கள் பிழைப்பில் ஏன் மண்ணைப் போடுகிறீர்கள்?" என்று கேட்டதற்கு தோழர்கள் தகுந்த விளக்கம் தந்தனர். இத்தொழிலை நிறுத்திவிட்டு அரசாங்கத்திடம் நிவாரணமும் வேலையும் கேட்டு போராடும்படியும் அதற்கு தாங்கள் ஒத்துழைப்பு தருவதாகவும் எடுத்துரைத்தனர்.

ஆர்ப்பாட்டம் செய்த அன்று மாலையே ம.க.இ.க. தோழர் ஒருவரை கள்ளச்சாராய பேர்வழி மிரட்டினான். இன்றும் கள்ளச்சாராய கும்பல் தோழர்களை பல வகையில் மிரட்டி வருகிறது. இதற்கெல்லாம் புரட்சியாளர்கள் அஞ்சி முடங்கி விடுபவர்கள் அல்ல என்பதை ம.க.இ.க. தோழர்கள் நிரூபித்து வருகின்றனர்.

படிப்பகம்

www.padippakam.com

# போலிக் கம்யூனிஸ்டு ஆட்சியில் ஆர்.எஸ்.எஸ். அமோக வளர்ச்சி

**இந்துமத வகுப்புவாதம்தான் நாட்டின் பிரதான அபாயம். அதை எதிர்க்க காங்கிரசு உட்பட யாருடனும் கூட்டு என்றும் இடதுசாரி ஜனநாயக முன்னணி அதை வீழ்த்தும் என்றும் போலிக் கம்யூனிஸ்டுகள் கூறுகின்றனர். ஆனால் அவர்கள் ஆளும் மாநிலங்களில் ஆர்.எஸ்.எஸ். அமோக வளர்ச்சி கண்டுள்ளது**

**தோழா... உன் கடிதம் கிடைத்தது.**

ஓட்டுக்காக மற்ற முதலாளித்துவ கட்சிகளைப் போலவே சாதியின் செல்வாக்கை அனுசரித்து ஆட்களை நிறுத்துகிறார்கள். 'மதம் ஒரு அபின்' என்ற மார்க்சின் தத்துவத்தை, ஓட்டுக்காக வேண்டி மக்களிடம் பரப்ப பயப்படுகிறார்கள். முதலாளி - அதிகாரவர்க்கங்களுடன் நிறைய விஷயங்களில் — பிரச்சனைகளில் ஒத்துப் போகிறார்கள். அலுவலக நிர்வாகத்திற்கு எதிராக தொழிலாளர்களின் உரிமைகளைக் கேட்டு உறுதியுடன் நின்றால் கட்டுப்படுத்துகிறார்கள்; தீவிரவாதி என்று முத்திரை குத்துகிறார்கள்... — இப்படி சி.பி.எம். கட்சியில் நமக்கு ஏற்பட்ட அனுபவங்களை பல கடிதங்கள் மூலம் பரிமாறிக் கொண்டுள்ளோம். ஆனால், இந்த கடிதம் என்னால் மறக்க முடியாத ஒன்று.

'நான் 17 வருட காலமாக கட்சிக்கு எவ்வளவு *விசுவாசமுள்ளவனாக* இருந்தேன் என்பதை நீ அறிவாய். இதுவரை கட்சி எனக்கு இழைத்தது துரோகம் மட்டுமே. கட்சியில் நான் கண்டதெல்லாம் துரோக செயல்கள் மட்டுமே. இனியும் கட்சியை நம்பிக் கொண்டிருக்க என் மனம் ஒப்பவில்லை. வெளியேறலாம் என்று முடிவு செய்துவிட்டேன். இதுபற்றி உனது அபிப்பிராயம் என்ன?' என்று நொந்து வெந்துபோய் எழுதிக் கேட்டிருந்த கடிதத்தைத்தான் குறிப்பிடுகிறேன்.

என் கருத்தை எழுதுவதற்கு முன், மார்க்சிய - லெனினிய 'பத்திரிக்கையொன்றில் நான் படித்ததை' அப்படியே உனக்கு இங்கு அறியத் தருகிறேன்.

● ● ●

ஆர்.எஸ்.எஸ். மதவெறி பாசிச அபாயம் நாட்டை அச்சுறுத்திக் கொண்டிருக்கிறது. 'வகுப்பு வாதத்திற்கு முற்றிலும் நாங்கள் எதிரானவர்கள்' என்று மார்தட்டிக் கொள்ளும் போலிக் கம்யூனிஸ்டுகளோ வாய் வீச்சுக்காரர்களாக பவனி வருகிறார்கள். தாங்கள் ஆளும் மாநிலங்களில் கூட அவர்களால் மதவெறிக் கும்பலை கட்டுப்படுத்த முடியவில்லை; வகுப்புவாதத்தை முறியடிக்க முடியவில்லை. இன்னும் சொல்லப் போனால் இவர்களின் போலியான வகுப்புவாத எதிர்ப்புகள் மதவெறிக் கும்பலுக்கு உரமாகத்தான் பயன்படுகின்றன.

கேரளாவில் அண்மையில் ஆர்.எஸ்.எஸ். கும்பலின் சாக்காக்கள் - உறுப்பினர்கள் ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் கூடி அணிவகுப்பு ஊர்வலம் நடத்தினர். அத்வானி ரதயாத்திரையின் பொழுது கேரளாவில் ஆர்.எஸ்.எஸ். கும்பல் வெறித்தனமாக பேசி மதக்கலவரத்தைத் தூண்டியது. பல முஸ்லீம்களை கொன்றது. அன்று முதல் வயிற்றில் நெருப்பைக் கட்டிக் கொண்டிருக்கும் முஸ்லீம்களுக்கு இந்த அணிவகுப்பு ஊர்வலம் மேலும் மிகுந்த அச்சத்தையே கொடுத்திருக்கிறது.

1967-ல் 189 உறுப்பினர்களையே கொண்டிருந்த ஆர்.எஸ்.எஸ். கும்பல் இன்று கேரளாவில் 3,200 உறுப்பினர்களைக் கொண்டிருக்கிறது. 2 லட்சத்திற்கும் மேற்பட்ட ஆதரவாளர்களையும் பெற்றிருக்கிறது. 'மார்க்சிஸ்டு'களின் பாரம்பரியமிக்க பகுதிகளாக விளங்கிய தலைச்சேரி, வதனப்பள்ளி, குட்டநாடு, நெய்யாட்டின்கரை முதலானவைகளில் இன்று ஆர்.எஸ்.எஸ். கும்பலே செல்வாக்குடன் திகழுகிறது. உடற்பயிற்சி வகுப்புகள், பிரார்த்தனைக் கூட்டங்கள் நடத்துவது, நீலக்கல் பிரச்சினை - சபரிமலை கோவில் அருகே கிறித்துவர்கள் சர்ச் கட்ட முயன்றதை ஆர்.எஸ்.எஸ். எதிர்த்து இயக்கம் எடுத்தது - பூஜைகள், திருவிழாக்களில் தலைமை தாங்குவது... முதலானவைகள் மூலமே இந்துக்களைக் கவர்ந்து, கேரளாவில் காங்கிரசிற்கு அடுத்த எதிரணியாக வளர்ந்து நிற்கிறது.

கேரளாவில் மட்டுமல்ல மேற்கு வங்கத்திலும் ஆர்.எஸ்.எஸ். கும்பலின் வளர்ச்சி எந்தவிதத்திலும் தடைபடவில்லை. 1988-ல் 300 உறுப்பினர்களைக் கொண்டிருந்த மே.வங்க ஆர்.எஸ்.எஸ்., சென்ற ஆண்டில் 1,225 உறுப்பினர்களை புதிதாக சேர்த்தது. எண்ணற்ற துணைக்கமிட்டிகளை - ஆதரவாளர்களைக் கொண்டு நிமிர்ந்து நிற்கிறது. மேல்சாதிக்காரர்கள் என்றல்லாமல் தலித் இளைஞர்களையும் கவர்ந்து உறுப்பினராக்கிக் கொண்டுள்ளது. ஏன் 'மார்க்சிஸ்டு'களின் சந்தர்ப்பவாத - துரோக நடைமுறையால் பாதிக்கப்பட்ட பலர் கட்சியை விட்டு வெளியேறி பா.ஜ.க.வில் சேர்ந்திருக்கிறார்கள் என்றால் பார்த்துக் கொள்ளுங்கள்.

மேற்கு வங்கத்தில் கங்கை சமவெளி பகுதியில் விசுவ இந்து பரிஷத் (வி.இ.ப.), பாரத் மாதா ராம் ஜானகி கோவிலை ஒரு பெரிய நிலத்தை வாங்கிப்போட்டு கட்டிவருகிறது. இதை எதிர்த்து, கட்ட அனுமதிக்காமல் 'மார்க்சிஸ்டு' கட்சியினர் போராடி வருகின்றனர். பல மோதல்களும் நடந்துள்ளன. சமீபத்தில் ராம் ஜானகி கோவில் கட்டு பணியை முடுக்கிவிட்டது, வி.இ.ப. கோவிலில் பல பூஜைகளை தொடர்ச்சியாக நடத்தி பக்தர்கள் கூட்டத்தை சோறுபோட்டு நிரந்தரமாக தங்கவைத்து கங்கை சமவெளியில் பரந்த - பெரிய அளவில் நிலத்தை ஆக்கிரமித்துக் கொண்டுள்ளது. சில சட்டவாதங்களையும் கேள்விகளையும் அடுக்கி கோவில் கட்டுவதை நியாயப்படுத்தி வரும் வி.இ.ப. மீது நடவடிக்கை எடுத்தால் இந்துக்களின் ஓட்டு போய்விடுமென கைகட்டி நிற்கிறது, மே.வ.அரசு.

கேரளாவிலுள்ள ஐயப்பன் கோவிலைப் போலவே, கங்கைச் சமவெளியிலுள்ள கபில்தேவ் கோவிலுக்கு டில்லி - அலகாபாத் முதலான பல இடங்களில் இருந்து பக்தர்கள் வந்து பொன்னும் பொருளும் அளித்து 'அருள் 'பெற்றுச் செல்கிறார்கள். இதுவல்லாமல் ஆனந்த் மார்க்கி எனும் இன்னொரு மதவெறி அமைப்பும் மே.வங்கத்தில் பல ஊர்களைத் தன் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்குமளவிற்கு செல்வாக்கு பெற்று விளங்குகிறது. சில மாதங்களுக்கு முன்பு இக்காட்டுமிராண்டிகள் மார்க்சின் 'மூலதனம்' புத்தகத்தை தீயிட்டு கொளுத்தி வெறிக் கூத்தாடினார்கள்.

இதில் வேடிக்கை என்னவென்றால் ஜோதிபாசு பரிவாரங்கள் ஆனந்த் மார்க்கி கும்பலைக் கண்டு அஞ்சி, நாளும் செத்துக் கொண்டிருக்கிறது. ஜோதிபாசு, உட்பட 10க்கும் மேற்பட்ட மே.வ. அமைச்சர்களின் பெயர்களைத் தங்கள் கொலைப்பட்டியலில் வைத்திருக்கிறது, ஆனந்த் மார்க்கி கும்பல். கொலை செய்வதற்கென 25 பேர் அடங்கிய இரகசியப் படை ஒன்றும் நியமித்துள்ளது. இதனால் ஜோதிபாசுவிற்கும் அவரது மகனுக்கும் குண்டு துளைக்காத கார்கள் இரண்டு அதிநவீன முறையில் இந்துஸ்தான் கம்பெனியில் அரசு செலவில் தயாரிக்கப்

ஆசிரியரும் வெளியிடுபவரும் : எஸ்.மதியழகன், 21 [illegible] தெரு, சைதாப்பேட்டை, சென்னை - 600 015.
அச்சிடுபவர் : நீட் பிரிண்டர்ஸ், 2 ஔலியா சாகிப் முதல் சந்து, எல்லிஸ் சாலை, சென்னை - 600 002.

படிப்பகம்

www.padippakam.com

பட்டு வருகிறது.

கேரளாவிலும், மே.வங்கத்திலும் அமோகமாக படர்ந்து வரும் ஆர்.எஸ்.எஸ். விஷச் செடியை கிள்ளி எறியக்கூட திராணியற்ற 'மார்க்சிஸ்டுகள்' மற்ற மாநிலங்களில் மதவெறிக் கும்பல் வளர்வதாக கூச்சல் போடுகிறார்கள்; மற்ற மாநில அரசுகளை கண்டிக்கிறார்கள். வகுப்புவாத எதிர்ப்பு சக்தியாக தம்மை சித்தரித்து அதையும் ஓட்டுப் பொறுக்குவதற்காகப் பயன்படுத்துகிறார்கள்! ஒன்றல்ல. இரண்டல்ல எத்தனையோ விசயங்களில்... இன்றல்ல, நேற்றல்ல என்றோ... சாயம் வெளுத்து கிழிந்து நிற்பவர்கள் தான் 'மார்க்சிஸ்டு'கள்.

கேரளாவில் குருவாயூர், திருச்சூர் தேவஸ்தான கமிட்டிகளில் நிர்வாகத்தைக் கைப்பற்ற குஸ்தியில் குதித்தவர்கள் இந்த 'மார்க்சிஸ்டு'கள். கேரளா கொடுங்கலூரில் நடக்கும் ஆபாசத் திருவிழாவை வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருப்பவர்கள் இவர்கள். மே.வங்கத்தில் துர்கா பூஜை, காளி பூஜை விழாக்காலங்களில் அரசு விடுமுறையளித்து கட்சி நன்கொடை புத்தகத்தை எடுத்துக் கொண்டு போய் பக்தர்களிடம் நன்கொடை வசூலித்தவர்கள்தான் இந்த 'மார்க்சிஸ்டு'கள். இமயமலைச் சாரலில் உள்ள ஒரு சாமியாரை குருவாக ஏற்றுக் கொண்ட தீவிர பக்தைதான் ஜோதிபாசுவின் மனைவி. எத்தனையோ மார்க்சிஸ்டு கட்சித் தலைவர்கள் கோயிலுக்குச் செல்வதும், சில திருவாழாக்களுக்கு மறைமுகமாக உதவி செய்வதும், தமது வீட்டில் பிற்போக்கு — சடங்கு சம்பிரதாய விழாக்களை கொண்டாடியதும் சாதாரணமாக பத்திரிக்கைகளில் அம்பலப்படுத்தப்பட்டன.

தான் ஆளும் மாநிலங்களில் உள்ள வகுப்புவாத எதிர்ப்பு சக்திகளுக்கு - ஜனநாயக சக்திகளுக்கு ஆதரவு தரக்கூட கிஞ்சித்தும் சிந்தித்தும் பார்க்காதவர்கள்தான் இந்த 'மார்க்சிஸ்டு'கள். வகுப்புவாதத்தை எதிர்க்கத் துணியாதது மட்டுமல்ல மதவெறி கும்பல் வளர்வதற்கே அடிப்படையாகவும் இருக்கிறார்கள் என்பதுதான் உண்மை.

● ● ●

கம்யூனிச விரோத - மதவெறி பாசிச கும்பலுடன் சி.பி.எம்-ன் வால்பிடிக்கும் போக்கை அம்பலப்படுத்திய இக்கட்டுரை என்னுள் ஒரு தாக்கத்தை ஏற்படுத்தியது. கிட்டத்தட்ட அனைத்து மாநிலங்களிலும் கணிசமான அணிகளைப் பெற்றுள்ள நமது கட்சி, மன்னிக்கவும் சி.பி.எம். கட்சி, ஆர்.எஸ்.எஸ். கும்பலுக்கு எதிரான இயக்கத்தை நாடு தழுவிய அளவில் வீச்சோடு எடுத்துச் சென்றிருந்தால் மதவெறியர்கள் வாலைச் சுருட்டிக் கொண்டிருப்பார்களே என்று கனவு கண்டேன். கட்சித் தலைமையின் நோக்கம் இதுவல்ல; பதவியும், ஓட்டும், ஆட்சியும்தான் என்பது பொறிதட்டியதும் நினைவுலகத்திற்கு வந்தேன். சீரழிந்து செல்லரித்துப் போய்விட்ட கட்சித் தலைமையிடமிருந்து மாற்றத்தை எதிர்பார்ப்பது செத்து சுடுகாட்டுக்குப்போன பிணம் உயிர் பெறாதா? என ஏங்கிக் கொண்டிருக்கும் மூடனின் செயல்போன்றதே என்பதை உணர்ந்ததும் வெட்கிப் போனேன். *இந்நிலையில்தான்* உன் கடிதம் கிடைக்கப்பெற்றேன். கட்சியை விட்டு வெளியேறுவதாக நீ எடுத்த முடிவு, என்னையும் வெகுவாக சிந்திக்கத் தூண்டியது. பலவாறாக சிந்தித்தும் இறுதியில் உன் முடிவே எனக்கும் சரி எனப்பட்டது.

ஆனால் வெளியேறியபின் என்ன செய்வது? என்னால் செயல்படாமல் வாளா இருக்க முடியாது. அநியாயத்தின் மீதுள்ள, மக்கள் விரோதிகள் மீதுள்ள வெறுப்புணர்வு என்னை ஏதாவது செய் என்று பிடரியில் அடித்து தள்ளுகிறது. எனவே, சரியான கம்யூனிச சிந்தாந்தமுள்ள, முரணில்லா நடைமுறையுள்ள அமைப்பில் என்னை இணைத்துக்கொள்ள புறப்பட்டு விட்டேன். நீயும் என்னோடு கைகொடுப்பாய் என்று நம்புகிறேன்.

அடுத்த கடிதத்தில் சந்திப்போம்.

**தோழமையுடன்**
**முரளிதரன்**

**கேரளாவில் ஆர்.எஸ்.எஸ்-ன் அணிவகுப்பு ஊர்வலம்; முறையாக பயிற்சியெடுத்த குண்டர்கள்.**



படிப்பகம்

www.padippakam.com



# இதுதான் இன்றைய இந்தியா

இதோ விதவிதமான கேக் - பன், - இனிப்பு வகைகளில் எதை மேயலாம் என திணறிக் கொண்டிருக்கும் மேட்டுக்குடி கும்பல்! பேல்பூரி, பௌ பஜ்ஜி, சவோரீஸ், பிசாஸ், பர்கெர்ஸ், பின்கீஸ் முதலான தென்னிந்திய, வடஇந்திய, மேற்கத்திய விரைவு உணவு வகைகளில்தான் இக்கும்பலின் அன்றாட பொழுதே விடிகிறது. சிலமணி நேரம் அலுவலக நாற்காலியை தேய்த்தாலும், வெல்வெட் மெத்தையில் தூங்கினாலும், புரண்டாலும், சினிமா - வீடியோ - பத்திரிக்கைப் படங்கள் பார்த்தாலும், உல்லாசமாக ஊர் சுற்றித் திரிந்தாலும் பொழுது போகவில்லையே என அலுத்துக் கொள்ளும் கும்பலுக்கு காத்திருக்கின்றன எண்ணற்ற விரைவு உணவு விடுதிகள். புத்தாண்டு, கிறிஸ்துமஸ், பிறந்தநாள் பார்ட்டி கொண்டாட 15 அடி அகல அரண்மனை வடிவ கேக், பூத்துக் குலுங்கும் பூந்தோட்ட வடிவ கேக்.. என வாங்கி ஐந்து நட்சத்திர களியாட்டங்களுடன் கூத்தடிக்கிறார்கள்.

இதோ, தங்கள் வாழ்வை பேப்பர் - குப்பைகளில் தேடிக் கொண்டிருக்கும் இச்சிறார்கள்தான் இவர்களின் குடும்பத்துக்கு சோறு போடுகிறார்கள் என்றால் உங்களால் நம்ப முடிகிறதா? 14 மணி நேரமாய் ஓடி ஓடி குப்பை பொறுக்கினாலும் ஒரு நாளைக்கு கிடைப்பது அதிகபட்சம் 3 ரூபாய்தான். சம்பாதிப்பதை வீட்டிற்குத் தான் தரமுடியும். தங்கள் சாப்பாட்டிற்கு? குப்பைத் தொட்டியில் நாயோடு போராடி எச்சில் சாப்பாடு தின்றால்தான்! சிறுவர் முதல் தள்ளாடும் வயதினர் வரை உழைத்தாலும் கால் வயிற்றுக்கே வழியில்லை என்பது தான் இந்தியாவில் உள்ள அநேக குடும்பங்களின் நிலை. வறுமையால் பசியால் மட்டுமல்ல; கால்வயிறு நிரப்பும் சத்தில்லாத சக்கை உணவினாலும் நோய்வாய்ப்பட்டு இறப்பவர்களின் எண்ணிக்கை ஏராளம். சத்தில்லா உணவால் மட்டும் இங்கு வருடத்துக்கு 5900 குழந்தைகள் இறக்கின்றன.

வறுமை, பசி, குழந்தைகள் உழைப்பை ஒழிக்கப் போவதாக ஒவ்வொரு ஆட்சியாளர்களும் கூச்சல் போடுகிறார்கள்!

மறுபுறமோ சோம்பேறி - மேட்டுக்குடி கும்பலுக்குரிய ஐந்து நட்சத்திர உணவு விடுதிகளை, ரெடிமேட் உணவு கலாச்சாரத்தை ஊக்குவிக்கிறார்கள்!

நாம் இன்னும் பசியோடும், நோயோடும்தான் போராடிக் கொண்டிருக்கப் போகிறோமா? இல்லை; இக்கும்பலுக்கு எதிராகப் போராடப் போகிறோமா?



படிப்பகம்